
ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்
ஆனி
2021
282ஆவது மலர்
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று.**

**பொருள் :** எல்லா அறங்களிலும் சிறந்தது கொல்லாமை; அதற்கு அடுத்தபடியில் சிறந்தது பொய் பேசாதிருத்தல். (323)

**நல்லா றெனப்படுவ தியாதெனில் யாதொன்றுங்**
**கொல்லாமை சூழும் நெறி.**

**பொருள் :** நல்ல ஒழுக்கு வழி என்று சொல்லப்படுவது யாதொரு உயிரையும் கொல்லாமையாகிய அறத்தினை நினைக்கும் வழியாகும். (324)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

## வேடிக்கை செய்கிறானே



### பல்லவி

வேடிக்கை செய்கிறானே - பரமபிதா
வேடிக்கை செய்கிறானே.

### அநுபல்லவி

வேடிக்கை செய்கிறான் கூட இருக்கிறான்
வேறாய் இருப்பதுபோற் பாசாங்கு பண்ணுகிறான்
(வேடி)

### சரணம்

பாடுகிறான் படிக்கிறான் பக்தரினம் சேர்கிறான்
நாடுகிறான் நன்மைதீமை நாமல்ல வென்கிறான்
ஓடும் இருநிதியும் ஒன்றாகக் காண்கிறான்
ஒன்றோ விரண்டோவென ஓதி யறியவொண்ணான்.
(வேடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 282



2021 ஆனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தமிழ் + சமயம் = வாழ்க்கை | திருமதி ந. பரமேஸ்வரி | 01 - 04 |
| திருவாசகம் | சு. அருளம்பலவனார் | 05 - 10 |
| சமய இலட்சியங்கள்... | பூ.க. இராசரத்தினம் | 11 - 15 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 16 - 18 |
| செழிப்பான மௌனம்தான்... | கே.எஸ். சிவஞானராஜா | 19 - 21 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 22 - 23 |
| இட்டுண்ணல் | கு. சிவபாலராஜா | 24 - 28 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 29 - 31 |
| மக்களின் மூன்று வகையினர் | கு. சோமசுந்தரம் | 32 - 34 |
| மனுநீதி, அரசநீதி, தெய்வநீதி... | மூ. சிவலிங்கம் | 35 - 36 |
| இறைபணி | செ. சிவபாதம் | 37 - 39 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 40 - 43 |
| இறைவனின் கருணை | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 44 - 46 |
| சங்க காலத்தில் சிவன் | செல்வி லோ. அலக்சியா | 47 - 49 |
| அருணகிரிநாதர் சுவாமிகளும்... | த. செல்வசோதி | 50 - 54 |
| கண்ணனைக் கரையேற்றிய... | ப. மகேந்திரதாசன் | 55 - 56 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3466

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்


Printed & Published By:

*Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.*

Selvasannithi, Thondaimanaru.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியானின் திருவடி வாழ்க



சந்நிதிக் கந்தனை சண்முக நாதனை
வந்தனை செய்மனமே – அவன்
மலரடி தொழு தினமே

எந்நிதி வேண்டினும் சந்நிதி யானைவேண்டில்
யாவையும் பெற்றிடலாம் – அவனை
என்றென்றும் எண்ணித் தொழலாம்

கார்த்திகையில் கார்த்திகைநாள் கந்தனைத் தொழுதேத்தினால்
நேர்த்தியா யெல்லாம் பெறலாம் – நாங்கள்
நினைத்தன யாவுந் தருவான்

வெள்ளிநாள் விரதத்தை வேண்டியே ஆண்டுதோறும்
புள்ளிமயிலோனைக் கும்பிட்டால் – நாங்கள்
போதுமென்ற மனத்தில் வாழலாம்

கந்தசஷ்டி விரதத்தை கட்டாயமாக நோற்றால்
மைந்தர்களைப் பெற்று வாழலாம் – மனத்தில்
மகிழ்ச்சி பொங்க வீற்றிருக்கலாம்

ஒழுக்க முடையவர்கள் வழுத்திச் சந்நிதியானை
உள்ளத்தில் வைத்துப் பூசித்தால் – அவன்
விழுப்பமாய் வாழ்வில் மகிழலாம்

அன்னக்கந் தனென்றுலகோர் சந்நிதிக் கந்தன்தனை
ஆலயம் நோக்கித் தொழுவார் – தொழுவோரை
மன்னவ ராக்கி விடுவான் அவன்

எங்கே சென்றிருந்தாலும் அங்கே அவனைக் கூவின்
தங்காமல் சென்றே ஏனென்பான் – அவர்கள்
இதயத்தை மலரச் செய்வான்

கந்தனை எந்தநாளும் வந்தனை செய்தவர்கள்
சிந்தை சிறக்க வாழ்வார் – அவரை
கருணையால் வாழ வைப்பான்.

–மாதுபெறும் புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

நாம் எல்லோரும் உயர்ந்திருக்க வேண்டும். நம் வாழ்வு உயர வேண்டும் என்று தான் கருதுகின்றோம். ஆனால் உயர்வு பெற்றவர் - பெறுகின்றவர் ஒரு சிலரேயாவார். அதற்கு நாம் உயர்வு அடையவேண்டும் என்று எண்ணுகின்றோமே யன்றி அதற்குரிய வழிவகைகளை நன்கு சிந்திக்கின்றோமில்லை. சிந்தித்து அதனைச் செயல் முறையில் கொண்டு வருகின்றோமில்லை.

இவ்வுலகில் பணத்தினால் உயர்ந்தவர்களும் படிப்பினால் உயர்ந்தவர்களும் உலகம் போற்றும் உயர்வு பெறுகின்றவர்களில்லை. ஆகவே, பணமும், படிப்பும், குலமும், பதவியும் நமக்கு நிச்சயமாக உயர்வைத் தரமாட்டா. எனவே, அவைகளை உயர்த்தும் முயற்சியுடன் நாம் நின்று விடக்கூடாது. நமது உள்ளம் உயர்ந்தால் நாம் உயர்வு பெறமுடியும் என்பதை,

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர் தம்
உள்ளத் தனைய(து) உயர்வு"

திருவள்ளுவரும் விவரிக்கின்றார்.

நம்மை நாமே சோதித்துப் பார்க்கும் வழக்கம் ஒவ்வொருவருக்கும் உண்டாக வேண்டும். இவ்வாறு அடிக்கடி நம்மை நாமே சோதிப்பதனாலே உள்ளத்திலே உள்ள மாசுக்கள் நீங்கி புனிதத்துடன் கூடிய அன்பு உண்டாகும். அன்பு நிறைந்த உள்ளம் படைத்தவனே உண்மையாக உயிர் வாழ்க்கையுடையவனாவான். நாம் ஒருவர்மீது பயன் கருதாமல் வைக்கும் அன்பு தூயது. அவ்வாறான அன்பு அருளாக, தியாகமாக மாறவேண்டும்.

பணத்தினால் படிப்பினால் உண்டாகாத பெருமையை தியாகத்தினால் அடைய முடியும். தனக்கென்று வாழ்கின்றவன் சிறியவன் பிறர்க்கென்று வாழ்கின்றவன் பெரியவன். தனது சொல் செயல் உடமை எல்லாம் பிறருக்கே அர்ப்பணஞ் செய்துவிட்டு புகழையும் புண்ணியத்தையும் கூட விரும்பாமல் தியாகம் புரிந்து வாழ்கின்றவர்களே நல்லவர்களாவர். அவர்கள் சொல்லிலும் செயலிலும் தன்னலம் இருக்காது.

"அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்"

என்று வடலூர் வள்ளல் பெருமானார் கடவுளிடம் வரம் வேண்டுகின்றார். இத்தகைய தியாகவுணர்ச்சியே மனிதனைப் புனிதனாக்கும். இவ்வாறான அன்புடன் கூடிய தியாகவுணர்ச்சி எல்லோரிடமும் இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

பூத்த பவளப் பொருப்பு ஒன்று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி - மூத்த 31

கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள் செய்து உள்நின்று
ஒரு மலத்தார்க்கு இன்பம் உதவிப் - பெருகியெழு 32

மூன்றவத்தை யும்கழற்றி முத்தருட னேஇருத்தி
ஆன்றபர முத்தி அடைவித்துத் - தோன்றவரும் 33

யானெனதென்று அற்றஇடமே திருவடியா
மோனபரா னந்தம் முடியாக - ஞானம் 34

திருஉருவா இச்சை செயலறிவு கண்ணா
அருளதுவே செங்கை அலரா - இருநிலமே 35

சந்நிதியா நிற்கும் தனிச்சுடரே, எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே - மின்னுருவம் 36

தோய்ந்த நவரத்நச் சுடர்மணியால் செய்தபைம்பொன்
வாய்த்த கிரண மணிமுடியும் - தேய்ந்தபிறைத் 37

துண்டம்இரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதல் பொட்டழகம் - விண்ட 38

பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டும் பூத்தாங்கு
அருள்பொழியும் கண்மலர் ஈராறும் - பருதி 39

பலவும் எழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும் - நிலவுமிழும் 40

புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்கும் திருமொழியும் - வின்மலிதோள் 41

வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத்தடிந்து
தெய்வருயிர் சிந்தும் திருமுகமும் - எவ்வுயிர்க்கும் 42

ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும் - சூழ்வோர் 43

வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும் - விடுத்தகலாப் 44

பாச இருள்துரந்து பல்கதிரில் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும் - நேசமுடன் 45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அ. பரமநாதன்**
(அளவெட்டி மத்தி)

**Dr க. சிவநேசன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)

**பொ. வியாகேஸ்**
(நிர்வாகி, பீக்கன் கல்வி நிறுவனம், உடுப்பிட்டி)

**ம. ஸ்ரீகாந்தன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி**
(விதானையார் வளவு, காங்கேசந்துறை)

**கந்தையா ஏகாம்பரம்**
(புறாடிலேன், அரியாலை)

**சி. நடேசமூர்த்தி J.P**
(வங்கி ஊழியர், அச்சுவேலி)

**சி. கதிரவேலு**
(தொண்டைமானாறு)

**ஐ. சிவநாதன்**
(மருதம், நெல்லியடி)

**திருமதி ஐடா**
(புலோலி தெற்கு, புலோலி)

**க. இராசதுரை**
(நீர்வேலி)

**வ.சி. கணபதிப்பிள்ளை**
(ஆவரங்கால், புத்தூர்)

**உரிமையாளர்**
(புதிய நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**Dr V. கணேசவேல்**
(சுந்தரவேல் வைத்தியசாலை, உரும்பராய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் / செயலாளர்
(அளவெட்டி ப.நோ.கூ.சங்கம், ஊழியர் தொழிற்சங்கம்)

**ஐ. கணேசலிங்கம்**
(யாழ்ப்பாணம்)

**ஆ. ஜெயக்குமாரன்**
(கப்பூது, கரவெட்டி)

**உரிமையாளர்**
(அம்பிகா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**கு. சோதிராசா**
(தொல்புரம் மேற்கு, சுழிபுரம்)

**ஆனந்தராசா மணிமாறன்**
(அராலி மத்தி, அராலி)

**உரிமையாளர்**
(பேபி போட்டோ, கந்தர்மடம்)

**T. மணிவண்ணன்**
(மிருசுவில்)

**மு. வைகுந்தநாதன்**
(இலங்கை வங்கி, அச்சுவேலி)

**S. விக்னேஸ்வரராசா**
(சுப்ராங் தொலைத்தொடர்பு சேவை, கதிரிப்பாய்)

**K. சுப்பிரமணியம்**
(கல்லூரி வீதி, இளவாலை)

**மு. இராசேந்திரா**
(தும்பளை, பருத்தித்துறை)

**பொ. வெங்கடேஸ்வரன்**
(வல்வெட்டித்துறை)

**ம. ஸ்ரீஸ்கந்தராசா**
(தேசிய சேமிப்பு வங்கி- சிறுப்பிட்டி, நீர்வேலி)

**இ. சரவணபவன்**
(அராலி மத்தி, வட்டுக்கோட்டை)

**சு. சிவனேசன்**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)

**செல்லத்துரை தங்கராசா**
(அன்னை இல்லம், உரும்பராய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வரன் தயாரூபன்
(கல்வியங்காடு)

ச. வடிவேலு
(ஊரெழு, சுண்ணாகம்)

திருமதி அகிலன் அருந்ததி
(போதராமடம், துன்னாலை)

க. பூலோகரட்ணம்
(அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்)

சு. கிருபானந்தன்
(கே.கே.எஸ் றோட், இணுவில்)

ச.சிவனேசன்
(கேணியடி, திருநெல்வேலி)

திருமதி அ. வினிதா
(நல்லூர், யாழ்ப்பாணம்)

கு. நித்தியானந்தன்
(பலாலிவீதி, யாழ்ப்பாணம்)

உரிமையாளர்
(அம்பிகாபதி பான்ஸிகுட்ஸ், யாழ்ப்பாணம்)

கோ. யோகலிங்கம்
(கிளை. முகாமையாளர், புத்தூர்)

சி. நவரெத்தினம்
(துவாரகை, கரணவாய்)

திருமதி அ. குணநாயகம்
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

ப. சிவராசா
(தூதாவளை, கரணவாய்)

திருமதி தங்கராசா ஈஸ்வரி
(கம்பர்மலை, வல்வெட்டித்துறை)

கு. லோகேந்திரன்
(மில் ஒழுங்கை, மல்லாகம்)

சோ. கருணாகரன்
(சுண்ணாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உ. செந்தூரன்**
(பிரதான வீதி, அச்சுவேலி)
**வை. கமலநாதன்**
(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ.சங்கம்)
**கு. சிவபாலராஜா**
(பொது சுகாதார பரிசோதகர், நல்லூர்)
**இ. கதிர்காமநாதன்**
(வங்களா ஒழுங்கை, மல்லாகம்)
**க. ஆனந்தராசா**
(நெல்லியடி, கரவெட்டி)
**இரா. அருட்செல்வம்**
(A.T.C. ரியூசன் சென்ரர், இணுவில்)
**சி. துரைராசா**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**செ. முருகதாஸ்**
(சாந்தை, பண்டத்தரிப்பு)
**திருமதி ப. பூமாவதி**
((முருகன் கோவில்வீதி, நெல்லியடி)
**வசந்தன் சிவஞானம்**
(அல்வாய் மேற்கு, திக்கம்)
**திருமதி திருத்தேவி ஏகாந்தன்**
(வல்வெட்டித்துறை)
**T. நாகராசா**
(நல்லூர் யாழ்ப்பாணம்)
**கா. தெட்சணாமூர்த்தி**
(பண்டத்தரிப்பு)
**திருமதி ப. இராஜேஸ்வரன்**
(கோண்டாவில்)
**பா. துவாரகன்**
(ஏழாலை தெற்கு, சுன்னாகம்)
**ம. பேரின்பநாயகி**
(நீர்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் + சமயம் = வாழ்க்கை

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

அன்பு நெறி தழைத்தோங்கி அமைதி எங்கும் நிலவ
இனிய தமிழ் இலங்கையிலே இலங்கித் திகழ
அன்பே சிவமென்னும் அறுசமயக் கொள்கையினை
கனிவுடனே யுரைப்பதற்குக் கணபதியே காப்பு

தமிழ் இனியது. இதனை இறைவனோடு சேர்ந்து சுவைக்கும்போது அதன் சுவையை எடுத்தியம்பவும் முடியுமோ? என்று கேட்டால் முடியும். எவ்வாறெனில் அதனைச் சுவைத்துச் சுவையை உணர்ந்து அனுபவித்தால்த்தான் முழுமையாக அறிந்து ஓரளவிற்காவது எடுத்துக் கூறமுடியும்.

தமிழ்ப்பாலை இறையுணர்வெனும் மத்தினால் கடைந்தெடுத்த அமிர்தமே தமிழ் வேதமாகிய திருமுறைகள். இத் திருமுறைகள் இறைவனால் இறைபக்தர்களாகிய இறை தூதர்கள் மூலம் மனித குலத்திற்குக் கூறப்பட்ட வாழ்க்கை நெறியாகும். மனிதன் இவ் உலகில் வாழ்வை முழுமையாக வாழ்ந்து அனுபவித்து வாழ்வதற்கு உதவுவது சமய நெறி. வாழ்வியல் நெறியை ஒழுங்குபடுத்த உதவுவது சமயநெறி. வாழ்வியல் நெறியை ஒழுங்குபடுத்த அதனை நாம் முதலில் திட்டமிட வேண்டும். இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குச் சமய நெறியை அறிந்திருக்க வேண்டும்.

திருமுறைகளைப் பொருளுணர்ந்து பக்தியுடனும் நம்பிக்கையுடனும் ஓதுவதன் மூலம் வாழ்வை முறையாக முழுமையாக வாழும் வழியை அறிந்துகொள்ளலாம். "அன்பே சிவம் அறிவே சக்தி, அதுவே நான்" என்பது எல்லோருக்குள்ளேயும் உள்ளுணர் வாயுள்ள "நான்" என்பதன் அர்த்தமாகும். அன்பை வெளிப்படுத்துவதற்குச் சக்தி அவசியம். வெளிப்படுத்தாத அன்பை அறியவோ உணரவோ முடியாது. அன்பு எங்கும் நிறைந்த எதிலும் உள்ள சிவமாகும். இதை அறிந்து கொள்ளும் அறிவைத் தருவது இறைவனின் அருட்சக்தியாகும். இறைவன் தானாகக் காட்டினாலொழிய இதனை அறிய முடியாது. மாயாசக்தியால் இறைவன் மறைக்கப்படும்போது உண்டாகும் அறிவு பௌதீக அறிவாகும். இவ்வறிவு நிலையானதல்ல. இது கணத்திற்குக் கணம் மாறுபடும் உலகாயத அறிவாகும். இவ்வறிவு நிறையறிவாகாது. இதனால் மனிதன் நிறைவை ஒருபோதும் அடைய முடியாது. இறைவனின் அருட்சக்தியாகிய யோக மாயை சுத்த சக்தியாகும். இது இறைவனை அறிய, உணர வைக்கும் ஆத்ம சக்தியாகும்.

மலங்கள் அற்றது சுத்தாத்மா. மலமாகிய முக்குணங்களும் அழியும்போது; தான் தானாய் விளங்குவது. இறைசக்தியாகிய சுத்த சக்தியாகும். இந்நிலையில் விழித்திருக்கும் அறிவு ஆன்ம அறிவாகும். ஆணவம், கன்மம், மாயை ஆகிய முப்புரங்களை எரித்தபின் எஞ்சியிருப்பது சிவபுரம். ஏனெனில் முப்புரங்களை எரித்தது சிவமேயாதலால் எஞ்சியிருப்பது சிவமாகின்றது. இதனால் மலமழிந்த சீவன் சிவமாகின்றது. மலத்தோடு கூடிய மாயாசக்தியால் மறைக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண மனிதர்கள் தவமிருந்து இறைவனிடம் கேட்டுப் பெறும் வரங்கள் சுயநலமானவை. நான் மூவுலகையும் ஆளவேண்டும்; யாராலும் அழியாமலிருக்க வேண்டும் என்று வரங்களைக் கேட்கின்றனர். கருணாமூர்த்தி ஆகிய சிவபெருமானும் தம் பிள்ளைகளின் கடும் தவத்திற்கு இரங்கி அவர்கள் கேட்ட வரத்தையளிக்கின்றார். தான் பெற்ற வரத்தின் சக்தியை நல்ல வழியில் பயன்படுத்தும் வரை அதன் சக்தியால் தான் நினைத்ததைச் சாதிக்கின்றான். ஆனால் இதைத் தீய வழியில் செலவழிக்கும்போது அதன் சக்தி குறைந்து கொண்டே போவதால் அவன் பெற்ற வரமே அவன் அழிவிற்குக் காரணம் ஆகின்றது.

இறைவனைச் சரணடைந்த மனிதனோ; உடல், பொருள், ஆவியாகிய முழுவதையும் (தன்னை) இறைவனுக்கே அர்ப்பணிப்பதன் மூலம் தன்னை முழுதும் இழந்து இறைவனின் கைப் பொம்மையாக இயங்குகின்றான். இத்தகைய மனிதனை எந்த வினையும் தீண்டாது. எந்தக் கர்மாவும் தொடராது. சுதந்திர புருஷனாக வாழ்கின்றான். உலகப் பொருட்களைக் கொண்டு இன்ப துன்பங்களை அனுபவித்துச் சலிப்படைந்த மனிதன்; அதிலிருந்து விடுபட வழிதெரியாமற் தவிக்கின்றான். இவ்வாறு தத்தளிக்கும்போதுதான் தன்னால் எதுவும் செய்ய முடியாதென்ற கையறு நிலையை அடைகின்றான். இந்நிலைதான் மனிதனை இறைவனிடம் சரணடைய வைக்கின்றது. இது இயற்கை விதியாகும். இயற்கையை (விதிப்படி) ஒழுங்கு முறைப்படி இயக்கும் இயக்குநர் இறைவன் ஆவார். இறைவனைத் தொடர்பு கொள்ள வேண்டுமெனின் அவரைச் சிந்திக்க வேண்டும். அவருடன் பேச வேண்டும்.

சிந்திப்பதற்கு ஒரு உருவம் வேண்டும், பேசுவதற்கு ஒரு மொழி வேண்டும். மனிதன் எவ்வளவு சிரத்தையுடன் முயற்சிக்கின்றானோ அவனுக்கு இறைவன் உள்ளிருந்தே தன் உருவைக் காட்டி தன்னைப்பற்றி அவன் கண்டறிந்ததை உலகிற்கு எடுத்துக்கூற அவன் அடியெடுத்துக் கொடுத்த மொழியுமே உலகினர்க்கு இறைவனைக் காட்ட உதவியது. இதற்கு உதாரணமே மூன்று வயதுக் குழந்தையான திருஞானசம்பந்தருக்கு அம்மையப்பராகக் காட்சி கொடுத்ததோடு, “தோடுடைய செவியன்” என்று அடியெடுத்துத் தான் கண்டதை உலகோர்க்கு வெளிப்படுத்தும் மொழி அறிவையும் கொடுத்துத் தன்னை உலகுக்கு அறிமுகப்படுத்தும் தூதுவராக இவரை இவ்வுலகிற்கு அளித்த இறைவன் சிவபெருமானே. இவ்வாறே திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் ஆகிய நால்வருக்கும் குருவாக இருந்து மானிட வாழ்வின் இலட்சியத்தை எடுத்துக் காட்டிய மொழி தமிழ் மொழியாகும்.

சிவபுராணத்தை முறையாகப் பொருள் உணர்ந்து படித்தால் இறைவனின் தத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம். சேக்கிழார் அருளிய பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், விஷ்ணு புராணம் போன்ற பதினெண் புராணங்கள் இறைவனின் மகிமைகளை எடுத்துக் கூறுவதோடு; எச் சந்தர்ப்பத்தில் எதைச் செய்ய வேண்டும், வாழ்வில் சிக்கல்கள் வரும்போது அவற்றை எவ்வாறு சுமுகமாகத் தீர்க்க வேண்டும் என்பதையும் எடுத்துக்கூறும் வாழ்வியல் நூல்களாக விளங்குகின்றன. பன்னிரண்டு திருமுறைகளிலும் இப்புராணச் செய்திகள் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. பன்னிரண்டு திருமுறைகளும் தமிழில் உள்ள பன்னிரண்டு உயிரெழுத்துக்களாகவும் பதினெண்புராணங்கள் பதினெட்டு மெய்யெழுத்துக்களாகவும் விளங்குகின்றன. இவற்றை விட இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களும் நம் வாழ்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிப்படுத்தும் சாதனங்களாக அமைந்துள் ளன. திருமந்திரம், திருக்குறள், ஆத்திசூடி, மூதுரை, உலகநீதி போன்ற நூல்களெல்லாம் தமிழில் அறுபத்து நான்கு கலைகளையும் உள்ளடக்கியதாகும். அரசியல், கட்டிடக் கலை, வானசாஸ்திரம், பூமிசாஸ்திரம், வைத் தியம், மனோதத்துவம், இல்லறம், துறவறம் ஆகிய இவையெல்லாமே இந்த அறுபத்து நான்கு கலைக்குள் அடங்குவதாகும். இவற்றை முதன்முதலில் இறைவனே குருவாக இருந்து மனிதனுக்கு அருளினார். அந்த மனிதர்கள் குருவாக இருந்து இவற்றை எழுத்து வடிவில் உலகுக்கு அளித்தனர். இவ்வாறே கலைகள் உலகிற் பரவி வளர்ந்தன. உலகைப் படைத்த இறைவன் இவ்வுலக மக்கள் வாழும் முறை யையும் இக்கலைகள் மூலம் அறியத் தந்தார். ஆகவே எல்லாக் கலைகளுக்கும் மூலமான குரு இறைவனே ஆவார். இறையருளின்றி நாம் எதையும் புரிந்துகொள்ளவோ செயலாக் கவோ முடியாது. எதை நாம் கற்க முயற்சித் தாலும் முதலில் இறையருளைப் பெற வேண் டும். அதற்காகவே எப்பாடத்தைத் தொடங்க முன்பும் முதலாவதாகக் கடவுள் வாழ்த்தை வைத்து நமக்குக் காட்டித்தந்துள்ளனர்.

உதாரணமாகத் திருக்குறளில் கடவுள் வாழ்த்தாக முதலாவது அதிகாரம் அமைந்து உள்ளது. ஔவையாரின் ஒவ்வொரு நீதி நூல்களிலும் முதலாவது பாட்டாகக் கடவுள் வாழ்த்து அமைந்திருப்பதைக் காணலாம். சோதிடம், வானசாஸ்திரம், மருத்துவம் போன்ற நூல்களில் முன்னுரையாக

**"நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலை ஞானம் கற்கும் சரக்கென்று காண்"**

என்பதைக் கடவுள் வாழ்த்தாகக் குறிப்பிட்டுள்ளார்.

இறையாசியோடு நாம் கற்கும் கல்வி நமக்குத் தக்க சமயத்தில் உதவுகின்றது. இதனால் இது சமயக்கல்வி என்று அழைக் கப்படுகின்றது. வாழ்வில் எவ்வாறான பிரச் சனைகள் குழப்பங்கள் ஏற்பட்டாலும் அதற்குச் சுமுகமாகத் தீர்வு காணும் வழிகள் புராண இதிகாசங்களில் கூறப்பட்டுள்ளன. வேதாகமங் கள், உபநிடதங்களின் கருத்துகளைக் கதை கள் மூலம் எடுத்துக்கூறிப் புரியவைப்பனவே புராணங்கள் இதிகாசங்களாகும். இவற்றின் மூலம் வாழ்க்கை நெறியை, வாழும் வழியை எளிதில் புரிந்து கொள்ளலாம். ஆகவே கல்வி, சமயம், வாழ்வு எல்லாம் ஒன்றோடொன்று தொடர்புபட்டிருப்பதை நாம் அறிந்து கொள்ள லாம். வாழும் வாழ்க்கை நெறியைத் தெளி வாக, முழுமையாக அறிந்து கொள்ளத் தமிழ் மொழி நமக்கு உதவுவதால் தமிழ், கல்வி, சமய வாழ்வு என்பவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்ததே மனித வாழ்வு ஆகும்.

**"தன்னிலமை மன்னுயிர்கள் சாரத் தரு சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்"**

என்ற திருவருட்பயன் அடியிலிருந்து இதனை நாம் அறிந்து விளங்கிக் கொள்ள லாம். நவீன தொழில்நுட்பக் கல்வியென்பது நாம் கற்றல் மூலம் அறிந்து கொண்டதை; எல்லா மக்களுடனும் பகிர்ந்து கொள்ளவும்; அதனால் ஏற்படும் சந்தேகங்களைப் போக்கிக் கொள்ள உதவுகின்ற ஒரு சாதனமாகும்.

நமது முன்னோர்கள் கல்வியைத் (கலையை) தெய்வமாகப் போற்றினார்கள். தாம் கற்ற கல்விக்கு விலைமதிக்க முடியாது என்பதை உணர்ந்தவர்கள் உலக நன்மைக் காக மக்களுக்கு இவற்றைக் கற்பித்தார்கள். இவர்கள் குருவாக மக்களால் மதிக்கப்பட்டார் கள். மாணவர்கள் தம்மாலியன்றதை விரும் பிக் கொடுப்பதைக் குரு தட்சணையாக ஏற் றுத் தமது வாழ்வை எளிமையாக அமைத் துக் கொண்டார்கள். இத்தகைய குருவினிடம் பயின்ற மாணவர்கள் கற்றதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துணர்ந்து வாழ்வில் அதனைக் கடைப் பிடித்துப் பண்புடைய ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து கல்விச் சமூகத்திற்கு மதிப்பையும் பெருமையையும் சேர்த்தார்கள். இதனை நாம் நினைவிற்கொண்டு இத்தகைய பெருமைக் குரிய கல்வியை உலகறியச் செய்து நல்ல தோர் உலகை அமைதியான வாழ்வை எல் லோரும் வாழ்வதற்குரிய பணியைச் செய்ய இன்றைய தொழிநுட்ப அறிவைப் பயன்படுத் திக் கொள்ள வேண்டும். இது ஒரு ஞான வேள்வியாகும். இதற்காக உலகில் வாழும் ஒவ்வோர் மனிதனும் தன்னாலான பங் களிப்பை மனமுவந்து அளிப்பதன் மூலம் இவ்வுலகை இயற்கை அழிவிலிருந்து பாது காத்து, நாமும் நம் எதிர்காலச் சந்ததியினரும் அமைதியான நிறைவான ஆரோக்கியமான வாழ்வை வாழச் செய்ய முயல்வோமாக.

எமது இந்த நல்ல முயற்சிக்கு எல் லாம் வல்ல இறைவனின் ஆசியை வேண்டிப் பிரார்த்திப்போம். முயற்சி திருவினையாக்கும் இந்த ஞான வேள்வியின் மூலம் அஞ்ஞான இருளில் மூழ்கிக் கிடக்கும் இவ்வுலகில் மெஞ் ஞான ஒளியைப் பிரகாசிக்கச் செய்வோம். முயற்சி தூய்மையானால் இறையருள் நிச் சயம் உண்டு.

**கல்விக்கழகு கசடற மொழிதல்**
**செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்**
**வீரத்திற்கழகு விவேகமுடன் செயற்படுதல்**

என்பதற்கிணங்க பேதமின்றி எல்லா மனிதர்களும் ஒன்றுபட்டு இதனைச் செய்ய எல்லாம் வல்ல இறைவன் இன்னருளைச் சுரப்பாராக.

**எல்லாம் அவன் செயலே**
**எல்லாம் அவன் பணியே.**

## சகல சக்தியும் நிறைந்த இடம் செல்வச் சந்நிதி தலம்

செல்வச் சந்நிதி வேலே - எமது
சஞ்சலம் தீர்த்திட விரைந்து வாவேன்
அல்லல் படாது மனம் அமைதி அடைந்திட
ஆண்டவனே உன் அருளைத் தாவேன் (செல்வச் சந்நிதி)

பற்பலரும் பல வேண்டித் துதிக்கும் இடம்
பல பேர்கள் மனத்தில் என்றும் உறைந்த தலம்
அற்புதங்கள் அதிசயங்கள் நடக்கும் தலம் - மெய்
அடியார்கள் அருள் வேண்டிக் கூடும் இடம். (செல்வச் சந்நிதி)

கற்றவரும் மற்றவரும் நாடும் தலம்
கவலைகளைத் தீர்த்துவிடப் போகும் இடம்
நற்றமிழ் தேன் திருமுறைகள், திருப்புகழ் பாடும் தலம்
நாமகளும் அருளோடு குடிகொண்டு இருக்குமிடம். (செல்வச் சந்நிதி)

சத்தியம் தர்மம் தவறாது நின்று காக்கும் தலம்
சந்நிதி சகல சக்திகளும் நிறைந்த இடம்
வித்தகரும் பாடிப்பாடி மகிழ்ந்து உருகும் தலம்
வீண்வம்பு பேசாது நாமும் பாடி மகிழும் இடம். (செல்வச் சந்நிதி)

*-சின்னப்பு தனபாலசிங்கம்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருவாசகம்

## நீத்தல் விண்ணப்பம்

### பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

133. குலங்களைந் தாய்களைந் தாயென்னைக் குற்றங்கொற் றச்சிலையாம்
விலங்கலெந் தாய்விட் டிடுதிகண் டாய்பொன்னின் மின்னு கொன்றை
அலங்கலந் தாமரை மேனியப் பாஒப்பி லாதவனே
மலங்களைந் தாற்சுழல் வன்றயி ரிற்பொரு மத்துறவே.

**ப-ரை:**

கொற்றம் சிலை ஆம் விலங்கல் எந்தாய்- முப்புரங்களையும் எரிக்கும் வெற்றியைத் தரும் வில்லாக வளைத்த மேரு மலையையுடைய எந்தையே, குலம் களைந்தாய்- எனது சுற்றப் பற்றினை நீக்கி, என்னை குற்றம் களைந்தாய்- என்னுடைய காம முதலிய குற்றங்களையும் நீக்கி ஆட்கொண்டருளினை; பொன்னின் மின்னு கொன்றை அலங்கல்- பொன்னைப்போல விளங்குகின்ற கொன்றை மலர் மாலையையுடைய தாமரை மேனி அப்பா- அழகிய செந்தாமரை போலும் திருமேனியையுடைய என் தந்தையே, ஒப்பு இல்லாதவனே- (உயர்வும்) ஒப்பும் இல்லாதவனே, மத்து உற பொரு தயிரின்- மத்து மிகப் பொருந்தி அலைத்தலால் கரைந்து சுழலும் தயிரைப்போல, மலங்கள் ஐந்தால் சுழல்வன்- நின் பிரிவினால் ஐந்து மலங்களால் சுழல்கின்றேனாயினேன், விட்டிடுதி கண்டாய்- என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

கொற்றச் சிலையாம் விலங்கள் எந்தாய், எனது சுற்றப்பற்றினை நீக்கி என்னுடைய குற்றங்களையும் நீக்கி ஆட்கொண்டருளினை. கொன்றை மலர் மாலையையுடைய செந்தாமரைப் போலுந் திருமேனியுடைய அப்பா, ஒப்பில்லாதவனே, மத்து உறப் பொரு தயிரினைப் போல மலங்கள் ஐந்தால் சுழல்கின்றேனாயினேன், என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

குலம்- மரபு. அது மரபிலுள்ளவரது பற்றினை உணர்த்தியது. குற்றம்- உட்பகைகள் ஆறு: அவை காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன. இங்ஙனம் கொள்வது வடநூல் மரபு. இவ்வறுவகைக் குற்றங்களையும் காமம், வெகுளி, மயக்கம் என மூன்றில் அடக்கிக் கூறுவர். ஆசிரியர் திருவள்ளுவர் (குறள் 360). எனவே, மயக்கத்துள் லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் நான்கும் அடங்கும் குலங் களைந்தாய், குற்றங் களைந்தாய் என்றதன் ஆற்றலால் குலங் களைந்து குற்றங் களைந்து ஆட்கொண்டருளினை என்பது போதரும்

*அழகு என்பது மனதுதானே தவிர முகமல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான்"
அம்: 20.

"கயன்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக் கலந்தாண்டலுமே
அயன் மாண் டருவினைச் சுற்றமுமாண்டு"
தெள்: 11

"இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்க ளத்தனையுந் துறந்தொழிந்தேன்"
பூவல்லி: 1.

"எந்தையெந் தாய்சுற்ற மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தமறுத் தென்னை யாண்டு கொண்ட பாண்டிப்பிரான்"
பூவல்லி: 2

என அடிகள் அருளியவாறுங் காண்க.

மின்னுதல்- விளங்குதல். கலி 101:27 நச். பொன்னின் மின்னு கொன்றை- பொன்னைப்போல விளங்குகின்ற கொன்றை மலர். "பொன்றிகழ் கொன்றைமாலை", "பொன்னங் கொன்றையும்" (நாவு 35:9, 144:6) எனத் தேவாரத்தும் வருவன காண்க. கொன்றை ஆகு பெயராய்ப் பூவை உணர்த்தியது. அலங்கல் எனப் பொதுப்படக் கூறினமையால் இறைவற்குரிய அடையாளப் பூவாகிய கொன்றை மலரான கண்ணியும் தாரும் மாலையும் கொள்ளப்படும்.

"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்" அக. கடவுள்

எனவும்,

"விரைக் கொன்றைக் கண்ணியன் காண்" தே. நாவு 289:1
"விரை கமழு மலர்க் கொன்றைத் தாரான்" தே. நாவு 286:8.
"வண்டு படு மலர்க் கொன்றை மாலையான் காண்" தே. நாவு 278:8.

என வருவனவும் காண்க.

தாமரை மேனி- செந்தாமரை போலும் திருமேனி. "செந்தாமரைக் காடனைய திருமேனி" (சத 26) எனவும், "சீருடைச் செங்கமலத்தில் திகழுருவாகிய செல்வன்" (குயிற் 9) எனவும், "பூந்தாமரை மேனி" (தே. நாவு 112:3) எனவும் வருவன காண்க. மேனி- நிறம்.

ஒப்பில்லாதவன்- தானே தனக்கு ஒப்பன்றி வேறு ஒப்பு இல்லாதவன்.

"இணையொருவர் தாமல் லால் யாரு மில்லார்" நாவு 296:7.
"தன்னியல்பார் மற்றொருவ ரில்லான் கண்டாய்" நாவு 252:8.

எனத் தேவாரத்தும்,

"இணையு மளவு மில்லா விறையோன்" (202)
"தாமே தமக்கொப்பு மற்றில்லவர்" (228)
"ஓரளவில்லா வொருவன்" (308)

எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க, ஒப்பில்லாதவனே என்றதன் ஆற்றலால் உயர்வில்லாதவனே என்பதும் கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலங்கள் ஐந்து என்பதனை "ஐம்மலத்தாரு மதித்த சகலத்தர்" (திருமந் 2218) எனத் திருமூலர் கூறுதலும் காண்க. மலங்கள் ஐந்தாவன: ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்பன.

"ஆணவ மாகும் அதீதமேன் மாயையும்
பூணுந் துரியஞ் சுழுத்தி பொய்க் காமியம்
பேணுங் கனவும் மாமாயை திரோதாயி
காணு நனவும் மலக்கலப் பாகுமே" (2220)

எனத் திருமந்திரத்தும்,

"மும்மல நெல்லி னுக்கு முளையொடு தவிடு உமிப்போல்
மம்மர் செய்து அணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று
பொய்மை செய்போக பந்த போத்திருத் துவங்கள் பண்ணும்
இம்மலம் மூன்றி னோடும் இருமலம் இசைப்பன் இன்னும்"
சூத். 2 செய் 86.

"மாயையின் காரி யத்தை மாயேய மலம தென்றும்
ஏயுமும் மலங்கள் தத்தந் தொழிலினை இயற்ற ஏவுந்
தூயவன் தனதோர் சத்தி திரோதான கரிய தென்றும்
ஆய்வர்இம் மலங்கள் ஐந்தும் அணுக்களை அணைந்து நிற்கும்"
சூத் 2 செய் 87.

"மலமாயை கன்மம் மாயே யந்திரோ தாயி மன்னி"
சூத் 2 செய் 88.

எனச் சிவஞான சித்தியாரிலும்,

"ஒன்றாகி யழிவின்றிப் பலவாற்றலுடைத்தாய்ச் செம்புறு மாசென்னத்
தொன்றாகி யருள்விளைவி னீங்கும் இருள்மலத்துடன் அத்தொடக்கு நீப்ப,
மின்றாவு முடலாதி நல்கு மிருமாயை யிருவினைகட்கேது,
வென்றோது கருமமிவை நிகழ்த்து திரோதமு மெனும் ஐவகைப் பாசத்தை"
தழுவக் குழைந்த 61.

எனக் காஞ்சி புராணத்தும் வருவன காண்க.

மலங்கள் ஐந்தனுள் ஆணவமலம் என்பது எண்ணிறந்த சக்திகளான எண்ணிறந்த உயிர்களிலுஞ் செம்பிற் களிம்புபோல அநாதியே விரவி நிற்ப தொன்றாய்க் கேவலத்தில் ஆவரசத்தியானுஞ் சகலத்தில் அதோ நியாமிகா சத்தியானும் அஞ்ஞான நிகழ்ச்சிக்குக் காரணமாய் நிற்பது. கன்மம் என்பது சதசத்தாற் செய்யப்படுதலின் அறம் பாவமென்று இரு வகைத்தாய் இரு வகைக்கும் உரிய பயன் தருதலாற் செயப்படுபொருளாகிய தனக்கு முதற் காரணம் உண்டென்பது காட்டி கான்மிய மலம் எனப்பட்டுப் பந்தமுறுத்துதலொப்புமையான் மும்மலத்துள் ஒன்றென எண்ணப்பட்டு நன்மை தீமையாகிய காரணவேதுவானும் இன்ப துன்பமாகிய காரியவேதுவானும் அனுமித்தறியுமாறு நிற்பது. மாயை என்பது நித்தமாகியும் அருவமாகியும் ஒன்றாகியும் உலகம் உண்டாவதற்கு ஓர் வித்தாகியும் சடமாகியும் எங்கும் வியாபகமாகியும் முதல்வனுக்கோர் பரிக்கிரக சத்தியாகியும் புவன போகமும் தனுகரணமுமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்களின் பொருட்டு விரிந்ததோர் மலமாகியும் உள்ள இலக்கணங்களையுடையது. மாயேயம் என்பது மாயையின் காரியங்களாகும். திரோதாயி என்பது உயிரோடு ஒன்றி நின்று மலங்களைத் தொழிற்படுத்தி பாகம் வருவிக்கும் மறைப்புச் சத்தி.

மத்துற பொரு தயிரின் மலங்கள் ஐந்தாற் சுழல்வன் என்றது, மத்து மிகப் பொருந்தி அலைத்தலான் கரைந்து சுழலும் தயிரைப்போல ஆணவ முதலிய மலங்கள் ஐந்தால் சுழல்கின்றேனாயினேன் என்றவாறு. சுழல்வன் என்னும் எதிர்காலமுற்று சுழல்கின்றேனாயினேன் என நிகழ்காலப் பொருளில் வந்தது. இறைவனால் ஆட்கொள்ளப்பட்டும் சுழலும் நிலைமை உண்டாயது. அவ்விறைவன் பிரிவின் நீட்சி பற்றியாகும். உற என்பது மிகுதிப் பொருளில் வந்த உரிச்சொல்.

இதன்கண், "மலங்களைந்தாற் சுழல்வன்", "விட்டிடுதி கண்டாய்" என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுதல் காண்க. 29.

**134. மத்துறு தண்டயி ரிற்புலன் றீக்கது வக்கலங்கி**
**வித்துறு வேனை விடுதிகண் டாய்வெண் டலைமிலைச்சிக்**
**கொத்துறு போது மிலைந்து குடர்நெடு மாலைசுற்றித்**
**தத்துறு நீறுடன் ஆரச்செஞ் சாந்தணி சச்சையனே.**

**ப-ரை:**

வெண் தலை மிலைச்சி- வெண்மையான நகுசிரம் என்னும் தலையினைத் தலையிற் சூடி, கொத்து உறு போது மிலைந்து- கொத்துக்களாகப் பொருந்திய கொன்றை மலர் மாலையைச் சூடி, குடர்நெடு மாலை சுற்றி- குடர் போலும் நெடிய மாலையைக் கழுத்தைச் சுற்றித் தொங்க அணிந்து, தத்து உறு நீறுடன்- பரவப் பூசிய திருநீற்றுடன், செம் ஆர சாந்து அணி சச்சையனே- செஞ்சந்தனக் குழம்பை அணிந்த ஆராய்ந்தறியப்படுபவனே, புலன் தீ கதுவ- ஐம்புலன்களாகிய நெருப்புப் பற்றி வெதுப்ப, மத்து உறு தண் தயிரிற் கலங்கி- மத்துப் பொருந்திய குளிர்ந்த தயிரைப் போலக் கலங்கி, வித்து உறுவேனை விடுதி கண்டாய்- பிறவிக்கு வித்தாக உறுவேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

வெண்டலை மாலை மிலைச்சி கொத்தாகப் பொருந்திய கொன்றை மலர் மாலையைச் சூடிக் குடர்நெடு மாலையைச் சுற்றித் தொங்க அணிந்து நீறுடன் செஞ்சாந்து அணிந்த சச்சையனே, புலன்களாகிய தீக்கதுவ மத்துறு தண் தயிரிற் கலங்கி பிறவிக்கு வித்தாக உறுவேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

புலன் றீக்கதுவ மத்துறு தண்டயிரிற் கலங்கி எனக் கூட்டுக.

"சித்தத்துள் ஐவர் தீய செய்வினை பலவுஞ் செய்ய
மத்துறு தயிரே போல மறுகுமென் னுள்ளந் தானும்"
நாவு 52:9.

"பொத்தார் குரம்பை புகுந்தைவர் நாளும் புகலழிப்ப
மத்தார் தயிரேபோன் மறுகுமென் சிந்தை" நாவு 96:3.

*எப்போதும் தன்னம்பிக்கையை மட்டும் இழக்கக்கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தேவாரத்தும் வருவன காண்க. புலனைத் தீ என்றது தீ தான் பற்றிய பொருளை எரிப்பதுபோலப் புலன் உயிரைக் கெடுத்தலின், "ஐவர் சங்கடம் பலவுஞ் செய்ய அழிப்பனவாய் வாழமாட்டேன்" "ஐவர் வந்து முறைமுறை செய்ய அற்றுநான் அலைந்து போனேன்" (தே. நாவு. 52:2; 52:8) என வருவன காண்க. கதுவ- பற்றி அழிக்க எனினுமமையும். வித்துறுவேனை என்றது பிறவிக்கு வித்தாக உறுவேனை என்றவாறு. பிறவிக்கு வித்தாதல் புலன்களின் வழிச்சென்று கீழ்மையடைதல்.

வெண்டலை- நகுசிரம். மிலைச்சி- தலையிற் சூடி. "நலம் பெறுசென்னி நாமுற மிலைச்சி" குறிஞ்சி 116. தாருகாவனத்து இருடிகள் தாம் செய்த ஆபிசார வேள்வியினின்றும் தோன்றிய வெண்டலையை இறைவனைக் கொல்லுமாறு ஏவுதலும் இறைவன் அதனைப் பிடித்து சடைமுடிக்கண் வைத்து நின் செயலினைப் புரிதி யென்றனன். அவ்வளவில் அதன் ஆற்றல் கெட்டது. இதனை,

"சீற்றமா முனிவர் வேள்வித் தீயில் வெண்டலைதான் ஒன்று
தோற்றியே யுலகம் யாவுந் தொலைய நக்கெழுந்த தன்றே"
தத்சி 108.

"நக்கெழு சிரத்தை யன்னார் நாதன்மேல் விடுத்த லோடும்
அக்கணம் அணுக வற்றால் அகிலம திறவா வண்ணம்
முக்கணன் அருள்செய் தந்த முண்டமுண் டகக்கை பற்றிச்
செக்கரஞ் சடைமேற் கொண்டுன் செயலினைப் புரிதி யென்றான்"
தத்சி 109.

எனக் கந்தபுராணத்து வருதலுமறிக,

"பின்றாழ் சடைமேல் நகுவெண்டலையா" ஞான 71:4.
"செங்க ணரவு நகுவெண்டலையு முகிழ் வெண்டிங்களுந்
தங்கு சடையன்" ஞான 74:5.
"புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல்பாய
நனையுஞ் சடைமே லோர் நகுவெகுண்டலை சூடி" ஞான 84:1.
"நகுவெண்டலையர் நளிர் கங்கை தங்கு முடியர்" நாவு 8:7.
"கிடந்த நீர்ச் சடைமிசைப் பிறையு மேங்கவே
கிடந்து தானகுதலைக் கெடில வாணரே" நாவு 10:8.
"நஞ்சமா நாக நகுசிர மாலை நகுவெண்டலை
தஞ்சமா வாழுஞ் சரக்கறையோ வென்தனி நெஞ்சமே" நாவு 111:4.

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

கொத்துறு போது மிலைந்து- கொத்தாகப் பொருந்திய கொன்றை மாலையைச் சூடி. "கொத்தினிற் பொலி கொன்றை கொடுக்கிலே" "கொந்தணவு நறுங்கொன்றை மாலையானை" (நாவு 152:2; 259:10) தேவாரத்தும், "கொந்தார் நறுங் கொன்றைக் கூத்தன்" (276) எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க. மிலைதல்- சூடுதல். "பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்" (44) என்னும் திருமுருகாற்றுப்படையினுங் காண்க.

*மனமானது பொருளை அதிகம் நேசித்தால் நிம்மதி போய்விடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்திலணிந்து மார்பில் தொங்கும் மாலை குடர்போல் நெடிதாயிருத்தலின் "குடர் நெடுமாலை என்றார். இனி, சர்வ சங்கார காரணன் தானே என்பது போதர தன்னால் அழிக்கப்பட்ட தேவத் தலைவர்களது எலும்பு தலையோடுகளை அணிவது போலக் குடரை யும் அணிந்தான் எனக் கொள்ளுதலுமொன்று. தத்துதல்- பாய்தல், பரத்தல். "தத்தரி நெடுங் கட்டன் மகள்" (மணி 2:7) என்புழியும் இப் பொருட்டாதல் காண்க. தத்துறு நீறு- பரவப் பூசப்பட்ட நீறு, "மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்", "வெயிலாயசோதி விளங்கு நீற்றர்" (நாவு 5:1; 264:1) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. இனி, தத்து நீறு- ஒளி வீசுகின்ற நீறுமாம். "ஒளி நீறு பூசும் ஒருவர் போலும்" (தே. நாவு. 302:4) என வருதலுங் காண்க. தத்துதல்- வீசுதல் சீவக 144 நச்.

ஆரச் செஞ்சாந்து- செஞ்சந்தனக் குழம்பு. "தாளி யறுகினர் சந்தனச் சாந்தினர்" (அன்னைப் 8) என அடிகள் அருளியமையுங் காண்க. நீறுடன் செஞ்சாந்தணிந்தமை இறை வனது மாதொரு கூறனாம் நிலையை குறிப்பிற் புலப்படுதலும் காண்க. "பால் வெள்ளை நீறும் பசுஞ் சாந்தும் பைங்கிளியுஞ், சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக் கோலமே நோக்கி" (கோத் 18) என வருதலும் காண்க.

சர்ச்சை என்னும் வடமொழிச் சொல் சச்சையெனத் திரிந்தது சர்ச்சை- ஆராய்வு. சர்ச்சையன்- ஆராய்ந்தறியப்படுபவன். இறை வன் கருதலளவையால் ஒருவாறு ஆராய்ந் தறியப்படுபவனாதலால் சர்ச்சையன் என்றார். "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா சுடர் விட்டுள னெங்கள் சோதி" (தே. 312:5) எனத் திருஞானசம்பந்த சுவாமிகளும் அருளியமையான் இறைவனை ஆராய்ந்தறிவதற்கு ஏதுக்களும் எடுத்த மொழி யுமுடைய கருதலளவை உரியதாதலை எதிர் மறை முகத்தால் அங்கீகரித்தருளினார் "அருளினால் ஆகமத்தே அறியலாம் அளவி னாலும் தெருள லாஞ்சிவனை" (சிவஞான சித்தி பாயிரம்) என வருதலுங் காண்க.

வெண்டலை மிலைச்சுதல் கொத்துறு போது மிலைதல், குடர்நெடுமாலை சுற்றுதல், தத்துறு நீறு அணிதல், ஆரச் செஞ் சாந் தணிதல். என்று ஈண்டுக் கூறப்பட்டனவன்றிப் புலித்தோலுடுத்தல், ஆனைத் தோல் போர்த் தல், பாம்பணிதல், நஞ்சுண்டல், பிறையணி தல், கபாலத்தைக் கோடல், எலும்பணிதல், தலையோட்டு மாலை தரித்தல், மயிர்க்கயிறு தரித்தல் முதலாக இறைவனிடத்து நிகழ்வன வாக அறியும் இயல்புகளை ஆராயும்போது இறைவன் விருப்பு வெறுப்பில்லாதவன் என்பதும், முழு முதலாயுள்ளவன் என்பதும், சர்வ வல்லமையுள்ளவன் என்பதுவும், பேரருளாளன் என்பதும் முதலான இயல்புகள் புலப்படுதலின் ஆராய்ந்தறியப்படுவோன் எனப் பொருள் கொள்ளுதல் பொருந்துமாறு காண்க. சச்சையன் என்பதற்கு இங்ஙனம் பொருள் கொள்ளாமல் சத்து, சத்தா என்றாகி ஆவீறு ஐயாகும் என்னும் விதிபற்றி சத்தை என்றாகிப் பின்னர், வித்தை விச்சையென்று வந்தது போல சச்சையெனப் பொருள் கூறுதல் பெரி தும் இடர்ப்பாடுடைத்தாகும். சச்சையன் என் பதற்கு உண்மைப் பொருளாயுள்ளவன் என்பது பொருள்.

இதன்கண், புலன் தீக்கதுவக் கலங்கி வித்துறுவேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடா தொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய இலட்சியங்கள் நாகரிகத்தின் அத்திபாரக் கற்களாகும்

– திரு வடகோவை பூ.க. இராசரத்தினம் அவர்கள் –

முன்னோர்களுடைய பண்பாடுகளை, நாட்டின் நாகரிகங்களை அறிவதற்குரிய கருவிகளாக அமைந்த சின்னங்களில் சிறந்தன வாய் அமைந்தவை ஆலயங்களிலுள்ள சிற்பங்களும் ஓவியங்களுமாகும். பற்றற்ற அறிவுத் தாகமே, ஒழுங்கான வாழ்வே நாகரிகத்தின் உயிர்நாடி தன்நம்பிக்கை உடையவர்கட்கு எல்லா வாசல்களும் திறந்து வரவேற்பு அளிக்கும் என்பது பொதுவான நியதி. சமயம் தனி மனிதனுக்கு நம்பிக்கையையும் தைரியத்தையும் கொடுத்து வருகின்றது என்பதை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது.

இந்து சமயம் முப்பரிமாண ரீதியில் பயனுடையது. சமயம், இலட்சியங்களை உருவாக்க ஒரு மகத்தான சக்தி. நாட்டு மக்கள் மத்தியில் இலட்சியம் துடிக்கும்போது மொத்த சக்தி கூடுகிறது. இற்றைக்கு 6000 ஆண்டுகளுக்கு முன்பு முந்தியதாக, யாவராலும் ஒப்புக்கொள்ளப்படும் மொகஞ்சதாரோ, ஹரப்பா புதைபொருட்களிற் கண்டுபிடிக்கப் பட்டுள்ள சிவலிங்கங்கள், மும்முகன், முருகன், இடபம், நந்தி, சித்திர எழுத்துக்களும் சிவநெறி தழைத்தோங்கி முதிர்ந்திருந்ததென்பதை கண்ணூடாகக் காட்டுகின்றன.

மனிதன் தன்னிடத்தில் மறைந்து கிடக்கும் சக்தியை உணர்ந்து கொண்டு காரியத்தில் ஈடுபடும்பொழுது அவனால் சாதிக்க முடியாத காரியம் எதுவும் இருக்க முடியாது என்பது புலனாகிறது. நம்பிக்கை நலமாகத் தொழிற்பட மனிதன் தனது இலட்சியங்களுக்கேற்ப தொழில்புரிகிறான். எண்ணங்களே செயற்படச் செய்கின்றன. சமயக் கோட்பாடுகள் பலகோணச் சிந்தனையில் பலவாய்ப் பர்ணமித்து செவிநுகர் கனிகளாய் பலருக்கும் பயன்படவும் உதவி வருகின்றன. பல்வேறு பட்ட படிநிலைகளில் இருக்கின்ற மனித சமுதாயத்தின் பல்வேறுபட்ட உணர்வு நிலைகளின் கூட்டுறவே இந்து சமயம்.

நாயன்மார்களில் ஒருவரான சேக்கிழார் "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" எனக் குறிப்பிட்டுள்ளார். சைவ சமயமும் அதன் தனித்தன்மை வாய்ந்த பண்பாட்டு மரபுகளும் இலங்கையின் சமூக அமைப்பிலும் இலக்கியங்களிலும் கலைகளிலும் சமய வழிபாடுகளிலும் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தி வருகின்றன. சைவ சமயக் கோட்பாடுகள், இலட்சியங்கள் சமுதாயத்தில் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தவும், மனித உரிமைகளை நிலைநிறுத்தவும் வழிகாட்டிகளாக அமைகின்றன. மூதாதையோர் இந்த உண்மையை உணர்ந்து அரும் பெரும் சொத்தாகப் பேணிவந்தமை பற்றிச் சான்றுகள் உண்டு.

இலங்கையில் வாழும் சைவமக்கள், மனித குலத்தை, ஐக்கியத்தை, அமைதியை, சமாதானத்தை நிலைபெறச்செய்ய ஆன்மீகத்தை தமது சமுதாயத்தின் ஊடாக தேவையான, பொருத்தமான அறிவையும் விளக்கத்தையும் வழங்கும் நோக்கில் பல வழிமுறைகளை, செயற்திட்டங்களைக் கைக்கொண்டு வருகின்றார்கள். இறைவனுடைய அன்பையும் உண்மையான அமைதியையும் அனுபவிக்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதே காலத்தின் தேவையாகும். சமயத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி பல நாடுகளிலும் உள்ள அறிஞர்கள் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள். சமயம் இல்லாவிட்டால் மனிதர்கள் உணர்ச்சியற்ற இயந்திரங்களாகிவிடுவார்கள். ஒரு ஆங்கிலக் கவிஞரின் கருத்தை அறிவது நன்று. "இவ்வுலகில் பல சமயங்கள் இருந்தும் துஷ்டத்தன்மையும் நிலவுகிறது. சமயங்கள் இல்லாதிருந்தால் என்ன நடைபெறும் என்பதை ஊகித்துப் பார்க்க வேண்டும்". சமயம் தனி மனிதனுக்கு நம்பிக்கையையும் தைரியத்தையும் வழங்குகின்றது. அறிவையும், நேசத்தையும், பல் பரிமாண ரீதியில் சிந்திக்கவும் பகுப்பாய்வு செய்யவும் வாழ்வுக்கு தேவையான குண இயல்புகளை, தலைமைத்துவ பண்புகளை, சகிப்பு தன்மையை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை, நீதி நியாயங்களுக்கு கட்டுப்படுதல், உண்மையின் மகத்துவத்தை பேணிக் காத்தல், அறம் செய்ய விரும்புதல் போன்ற உன்னதமான இலட்சியங்களை விளங்கி வாழ்வாங்கு வாழ வழிவகுக்கும் தன்மை சமயத்துக்கு தாராளமாக உண்டு என்பதை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

மேற்கூறப்பட்ட குணஇயல்புகள் வாழ்க்கையில் ஒரு பிடிப்பை, உற்சாகத்தை சமூகப் பற்றை, சேவை மனப்பான்மையை, ஆளுமை விருத்தியை, பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்திய வண்ணம் உள்ளன என்பதை யாவரும் அறிவார்கள். "ஓர் இலட்சியத்தின் வெற்றி அதன் முடிவிலல்ல, அடையும் வழியில்தான் தங்கி இருக்கிறது" எனக் காந்தி கூறியுள்ளார். இதனால்த்தான் சமய இலட்சியங்கள் நாகரிகத்தின் அத்திபாரக் கற்கள் என சான்றோர் கூறுகிறார்கள். நாகரிகம் என்னும் சொல்லுக்கு "கண்கோட்டம்" என்பது பொருள் எனத் திருக்குறள் விளக்கம் தருகின்றது. பல கலை வல்லோரை நாகரிகர் எனச் சீவகசிந்தாமணி குறிக்கிறது. இலக்கியம், சமயம், கலை முதலியவற்றை இரசிப்பவர்களை "நாகரிகர்" என்றும் விபரிக்கப்படுகின்றது. சுருங்கக்கூறின் சமயம், கல்வி, கலையுணர்வு, கண்ணோட்டம், மரியாதை போன்றவற்றின் திரட்சியே நாகரிகம் எனக் கூறலாம்.

முற்காலத்தில் அரசர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைத்தது. சமய இலட்சியங்களின் துணையுடன், அன்பு, ஒழுக்கம், பக்தி, பாசம், அருள் போன்ற நற்பண்புகளைப் பெற்று நலமாக மக்கள் வாழ்ந்தார்கள். சமயம், சமூக, கலாசார தொடர்புடையதாக இருப்பதால் சமூகத்தில் அதன் மகிமையை, அழியாவரமாகப் பெற்றுள்ளது. மனிதன் நம்பிக்கையால், தியானத்தால், உயரப் பறக்கிறான். அறிவு எட்ட முடியாததை தியானம் சுலபமாக எட்டிவிடுகிறது என்பது யதார்த்தமாகும். எத் தொழில் புரிபவரும் சமயத்தை நுகர்வதில் தடையேதுமில்லை. ஆனால் பல் கோணத்தில் சிந்திக்க, கிரகிக்க ஆற்றல் வேண்டும். தெய்வத்துக்கு முன் யாவரும் சமம் என்பதை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலட்சியமாகும். வெறுப்புக்கு இடமில்லை. சமத்துவ உணர்வு, வேற்றுமையில் ஒற்றுமை, கருணை, காருணியம், வாழ், வாழவிடு, நீதியும் உண்மையும் நிறைந்த வாழ்வு போன்ற இலட்சியங்கள் இணையற்றவை. பன்முகப் பண்பாட்டினை உலகின் அழகாகவும், பலமாகவும் போற்றிப் பேணும் மனப்பான்மை மனிதனிடத்து வளர்க்கப்பட வேண்டும், இதனைச் சமயம் செய்ய வேண்டும்.

வாழ்க்கையின் அர்த்தத்தைச் சொல்வது தத்துவம். வாழ்க்கையை, அதன் இரசனையைச் சொல்வது சமயமும் இலக்கியமும். சமயம் தானாக விளக்குவதில்லை.

*நினைப்பதைச் சரியாக நினைத்தால் நடப்பது சரியாகவே நடக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் விளக்கத்தைப் பெற முயல வேண்டும். மனித முன்னேற்றத்தின் படிக்கற்களாக சமய இலட்சியங்கள் அமைவதால் முயற்சி உடையோர் இகழ்ச்சியடையமாட்டார்கள். சிறு படகைக் கொண்டு பெருங்கடலைக் கடக்க முயல்வது போன்ற முயற்சி பயனற்றது.

ஆன்மீகம் நாம் சிறப்பாக வாழ, வெற்றி வாகை சூட உதவிய வண்ணம் உள்ளது என்பது தாரக மந்திரமாக இருக்க வேண்டும். ஆன்மீக நற்பண்புகளை இலட்சியங்களை சமயம் வழங்கிய வண்ணம் உள்ளது. மனதை தூய்மைப்படுத்துபவை இவை நமது புராணம் காலவரையறைக்கு உட்படாத, என்றும் இருக்கின்ற ஒன்று எனலாம். "புராண" என்றால் மிகப் பழமையானது அறிவு புகட்டும் கதைகளைக் கொண்டவை. புராணங்கள் உணர்த்தும் தத்துவம் என்னவெனில் படைப்பில் உள்ள அனைத்தும் பிரமன் எனப்படும் ஒரே பேருண்மையிலிருந்துதான் தோன்றின என்பதாகும். பல வருடங்களுக்கு முன் வெறும் கற்பனைக் கதை என்று கருதப்பட்ட நிகழ்ச்சிகள் இன்று விஞ்ஞான உண்மை ஆகிவிட்டன. புதிய கண்டு பிடிப்புக்களுக்கு வழிவகுக்கின்றன. தொழிலாளர்களுக்கு தண்டனை கொடுத்தால் அது எல்லோரையும் பாதிக்கும் என சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்த கதை உரைக்கிறது. இன்று தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகிறது. வேறொரு கதையில் ஒரு ஆண் குளத்தில் குளிக்கச் செல்கிறான் பெண்ணாக மாறுகிறான். தற்காலத்திலும் அறுவைச் சிகிச்சையின் உதவியால் ஒரு ஆண் பெண்ணாக மாற முடியும். விரும்பினால் ஆண் பெண்ணைப்போல நடந்து கொள்ளலாம்.

வேதங்கள், உபநிடதங்கள் மற்றும் புராணங்கள் ஆகிய மூன்றின் நோக்கமும் இலட்சியமும் எங்கும் நிறைந்துள்ள அந்தப் பேருண்மையை அளிப்பதுதான். மதம் என்பது ஒரு நம்பிக்கைதான் எங்களால் காண முடியாததொன்றை ஏற்றுக்கொள்கிறோம். விஞ்ஞானி இருக்கின்ற ஒரு பொருளின் உதவியோடுதான் வேறொரு பொருளைக் கண்டு பிடிக்கிறான். இந்திய முன்னாள் சனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் தரும் விளக்கத்தை விளங்கினால் நன்று. "மிகக் குறைவான விஞ்ஞான அறிவு உங்களை மதத்திலிருந்து விலக்கி அழைத்துச்சென்று விடுகிறது. ஆனால் முழுமையான விஞ்ஞான அறிவோ உங்களை மதத்திற்கு வெகு அருகில் அழைத்துச் செல்கிறது" உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி ஜன்ஸ்ரீனின் கருத்தை உள்வாங்குவது பொருத்தமாகும்.

**"விஞ்ஞானம் கலவாத சமயம் நொண்டி,**
**சமயம் கலவாத விஞ்ஞானம் குருடு".**

மனம் சக்திவாய்ந்தது. நன்கு பயன்படுத்த வேண்டும். மனம் மின் இயக்கி போன்றது. இயக்கினால்த்தான் மின் வலு உற்பத்தி ஆகிறது. சமயத்தை இயக்கும் சக்திவாய்ந்த பொருளாக மனதைக் கருதலாம். சமயம் இலட்சியங்களை உருவாக்க உதவும் ஒரு மகத்தான சக்தி. ஒரு நாட்டு மக்கள், ஒவ்வொருவரிடையே அந்த இலட்சியம் துடிக்கும் போது மொத்த சக்தி கூடுகிறது. சமய இலட்சியங்கள் எம்மை விழிக்கச் செய்கிறது. நல்லவற்றைச் சிந்தித்து, நன்மை பயக்கக் கூடியவற்றை ஆர்வத்துடன் செய்யத் தூண்டுகிறது. "நாம் எதைப்பற்றிச் சிந்திக்கிறோமோ அதுவாகிவிடுகிறோம்" என உபநிடதம் கூறுகிறது. சுருங்கக்கூறின் சமயம் ஒருவனுடைய சிந்திக்கும் ஆற்றலை, உளதொடுவானத்தை விஸ்தரிக்க உதவுகின்றது. சமயம் இயற்கையோடு இணைந்தது. தாவரங்கள், பறவைகள் விலங்குகள் இணைந்து வாழ்வதை நாம் அறிவோம். எந்த ஒரு மிருகமும் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்தைச் சேர்ந்த பிறிதொரு விலங்கைக் கொல்லமாட்டாது ஆனால், உண்மையிலும் உண்மை, மனிதன் மனிதனைக் கொலை செய்கிறான். எனவே மனிதன் சிந்திக்க வேண்டும். மனித மனம் ஒரு பறக்கும் பரசூட் கருவி போன்றது. விரித்தால்தான் பயன். சிந்தனை பற்றி முகமது நபி விளக்கியுள்ளார். "ஒரு வினாடி சிந்தனை இறைவணக்கத்தை விடச் சிறந்தது" சிந்தனையிலிருந்து பகுத்தறிவு பிறக்கிறது. சிந்தனை இல்லையென்றால் உலக இயக்கமே இருக்காது. புத்தபிரான் கூறுவதையும் கேட்டால் நன்று. "ஒருவன் தன்னுள் மறைந்து கிடப்பதை வெளிப்படுத்துவதனாலேயே தன்னை மேலும் சிறப்புடையவனாக்குகின்றான்". நமக்குள்ளே ஒரு மகத்தான சக்தியிருக்கிறது. அந்த சக்தியின் பெயர் உள் உணர்வு. அந்த உள் உணர்வு பல விடயங்களைத் தெரிவித்த வண்ணம் உள்ளது. உள வளர்ச்சி, ஊட்டலில் தங்கி உள்ளது என்பதையும் மனதிற் கொள்ள வேண்டும்.

தேவை எல்லோருக்கும் உண்டு. தேவையை ஆசையாக்கும்போது, ஆசையை இலட்சியமாக்கும்போது, இலட்சியத்துடன் மன உறுதியையும் உழைப்பையும் சேர்க்கும் போது வெற்றி நமதே. ஆசை பற்றி அறிஞர் ஜேம்ஸ் அலென் தரும் கருத்து பிரயோசனமாகும். "ஆசை பிறக்கும்போதே அதைச் செய்துமுடிக்கும் திறனும், அந்த மானுடத்தில் அடங்கியிருப்பதால் அந்த ஆசை பிறந்தது" எனவே, நாம் மனதை நன்கு பயன்படுத்த வேண்டும். எமது மனம் நல்லவற்றைச் சிந்திக்கும்போது, தொழுதுண்டு, பின்செல்ல வேண்டும். மனம் உணர்ச்சியோடு தொடர்புடையது. உணர்ச்சி உற்சாகமாக இருக்கும்போது, நம் உடம்பிலுள்ள ஒவ்வொரு கலமும், புது இரத்தம் பெற துடிப்போடு இயங்குகிறது. நமது இலட்சியத்துக்கு கைகொடுக்கிறது. எனவே நாம் திட்டங்களை, பொறிமுறைகளை வகுக்க வேண்டும். நம் வாழ்வை மறைந்து கிடக்கும் ஒரு நியாயம் ஓட்டிச் செல்கிறது என ஓர் அறிஞர் கூறியுள்ளார்.

ஒரு தர்மம், ஒரு நியாயம் நம் வாழ்வில் அடித்தளமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இதை ஒரு சிலரே புரிந்து கொள்கிறார்கள். வெகு சிலரே அதை உணர்ந்து செயற்பட்டு, தங்கள் வாழ்க்கைத் தர்மத்தினால், தாங்களும் சூழ்ந்திருக்கும் உலகமும் பயன் பெறச் செய்கிறார்கள். இதை மகாத்மா காந்தி, கென்றிபோட், தெரெசா அம்மையார் புரிந்து கொண்டனர். பலர் பயனடைகிறார்கள். இலட்சிய விளைவுகள் உந்தித் தள்ளுகின்றன என மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். இலட்சியத்தின் விளைவுக்கு, நம்மனதில் ஏற்படுத்தும் கற்பனைகள் நம்மை எதையும் செய்யத் தூண்டுகிறது. எதையும் சமாளிக்கும் தைரியத்தை அளிக்கிறது.

ஒவ்வொரு சமயமும் ஏதோ ஒரு வகையில் அதனுடைய தத்துவம் சார்ந்த கல்விச் சிந்தனையை கைப்பற்றுமாறு மனிதர்களைப் பணிக்கின்றன. அதனை முறையாக பின்பற்றும் பட்சத்தில் கல்வி ஆன்மீகரீதியாக சரியான பாதையை அடைய முடியும் என்பதாகும். இலட்சியங்கள் எங்களை விழிக்கச் செய்து நல்லவற்றைச் செய்யத் தூண்டுகிறது. "ஒரு நொடிப் பொழுதாவது மிக உயர்ந்த செயலுக்கு தன் வாழ்வைப் பயன்படுத்தியவன் எவனோ, அவனே உண்மையில் வாழ்வின் பயனைக் கண்டவன்" கீதை. நமது வாழ்க்கை ஒரு திடமான இலட்சியத்தை கொண்டிருக்காவிட்டால் நமது சக்தியெல்லாம் பற்பல வீண் எண்ணங்களால் சிதறடிக்கப்படும். எனவே தான் சமயம் ஒரு கட்டாய பாடமாக எமது நாட்டில், பாடசாலைக் கல்வியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடத்திட்டத்தில், சேர்க்கப்பட்டுள்ளது. ஏனெனில், வாழ்க்கையை வளமுள்ளதாக ஆக்கிக் கொள்ளும் முயற்சியின் பெயர்தான் கல்வி.

அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு வகைப் பெறுபேறுகளைப் பெறும் உபாயங்களை சமய நூல்கள் எடுத்துரைக்கின்றன. இன்றைய உலகில் வேற்றுமைகள் வளர்வதால் சமாதானத்தைக் கூடப் பாதுகாக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுள்ளது. உண்மை உலகை ஆட்சிபுரிய சமய இலட்சியங்களை நாம் நாடிய வண்ணம் இருக்க வேண்டியுள்ளது. இது காலத்தின் தேவையாகும்.

## சுயநலமின்றி இருந்தால் இறையருள் கிட்டும்

இந்த உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களும், இறைவனாலேயே படைக்கப்பட்டதாக ஆன்மிகம் சொல்கிறது. அவற்றின் குணாதிசயங்களைப் பொறுத்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. மனிதர்களும்கூட தங்களின் குணநலன்களைப் பொறுத்தே நல்லவர்கள், கெட்டவர்கள் என்று வகைப்படுத்தப்படுகின்றனர். அதன்படியே அவர்களுக்கு பலன்களும் கிடைத்து வருகின்றன. தேவர்களைப் போன்று அனைத்து சக்தியோடும் படைக்கப்பட்டவர்களே அசுரர்கள். ஆனால் அவர்களின் குணநலன்களால் அவர்கள் இறைவனின் அருளைப் பெற முடியவில்லை. அதை அவர்கள் உணர்ந்துகொள்ளவும் இல்லை.

ஒருமுறை அசுரர்கள் அனைவரும் சேர்ந்து பிரம்மதேவரைச் சந்தித்தனர். "பிரம்மதேவா! தேவர்களைப்போலவே, எங்களையும் நீங்கள்தான் படைத்தீர்கள். ஆனால் எங்களைச் சரிவரக் கவனிக்காமல், தேவர்களின் முன்னேற்றத்திலேயே கவனம் செலுத்துகிறீர்கள். இது பாரபட்சமானது இல்லையா?" என்றனர்.

பிரம்மா அவர்களிடம், "நான் எல்லாவற்றையும் ஒன்றுபோல்தான் படைக்கிறேன். ஒருவரது முன்னேற்றம் என்பது அவரது முயற்சி, ஒற்றுமையைப் பொறுத்துத்தான் இருக்கிறது" என்றார்.

அசுரர்கள் அதை நம்ப மறுக்கவே, இதை நிருபிப்பதாக பிரம்மதேவர் கூறினார். ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்த பிரம்மா, தேவர்களையும் அசுரர்களையும் வரவழைத்தார். பெரிய பெரிய லட்டுகள் தயாராக இருந்தன. அசுரர்களை அழைத்து, "நீங்கள் எல்லாரும் இந்த லட்டைச் சாப்பிடலாம். ஆனால், முழங்கையை மடக்காமல் சாப்பிட வேண்டும்" என்று நிபந்தனை விதித்தார். அசுரர்கள் எவ்வளவோ முயற்சித்தும், கையை மடக்காமல் சாப்பிட முடியவில்லை. லட்டுகள் அனைத்தும் கீழே விழுந்து நொறுங்கிப் போயின.

அடுத்ததாக தேவர்களை அழைத்த பிரம்மதேவன், அவர்களையும் அதே முறைப்படி சாப்பிடச் சொன்னார். அவர்கள் லட்டை எடுத்தார்கள். நீட்டிய கையை மடக்காமல், எதிரே இருந்தவர் வாயில் ஒருவருக்கொருவர் ஊட்டிக் கொண்டார்கள். நிம்மதியாக சாப்பிட்டு முடித்தார்கள்.

இப்போது பிரம்மா அசுரர்களை அழைத்துச் சொன்னார், "பார்த்தீர்களா! மற்றவர்களுக்கு உதவும் குணம்தான், அவர்களின் வயிறு நிறையக் காரணமாக இருந்தது. நீங்கள் சுயநலவாதிகளாக இருந்ததால் எதுவுமே கிடைக்கவில்லை. சுயநலத்தைவிட்டு பிறர்நலம் காப்பவர்களுக்கே இறைவனின் அருள் கிடைக்கும்" என்றார்.

*எதிர்பார்ப்பைக் குறைத்துக் கொண்டால் ஏமாற்றம் ஒன்றும் பெரிதாக இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளையாடற் புராண வசனம்

(முப்பத்தேழாவது)

## சோழனை மடுவில் வீட்டிய படலம்

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

இராசேந்திர பாண்டியன் சிவபதத்தை அடைந்தான். அவன் குமாரன் இராசேச பாண்டியன்; அவன் குமாரன் இராசகம்பீரன்; அவன் குமாரன் பாண்டிவமிசதீபன்; அவன் குமாரன் புரந்தரசித்து; அவன் குமாரன் பாண்டி வமிசபதாகன்; அவன் குமாரன் சுந்தரேச பாதசேகரன்.

அந்தச் சுந்தரேச பாதசேகர பாண்டியன், சோமசுந்தரக் கடவுளுக்கு மெய்யன்பனாகி அரசியற்று நாளிலே, பத்துத் தேரும் நூறு யானையும் ஆயிரங் குதிரையும் பதினாயிரங் காலாளும் மாத்திரமே வைத்துக் கொண்டு, இத்துணைச் சேனைக்கு மாத்திரஞ் சிறிது பொருள் செலவிட்டு, எஞ்சிய பொருள்கள் எல்லாவற்றையுஞ் சோமசுந்தரக் கடவுளுக்கே செலுத்துவானாயினான். சிவபெருமானுக்கு முடி கண்டிகை முதலிய இரத்தினாபரணங்களைச் செய்வித்தான். கோபுரம் மாடம் முதலியவைகளை இரத்தினம் இழைக்கப் பெற்ற பொன்னினால் வேய்வித்தான்.

ஆயிரம் பரிக்கோர் சேவகன் என்னுஞ் சோழனொருவன், பாண்டியனுடைய சேனைச் சுருக்கத்தை அறிந்து, அவனை வெல்லக் கருதி, எண்ணில்லாத சேனைகளோடும் மதுரையை நோக்கிச் சென்றான். அவன் வரவை அறிந்த பாண்டியன், திருக்கோயிலை அடைந்து, சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "எம்பெருமானே! உமது வலிமையினால் இப் பூமியை அரசாளுந் தமியேனுடைய வலிமையை நோக்காது, என் சேனையின் சிறுமையை நோக்கிச், சோழன் தனது வலிமையினால் எனது தேசத்தைக் கொள்ள நினைந்தான் போலும். சோழன் அளவில்லாத சேனையோடு வந்து இந் நகரத்தை அணுகினான்" என்று விண்ணப்பஞ் செய்தான். அப்பொழுது சிவபிரானது திருவருளினாலே, ஆகாயத்தினின்றும், "பாண்டியனே! நீயே வெற்றியடையும்படி நாம் வந்து யுத்தஞ் செய்வோம்" என்று ஓரசரீரி வாக்குத் தோன்றிற்று.

அதுகேட்ட பாண்டியன் மனமகிழ்ந்து, புறம் போந்து, குதிரையேறிக்கொண்டு, சேனை சூழச், சோழனது சேனையை எதிர்த்தான். சோழன் சேனைக்குப் பாண்டியன் சேனை, சிவபிரானது திருவருளினாலே, ஒரு பெருங் கடல் போலத் தோன்றிற்று. சோமசுந்தரக் கடவுள் ஒரு வேட வடிவங்கொண்டு, ஒரு வேலாயுதத்தை ஏந்திச், சோழனுக்கு ஒரு யமன் போலப் பாண்டியன் சேனைக்கு முன் போய் நின்றார். சோழன் அதுகண்டு, "கோபித்து, "ஆயிரங் குதிரைக்கோர் சேவகன் வந்தேன்" என்று சொல்லிக்கொண்டு போய் எதிர்த்தான். வேட வடிவங்கொண்ட சிவபெருமான், "ஆயிரங் குதிரைக்கோர் சேவகன் நீயன்றோ? அனந்தங் குதிரைக்கு ஒற்றைச் சேவகன் நானே" என்று சொல்லிச் சோழனெதிரே போய்க் கோபத்தோடு வேலாயுதத்தைச் சுழற்றினார். அது கண்ட சோழன், "நாம் இனி இவ் வேலாயுதத்தினால் இறப்பதற்கையமில்லை" என்று நினைந்து, குதிரையோடும் ஓடினான். உடனே வேட வடிவங் கொண்ட சிவபெருமான்

*தவறே செய்யாத மனிதன் இல்லை. தவறை திருத்திக்கொள்ளாதவன் மனிதனே இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்தருளினார். பாண்டியன் சோழனைத் துரத்திக்கொண்டு போனான். சோழன் திரும்பிப் பார்த்து, வேடுவனைக் காணாமையால் அச்சந் தீர்ந்து, பாண்டியனை மதுரை வரையும் துரத் திக்கொண்டு வந்தான். பாண்டியன் ஓடி வந்து, மதுரை நகரத்துக்கு மேற்குத் திக்கிலுள்ள மிக ஆழமாகிய ஒரு மடுவில் விழச், சோழ னும் தன் குதிரையுடன் அதில் வீழ்ந்தான். பாண்டியன் சிவபிரானது திருவருளினாலே எழுந்துவிட்டான். சோழன் அதிலாழ்ந்து இறந்து விட்டான். பாண்டியன் சோழனுடைய படைகளையும், குதிரைகளையும், யானை களையும், தேர்களையும் ஆபரணமும் வஸ் திரமும் வைத்த பெட்டிகளையுங் கைக் கொண்டு, சோமசுந்தரக் கடவுள் அணியத் தக்க ஆபரணங்களையும் வஸ்திரங்களையுங் கொடுத்து அவருடைய திருவருட் கடலுக்கு அன்பு நதியெனப் பெருகி, வீற்றிருந்தான்.

## (முப்பத்தெட்டாவது)
## (உலவாக் கோட்டை யருளிய படலம்)

மதுரைத் திருநகரத்தில் வேளாளர் குலத்திலே அடியார்க்கு நல்லான் எனப் பெயர் பெற்ற ஒருவன் இருந்தான். அவன் சிவபத்தி அடியார் பத்திகளில் மிகச் சிறந் தவன். அவன் மனைவி பெயர் தருமசீலை. அவள் கற்பின் மிகச் சிறந்தவள்; தன் நாய கனுக்கு முத்தி நெறியிலே தனித்துணை போன்றவள்.

அவ்வடியார்க்கு நல்லான் வேளாண்மை செய்து, அதனால் வரும் ஊதியத்திலே அர சனுக்குக் கொடுக்கற்பாலதாகிய இறையைக் கொடுத்து, எஞ்சிய பொருளெல்லாம், தன் குறிப்புவழியொழுகுந் தருமசீலையுடைய துணையினாலே, மாகேசுர பூசையிற் செல விடுவானாயினான். மணற் கேணியைத் தோண் டுந்தோறும் ஊற்றுநீர் பெருகுதல் போல, மாகேசுர பூசையிற் செலவிடுந்தோறும் அவ னுக்குச் செல்வம் பெருகிற்று. அவன் தன் செல்வங் குன்றினுந் தன் மாகேசுர பூசை நியமங் குன்றான் என்னும் உண்மையைப் பிறருக்கு உணர்த்தும் பொருட்டுச், சோம சுந்தரக் கடவுள், அவனுக்கு விளைவில்லா தொழியும் வண்ணஞ் செய்தருளினார். விளைவு குன்றிய வழியும், அதனைச் சிறிதும் பாராட்டாது, அவ் வேளாளன் கடன் வாங்கி, மாகேசுர பூசையை முன்போலச் சிறப்பாக நடத்தினான். பின்பு அவனுக்குக் கடனுங் கிடையா வண்ணஞ் சிவபெருமான் தடை செய்தருளினார்.

சிவனடியாரைத் திருவமுது செய்வித் தன்றிப் போசனஞ் செய்யாமையை நியம மாகக் கொண்ட அவ்வடியார்க்கு நல்லான், தன்னுயிர்த் துணையாகிய பத்தினியோடும் பட்டினியிருந்து, கவலையினால் உள்ளமும் உடம்பும் புழுங்கப்பட்டான். பின்பு, "இனி நிலையில்லாத பசியினால் உடம்பினாற் பெறும் பயன் யாது? இனி என் மனைவியோடு போய்ச் சோமசுந்தரக் கடவுளுக்கு இதனை விண்ணப்பஞ் செய்து விட்டு உயிர் துறத்தலே துணிவு" என்று துணிந்துகொண்டு, தன் மனைவியோடு சென்று, திருக்கோயிலை அடைந்து, சிவபிரானை வணங்கி, "எம் பெரு மானே! அடியேனுக்கு வயல் விளைவு குன்றி யது. அதனால் உமதடியார் பூசைக்கு இடையூறு விளைந்தது. கடனுங்கிடைக்கின் றிலது; கடன் தரவல்லாரைக் காட்டியருளும் காட்டா தொழிவீராயின், இப்பொழுதே பிரா ணனை விடுவேன்" என்று தன் மனைவியோடு விண்ணப்பஞ் செய்தான். அப்பொழுது ஆகா யத்திினின்றும், "அன்பனே! அஞ்சாதே. நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைக்கு உன் வீட்டிலே வெண்மையாகிய அரிசிக்கோட்டையொன்று வைத்தோம். அது எப்பொழுதும் எடுக்குந்தோறுஞ் சிறிதுங் குறை வில்லாதிருக்கும். நீ நாடோறும் பூசை செய்து, அதில் வேண்டியதை எடுத்து, மாகேசுர பூசை செய்து, யாவருக்கும் அன்னதானம் முதலிய நானாவித தருமங்களுஞ் செய்துகொண்டு, வாழ்ந்திருக்கக் கடவாய். முத்தியையும் பின்பு தருவேம்" என்று ஓரசரீரி வாக்குத் தோன்றிற்று. அடியார்க்கு நல்லான், அதுகேட்டு, மன மகிழ்ந்து, வியந்து, மனையாளோடு வீட்டிற் சென்று, அங்கிருந்த உலவாக் கோட்டை யைத் தனது முன்னைத் தவப்பேறு போலக் கண்டான். அவன் அவ்வுலவாக் கோட்டையை நாடோறும் புட்பஞ் சந்தனந் தூபந் தீபம் என்பவைகளினாலே பூசை செய்து, அன்னத் தின் பொருட்டும் அதற்கு வேண்டுங் கருவி களின் பொருட்டும் வேண்டுமட்டும் எடுத்துச், சிவனடியார், வித்துவான்கள், பிராமணர்கள், பிதிரர்கள், தேவர்கள், விருந்தினர்கள், சுற்றத் தார்கள், சினேகிதர்கள் முதலிய யாவர் பொருட்டுஞ் செலவு செய்துகொண்டு குபேரன் போல நெடுங்காலம் வாழ்ந்திருந்தான். பின்பு, தன் பன்னியோடுஞ் சுற்றத்தாரோடுஞ் சிவ சாருப்பியம் பெற்றுச் சிவலோகத்தில் வாழ்ந் திருந்தான்.

---

"நாளும் கிழமையும் நலிந்தோர்க்கு இல்லை" என்பதை சிலர் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். அதாவது வசதியில்லாதவர்கள் தங்கள் வீட்டு விஷேசங் களுக்கு நாள் பார்க்க வேண்டியதில்லை என்று பொருளுரைக்கின்றார்கள். அது தவறு. உதாரணமாக வீட்டில் நாங்கள் கடைப்பிடிக்கின்ற வைதீக முறைகளையோ மற்ற நியமங்களையோ வெளியிடங்களிலே கடைப்பிடிக்க முடியாது. வீட்டிலே காலையிலே சிவபூஜை முடித்துத் தான் காப்பி அருந்துபவராக இருந்தாலும் மருத்துவமனையில் சிகிச்சைக்காகத் தங்கியிருக்கும் போது சிவபூஜை செய்ய வேண்டிய நியதியை தர்மசாஸ்திரம் சற்று தளர்த்துகிறது. அதேபோன்று அனுஷ்டானம் பண்ணி உணவருந்தும் பழக்கமுள்ளவர்களும் பயணத்தின் போது அனுஷ்டானமின்றி உணவைக் கையில் வைத்துக்கொண்டு உணவருந்துவது தவறில்லை என்று ஆசாரத்தை சற்று சுருக்கி விடுகிறது சாஸ்திரம். விரத நேரங் களில் உணவைத் துறக்கவேண்டும் என்று சாஸ்திரம் கூறினாலும், கஷ்டப்பட்டுக் கூலிவேலை செய்பவருக்கும், ஏழ்மையில் தவிப்பவனுக்கும், கள்ளம் கபடமற்ற அப்பாவிகளுக்கும், தமது கடமையை ஆற்றவே அல்லற்படும் மக்களுக்கும் இந்த நாள், கிழமை, விரதம், உபவாசம் போன்றவை தேவையில்லை. அவர்களது கடமை உணர்வு ஒன்றே இவற்றின் பலனை அவர்களுக்கு அளித்துவிடும். இவ் வாறு நலிந்தோர்க்கு இதுபோன்ற விதி விலக்குகளை தர்மசாஸ்திரம் அளிப்பதைத் தான் "நாளும் கிழமையும் நலிந்தோர்க்கு இல்லை" என்று கூறுவார்கள்.

தெரிய வேண்டியன தெரியவும், துணிய வேண்டியன துணியவும், செய்ய வேண்டியன செய்யவும் தடையாக இருப்பவை எதுவும் தீமையேயாம்.

*உழைப்பு வறுமையை மட்டும் விரட்டவில்லை, தீமையையும் விரட்டுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செழிப்பான மௌனம்தான் ஆன்மாவுக்கான சிறந்த மேய்ச்சல் நிலமாகும்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

மனித வாழ்க்கையின் உச்சமென உணரப்படும் பக்குவநிலையே மௌனம் எனப்படும் பேரானந்த நிலையாகும்.

இதனை வேறு விதமாகச் சொல்வதனால், "தன்னையுணர்ந்த தவநிலை" என்று கூறமுடியும்.

நீ உன்னையறிந்தால் மட்டும்
நீ உலகத்தில் போராடலாம்
நீ உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்
தலை வணங்காமல் நீ வாழலாம்.

மௌனத்திலேதான் மனச்சாட்சி விளையாடுகிறது. மோன வரம்பு என்பதும், தானவரம்பு என்பதும் மௌனத்தையே சுட்டி நிற்கிறது. ஞானம் குடிபுகுகின்ற யோகநிலை என்றுகூட பெயரிட முடியும். ஞானவரம்பும் அதுவேயாம்.

தெய்வங்கள் கூட அமைதியின் சொருபங்களாக விளங்குவதாலேயே பேரானந்தத்தை எல்லோருக்கும் கொடுக்க முடிகிறது.

தவத்திரு யோகர் சுவாமிகள் அடிக்கடி எமக்கு வரந்தரும் பொது மொழியே நீ சும்மா இரு, எதையும் சுமந்துகொண்டு பாரத்தைச் சுமக்காதே!

நீ ஒன்று உன் கடமை ஒன்று.
நீ என்றும் உன் கடமை என்றும்.
நீ நன்று உன் கடமை நன்று.
நீ இன்று உன் கடமை இன்று.

அதாவது, உனக்குத் தரப்பட்ட கடமையைச் செழிப்பாக்குவாயாக. கடமையே உனது கடவுள். அதற்கப்பால் நீ எதையும் விற்பனை செய்யாதே! இப்போது கடமை கதிரையில் அழகாகக் குந்தியிருக்கிறது. ஆனால் கடமை வெல்லப்படவில்லை. மௌனம் என்பது, தரப் பட்ட கடமைக்காக உனது ஆன்மாவை ஒப்படைப்பாயாக. உடலை அர்ப்பணிப்பாயாக. அதற்கப்பால், அநாவசியமாகப் பரபரப்போ விளம்பரமோ வியாக்கியானமோ வில்லங்கமோ விற்பனையோ தரகுவேலையோ செய்யாதே. நீ அவசரப்படுகிறாய்.

கடமைக்காகவே ஆன்மா படைக்கப்பட்டதேயொழிய, ஆன்மாவுக்காகக் கடமை படைக் கப்படவேயில்லை. தரப்பட்ட கடமையை ஒருவர் கூடச் செய்ய மறுப்பாராயின் உலகம் கூடத் தடம் புரளலாம். உலகத்தில் பெரும்பாலான நாடுகள் தத்தம் நாட்டிலுள்ள பஞ்சம், பசி, பிணி, பட்டினி, வறுமை, சுகாதாரம், விவசாயம், குழந்தைகள், பெண்கள், வீடு வாசல், கண்டு பிடிப்புக்கள் என்பவற்றைக் கணக்கிலெடுக்காது அயல் நாடுகளை எப்படி வசீகரிக்கலாம் என்பதிலேயே தமது மௌனத்தைக் கலைத்துத் தம் நாட்டினை அடகு வைக்கின்றார்கள். இது ஒவ்வொரு குடிமகனையும் பாதிக்கவே செய்யும்.

*சிக்கனமாக வாழும் ஏழை சீக்கிரமாகச் செல்வந்தனாவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகமானது ஆன்மாவுக்குச் செழிப்பைத் தருவதற்கு ஆசைப்படுகிறது. ஆன்மாவின் செழிப்புக்கும், செம்மைக்கும், சேமிப்புக்கும், சோபிதத்திற்கும் ஆன்மீகம் உபகாரம் செய்கிறது. ஆனால் மனித உடல் அதன் தேவைகளுக்கும், இச்சைகளுக்கும், ஆடம்பரங்களுக்கும் இடமளிப்பதனால் ஆன்மீகத்தின் பெறுமதியை பேறாக்க முடிவதில்லை. பெரும்பாலான ஆலயங்களில் அபரிமிதமான கட்டிடங்களும், கோபுரங்களும், கல்யாண மண்டபங்களும், கண்கொள்ளாக் காட்சியாகவும், கண்காட்சியாகவும், கலகலப்போடு பிரம்மிக்க வைக்கிறதே தவிர, அடியார்களை ஒரு முப்பது நிமிடவேளை ஆற அமர மௌனமாக இருந்து உள்ளிருக்கும் ஆன்மீகச் சக்தியைப் பெருக்குவதற்கும், செழிப்பாக்குவதற்கும் உரியவாறு பேறாக்கவில்லை. மேய்ச்சல் நிலையங்கள் ஏராளமாக இருந்தும் அவை வெல்லப்படவில்லை. மாறாக வருமான வரங்களாக எழுச்சி பெறுகின்றன.

இன்றைய உலகிலே "மௌனமாக இரு! அதிகம் பேசாதே" என்பதை உணர்வு பூர்வமாக எச்சரிக்கை விடுப்பதாகவே அவரவர் வாயை அவரவரே இறுக்கி மூடியுள்ளோம். மூடுங்கள் என்று நம்மை யாருமே பண்பாகச் சொன்னால் நாமே நம் வாயை மூடமாட்டோம். கொரோனா என்று சொன்னால் உடன் அமுலாகும்படி நம் கையாலே நம் வாயை நாமே மூடிவிட்டோமே! இதற்குப் பெயர் வாயை மூடு! பேசாதே! மௌனமாக இரு! என்பதாகும்.

இதைச் சட்டம் போட்டுச் சொன்னாலும் நாம் திருந்தியிருக்கவே மாட்டோம். கொரோனா எங்களிலும் பார்க்க மிகவும் நுண்ணிய ஒரு கிருமிக்கு எழுநூறு கோடி மக்களும் வாயை மூடிவிட்டோம் என்றால் நம்மை நாம் எங்கே வைத்துள்ளோம்? நாம் தோற்றுவிட்டோம்.

ஆன்மீகமும் அறிவியலும் உளவியலும் மானிடப் பண்புகளும் ஒன்று சேருமிடம் மௌனமே ஆகும். புத்தர், காந்தி, யேசு, யோகர், செல்லப்பர், அன்னைதிரேசா, ரமணர் எல்லோருமே மௌனத்தால் உலகத்தையே ஆண்டு, மௌனத்தாலே பூமியைப் பாதுகாத்து இன்று தெய்வங்களாக வாழ்கின்றார்கள்.

சுவாமி விவேகானந்தர் ஒரு தடவை தன்னந் தனியாகக் காட்டில் சென்றபோது ஒரு புலியைச் சந்திக்க வேண்டி வந்தது. அவர் ஓடாமல் ஒளியாமல் ஆடாமல் அசையாமல் மௌனமாக நின்றார். புலி அவரை ஒன்றுமே செய்யாது அப்பால் போக அனுமதித்தது. இதுபோலவே எதிரும் புதிருமான எதிரிகள் நேருக்கு நேரே சந்தித்து விடுகின்றனர். ஆதார சுருதியிலிருந்து உச்சஸ்தாயிவரை கடுந்தொனியில் ஒருவர் கடுமையான வார்த்தைப் பிரயோகம் செய்கின்றார். அடுத்தவரோ மௌனம் காக்கின்றார். கடவுளும் மௌனம் பக்கமே வந்துவிடுகின்றார். கதிரையிலிருப்பவர்கள் பலரும் தமது ஆட்சி அதிகாரத்தில் கத்திக்கத்தியே நாட்டையே கலக்கி விடுகிறார்கள். பாராளுமன்ற விவாதங்களும், ஒரு சில மோதல்களும் இதற்கு நல்லதோர் உதாரணமாகும். அவமானங்களும், காயங்களும் ஒருபோதும் தோல்வி போவதில்லை. அதேபோல அவமானப்படுத்தியவர்களும், காயப்படுத்தியவர்களும் எப்போதும் நிம்மதியாய் வாழ்ந்ததுமில்லை. பரபரப்பாய் வாழ்ந்தவர்கள்கூட மௌனமான விளைச்சல் நிலத்தில் மேயவே ஆசைப்படுகிறார்கள். விளைநிலங்கள் தாராளமாக உண்டு. ஆனால்...!

*நீ வெற்றியடைவதை உன்னைத்தவிர வேறு யாராலும் தடுக்கமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேறான மேய்ச்சல் நிலம்

பராக்கிரமம் இல்லாமல்
பட்டம் பதவி பேசாமல்
சராசரி மனிதனாய் வாழத்
தகுந்த இடம் சந்நிதியே!

நிராதரவு மாந்தர்களும்
நிலபுலத்தாளர்களும்
வராத மௌனத்திற்காய்
வரங் கேட்கின்றனர் இங்கே!

உராய்வுகள் இங்கில்லை
உள்ளதோ மௌனந்தான்,
தராதரமில்லாது ஆன்மாக்கள்
தக்கபடி வாழலாம்! ஆம்!
அரோகரா ஒன்றுதான் இங்கு
ஆன்மாவுக்கான செழிப்பு!
புராதனமாக ஆன்மா விளைகின்ற
பேறான மேய்ச்சல் நிலமிங்குண்டு.

---

ஒரு கையிலே தீப்பந்தமும் மறு கையிலே வாளி நிறைந்த தண்ணீருடனும் தெருவிலே சென்ற ஒரு ஞானியைப் பார்த்து வியந்த மக்கள் "என்ன இது நெருப்பும், தண்ணீரும்?" என்று கேட்டனர். "நரகத்தீயை தண்ணீரால் அணைக்கப் போகிறேன். சொர்க்கத்தைக் கொளுத்தப் போகிறேன். சொர்க்கத்துக்குப் போகவேண்டுமென்ற ஆசையும், நரகத்துக்கு போய்விடக்கூடாதென்ற விருப்பத்துடனும் வாழுகின்ற இன்றைய பக்தர்கள், தங்கள் கடமைகளை அடையாளம் கண்டு கொள்ளாமலேயே காலத்தைக் கழித்து விடுகிறார்கள். ஆலயங்களில் மட்டுமே இறைவன் இருப்பதாக அங்கேதான் பஜனையும் பக்தியுமாகக் கோசமிடுகிறார்கள்" என்றார்.

அதைக் கேட்டதும் மக்களில் ஒருவர் "கத்தினால் கடவுள் கண்திறந்து பார்ப்பார், தட்டினால்தான் கதவு திறக்கும். ஒருவன் விடாமல் கதவைத் தட்டிக்கொண்டே இருந்தால் அந்தக் கதவு ஒருநாள் அவனுக்காகத் திறக்கத்தானே செய்யும்" என்றான். அதைக் கேட்டுவிட்டு "இப்படி எவ்வளவு காலம் சொல்லிக்கொண்டு இருக்கப் போகிறீர்கள்? கதவு எப்போது மூடியிருந்தது இப்போது திறப்பதற்கு?" என்று கலகலவென்று சிரித்தார் ஞானி.

ஆம் இறைவனது அருள் எப்போதும் நமக்குப் பக்கத்திலேயே காத்திருக்கிறது. நாம்தான் அதைக் கண்டுகொள்வதில்லை.

ஆலயத்தில் உள்ள சிலைகளில் கடவுளைப் பார்ப்பவன் பக்தியின் அடிமட்டத்திலேயே நிற்கிறான். அடுத்தவரது துன்பத்தைப் போக்குவதில் கடவுளைப் பார்ப்பவன் பக்தியில் ஆகாயம் அளவுக்கு உயர்ந்து நிற்கிறான்.

*இளமையில் சோம்பலாய் இருப்பது முதுமையில் வருத்தத்தைத் தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 48

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 சிறுவர்க்கு பெரியவர்கள் கருத்தொன்றைக் கூறுகையில்
உறுதியான உயர்கருத்தாய் அதுஇருந்திடுதல் வேண்டும்
பெறுமதி அற்றதொரு கருத்தவர்க்கு உணர்த்திடுதல்
மறுபுறத்தால் நஞ்சுரைத்து ஊட்டுதற்குச் சமமாம்.

02 தொழிலொன்றில் பெரியதொழில் சிறியதொழில் கிடையாது
தொழிலென்ற வகையிலே எல்லாமும் ஒன்றேதான்
ஆனாலும் பெருந்தொழிலாய்க் கருதிடலாம் எதையென்றால்
விசுவாசத் தோடொருவர் செய்கின்ற தொழிலினையாம்.

03 மனிதத்தில் பெருமனிதம் சிறுமனிதம் கிடையாது
மனிதமென்ற வகையிலே எல்லாமும் ஒன்றேதான்
ஆனாலும் பெருமனிதம் என்றிடலாம் யாரையெனில்
பெரிது சிறிது பாராமல் நடக்கின்ற ஒருவரையாம்.

04 செல்வத்தில் பெருஞ்செல்வம் சிறுசெல்வம் கிடையாது
செல்வமென்ற வகையிலே எல்லாமும் ஒன்றேதான்
ஆனாலும் பெருஞ்செல்வம் என்றிடலாம் எதையென்றால்
இருக்கின்ற செல்வமதை இல்லாற்கும் பகிர்வதையாம்.

05 பக்தியிலே பெரும்பக்தி சிறுபக்தி கிடையாது
பக்திஎன்ற வகையிலே எல்லாமும் ஒன்றேதான்
ஆனாலும் பெரும்பக்தி என்றிடலாம் எதையென்றால்
கடமையினைத் தெய்வமெனக் கருதுகின்ற தன்மையையாம்.

06 மனிதாபி மானத்தை மரியாதையீனமென்று
மனதிற்குள் எண்ணியே மதிக்காமல் நடப்பவர்கள்
மதிப்போடு மரியாதை என்றிங்கு வாழ்ந்திடுதல்
மண்குதிரை மேற்செய்யும் சவாரிக்குச் சமமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 பிறர்வீடு என்றொருவர் வீட்டைநீர் புறக்கணித்து
என்வீடு என்னுறவு என்றிங்கு வாழ்ந்திட்டால்
தன்வீட்டைப் புறக்கணித்தீர் என்றிறைவன் அதையறிந்து
மணல்வீடு போலுங்கள் வாழ்வுதனை ஆக்கிடுவான்.

08 போலியாய் ஒருவர்முன் புகழ்ந்துரைகள் பேசிவிட்டு
கேலிகள் செய்வதும் கிண்டல்கள் செய்வதுவும்
ஆறறிவாம் பகுத்தறிவு கொண்டோர்க்கு உகந்ததன்று
அதுபகுத்தறிவுப் பயிருண்ணும் வேலிக்குச் சமமாகும்.

09 உமக்கிங்கு பாதிப்பு வரும்போது வருமுணர்வே
பிறர்க்கிங்கு பாதிப்பு வரும்போதும் வந்திடுமாம்
உணர்வுகள் எல்லோர்க்கும் ஒன்றுதான் என்றுணர்ந்து
எவர்க்குமே பாதிப்பு ஏற்படாமல் நடந்திடுவீர்.

10 ஆத்திரம் வருகையிலே அடிதடியை நாடாமல்
சாத்திரத்தை ஒருகணம் சரியாகப் பார்த்திட்டால்
கோத்திரத்திற் கிழிவும் பாத்திரத்திற் கழிவுமென
காத்திரமாய் இருக்கும்நீர் அமைதிகாத்தல் நன்றாம்.


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும்**
**மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்**
**பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர்**
**கீழே உள்ள முகவரியுடன்**
**தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இட்டுண்ணல்

–திரு கு. சிவபாலராஜா அவர்கள்–

உணவு உண்ணும் முறையே இட்டுண்ணல் ஆகும். நமது பண்டைய நூல்களில் குறிக்கப்பட்டுள்ள இட்டுண்ணல் என்னும் வழமை இன்றைய நாளில் அருகி வருவதைக் காண்கின்றோம். இட்டுண்ணும்போது அவ்விடத்தில் ஒரே நேரத்தில் பலர் உணவுண்ணும் காட்சி மனதிற்கினிய காட்சியாகவே காணப்படும். அங்குள்ளோர் மத்தியில் குதூகலம் காணப்படும். இன மத பேதம், ஏழை, பணக்காரர் என்னும் பேதங்கள் அனைத்தும் அற்று, யாவர்க்கும் உணவினை அளித்தல் இற்றைக்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் மத்தியில் காணப்பட்ட ஓர் பண்பாடாக இருந்துள்ளமையை திருமூலர் பின்வரும் திருமந்திரத்தில் தெளிவாக விளக்கியுள்ளார்.

ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்
பார்த்து இருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே.

-திருமந்திரம் 250.

அறம் செய்ய வேண்டுமெனில் சற்று இலகுவாகவே செய்யத் தக்கதோர் அறம் இட்டுண்ணல் ஆகும். "இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்" என்பது ஔவை வாக்காகும். இதில் இட்டாரின் தகுதி பற்றிக் கூறப்பட்டுள்ளது. வீட்டில் நாம் உண்ணும்போது, வீட்டுக்குப் புதிதாக வருவோரையும் எதிர்பார்த்து உண்ணுதல் வேண்டும். அவ்வாறு ஒருவரும் வரவில்லையாயின் அதன்பின் வீட்டுக்காரர் உண்ணுதல் வேண்டும். யாரும் வரவில்லையாயின் வராமைக்கு வருந்துதல் வேண்டும். சிறுத்தொண்டர் நாயனார் வரலாறு இதற்குத் தக்க உதாரணம் ஆகும். அங்கு, இறைவனே விருந்தாளியாகி வந்து வெளியே தரித்திருக்கவும், அவ்வடியாரைத் தேடிச் சென்று அழைத்து வந்து தன் வீட்டில் விருந்து கொடுத்தார் நாயனார். தன் இனத்தை அழைத்து விருந்து கொடுக்கும் பண்பாட்டிற்கு சாதாரண பறவையாகிய காக்கைகளை உதாரணம் காட்டி விளக்கியுள்ளார் திருமூல நாயனார். காக்கைகள் தாம் எங்கேனும் உணவு கண்டவிடத்து தம் இனமாகிய காக்கைகளையும் கூவி அழைத்து உணவினைப் பங்கிட்டு அவற்றோடு சேர்ந்து உண்ணுதலை நாம் காண்கிறோம். அவ்வாறே, மனிதரும் உணவினைப் பிறருடன் பங்கிட்டு உண்ணுதல் வேண்டும் என்பதை நாயனார் உதாரண முகத்தால் விளக்கி உள்ளார். பழைய உணவினையோ ஏனை பழைய பொருட்களையோ போற்றிக் காத்துக்கொண்டு இருக்காதீர்கள். பழைய உணவினைப் பிறர்க்கு ஈவதைத் தவிருங்கள். புதிய உணவினையே பிறர்க்குக் கொடுத்து உதவுங்கள். புதிய உணவினையே நீயும் உண்ணுதல் வேண்டும். சாப்பிடும்போது வேகமாக அள்ளிக் கொட்டித் தின்னக்கூடாது. மெல்லச் சாப்பிடுதல் வேண்டும். "நொறுங்கத் தின்றார்க்கு அகவை நூறு" என்பது பழமொழி. நீங்கள் மற்றவர்களுடன்

*நீ வீணாக்கும் ஒவ்வொரு நொடியும் உன்னை வறுமைக்குள் தள்ளிவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்திருந்து சாப்பிடும்போது அவசரப்பட்டுச் சாப்பிட்டு இலையை மூடி எழுந்து விட்டால் உங்கள் அருகிலிருந்து சாப்பிட்டவரும் சரியாகச் சாப்பிடாமல் இடையில் எழும்பிச் செல்ல வேண்டிவரும். இதனால், அவர் திருப்தியாகச் சாப்பிடவும் முடியாமற் போய்விடும். எனவே, அவரை முழுமையாக உண்ணவிடாத பாவம் செய்தவராவீர்கள். எனவேதான் நாயனார் “வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்” என்று பாடியுள்ளார்.

அடுத்து ஒரு திருமந்திரம் நம் சிந்தனைக்கு வந்துள்ளது. அம் மந்திரம் வருமாறு.

யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே.

-திருமந்திரம்.

நாம் நாள்தோறும் அறம் செய்தல் வேண்டும். நாள்தோறும் செய்யத்தக்க அறங்கள் எவையென்பதையும் இம் மந்திரத்தில் வெளிப்படையாகவே திருமூல நாயனார் விளக்கியுள்ளார். அறம் செய்கிறேன் என்று ஆடம்பரமாக எதையுமே செய்யத் தேவையில்லை. அப்படியெல்லாம் செய்வதுதான் அறமோ எனில்; இல்லை. அப்படிச் செய்யவும் நம்மால் முடியாது. ஆகவே, மேல் உள்ள மந்திரத்தில் கூறப்பட்டுள்ளபடி மிக இலகுவாக அறம் செய்யலாம். அவ்வாறு தினமும் தவறாது செய்துவரின் அதனால் முத்திப்பேறும் நமக்குக் கிடைக்கும் என்பதை வள்ளுவரும் குறட்பாவில் தெரிவித்துள்ளார்.

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

-குறள் 38.

இறை வழிபாட்டில் அன்புதான் முக்கியம், அளவு முக்கியமல்ல, உனக்கு நான் இடுவது ஒரு பச்சிலை, எனக்கு நீ தருவதோ முத்தி. அதனால்த்தான் உனக்குப் பித்தன் என்று பெயர் வந்ததா” என்று பாடியுள்ளார் அப்பைய தீட்சிதர். பசுவுக்கு ஒரு வாயுறையாக ஒரு பிடி பசும்புல் கொடுங்கள். அதனால் கொடுப்பவருக்கும் புண்ணியம் கிடைக்கும். அந்த நாடும் வாழும். எல்லாவற்றிற்கும் மேலாக, எக்காலத்தும் எதற்கும் எந்நிலையிலும் மற்ற வர்களுடன் பேசும்போது இனிய சொற்களால் அவர் மனம் புண்படாதபடி பேசினாலே போதும். அதுவும் ஒரு ஈகை செய்வதுபோலத்தான் அமையும் என்றுள்ளார் நாயனார். யாவரும் செய்யத்தக்கது தினமும் இறைவனுக்கு ஒரு பச்சிலையாவது சாத்துங்கள்.

அறத்தின் பெருமையை உணராமல் அதை மறந்தவனுக்கு இறைவன் எதிர்ப்பட மாட்டான். எந்தளவு அறம் செய்கின்றாயோ அந்தளவிற்கு நீ இறைவனின் அருளையும், இறைவனையும் அறிவாய் என்றுள்ளார் திருமூலர்.

துறந்தான் வழிமுதல் சுற்றமும் இல்லை
இறந்தான் வழிமுதல் இன்பமும் இல்லை
மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்
அறந்தான் அறியும் அளவு அறியாரே.

-திருமந்திரம் 256.

*அடுத்தவர்களுக்கு கெடுதல் நினைக்காத எல்லா நேரமும் நல்ல நேரமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபரி வருமானத்தை உறவினர்களுக் குப் பங்கிட்டுக் கொடுத்தல் - என்னும் சமூகம் சார்ந்த ஒரு கொள்கையிலிருந்து ஆரம் பித்ததே கோயில்களில் அன்னதானமிடும் முறை என்பதை அறிஞர்கள் கூறி வைத்துள் ளனர். அது வீட்டிலிருந்து ஒரு வண்டியில் அன்னதானத்திற்குத் தேவையான அரிசி, மற்றும் காய்கறிகளாகிய பொருட்களை ஏற்றிக் கொண்டு, தமது உறவினர்கள் சிலரையும் கூடவே அழைத்துக் கொண்டு, கோயில் வீதிக்குப் போய் அங்குள்ள ஓர் இடத்தில் உணவினைச் சமைத்தபின் அங்கு வரும் அடியார்களுக்கும், உறவினர்களுக்கும் பங்கிட் டுக் கொடுத்து மகிழ்ச்சியோடு தாமும் அவர் களுடன் சேர்ந்து உண்ணும் வழக்கம் நம் முன்னோர் மத்தியில் காணப்பட்டுள்ளது. கால வோட்டத்தில் இம் முறை குறைவடைந்து விட்டது. அம்முறையே தொடர்ந்து வந்த காலங்களில் இன்றுள்ள அன்னதானமளிக்கும் முறையாக வளர்ந்துள்ளது.

ஒருவர் தமது பொருளைப் பிறருக்குப் பயன்படச் செய்கின்ற முறை தானமும் தரும மும் என இருவகைப்படும். அவை முறையே கொடை, ஈகை எனத் தமிழ்ப் பதங்களால் குறிக்கப்பட்டுள்ளது. கொடை என்பது உயர்ந் தோர்க்குக் கொடுத்தலும், ஈகை தாழ்ந்தோர்க் குக் கொடுத்தலுமாகும் எனத் தமிழ் நூல் களில் கூறப்பட்டுள்ளது. வீட்டிற்கு விருந்தினர் வருவது வழக்கமாகும். அவ்விருந்தினர்களை இருவகையாகவும் இனம் காண முடியும். அழைத்த விருந்தினர், அழையா விருந்தினர் என நாம் இருவகையாகக் காணலாம். இவ் இருவருமே விருந்தினர்கள் என்னும் கருத்தில் ஒத்தவர்களே என்பதையும் நாம் உணர்தல் வேண்டும். இதில் ஓர் உண்மை புலப்படும். அதாவது வீட்டிற்கு வருவோர் யாவரும் அவ் வீட்டில் உணவு உண்ணத் தகுதி பெற்றவர் களே என்பது. ஆதலால் வீட்டிற்கு வருவோரை வரவேற்று அவர்களுக்கு இயன்றளவில் உண வளிக்கும் முறை இன்று அருகிவிட்டது. சேர்ந்து சாப்பிடுதல் என்பதே உண்மையான உணவிடும் முறையாகும். நம் முன்னோர் வாழ்ந்த கூட்டுக் குடும்ப அமைப்பு இதற்கோர் எடுத்துக்காட்டாகும். பின்னர் மக்கள் மத்தியில் வளர்ந்துள்ள வேலைப்பழு மற்றும் ஆடம்பரங் கள் முதலிய காரணங்களால் சேர்ந்துண்ணும் வழக்கம் குறையத் தொடங்கியதை நாம் அவதானிக்கலாம். இதனால் விருந்தினரை வரவேற்கும் வழக்கமும் அருகத் தொடங்கி யது. இக் காலத்தைப் போல் முன்னைய காலங்களில் உணவு விற்பனை செய்யும் கடைகள் இருக்கவில்லை. அக்காலத்தில் கோயில் அன்னதான மடங்கள், மற்றும் பொது நிலையங்கள் மட்டுமே மக்களுக்கு உணவு அளிக்கும் இடங்களாக செயல்பட்டு வந்துள் ளன. அக்காலத்தில் நாட்டில் உணவு வியா பாரம் செய்வது ஓர் கௌரவக் குறைவான செயலாகவே கருதப்பட்டுள்ளது.

எல்லோரும் சமமானவர்களாகக் கருதி அவர்களுக்கு உணவளித்தபோதிலும், ஞானி களுக்கு உணவளித்தல் மிக்க பலாபலன் களை அளிக்கும் விடயமாகும் என திருமூலர் பின்வரும் திருமந்திரத்தில் விளக்கியுள்ளார்.

அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரும் ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயந் தானே.

-திருமந்திரம் 1860.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் ஒரு ஞானிக்கு ஒரு பகல் நேரச் சாப்பாடு மட்டும் வழங்கியிருந்தாலே அது போதும் என்றுள்ளார். ஆயிரம் வீடுகளைக் கட்டி அவற்றை அந்தணர்க்கு அளித்தால் என்ன, ஆயிரம் கோவில்களைக் கட்டி முடித்தால் என்ன, ஒரு ஞானிக்கு ஒரு பகல் நேரச் சாப்பாடு அளிக்கும் செயலுக்கு அவை ஈடாகமாட்டாது. இது ஓர் உண்மையாகும் என்று தெளியக் கூறியுள்ளார் நாயனார். எனவே, இதன்மூலம் ஈகையின் சிறப்பு எவ்வளவு தூரம் பெரியது என்பதை அறியலாம். மேலும் கூறியுள்ளார்; மாகேசுவரர்களாகிய இறையடியார்களுக்கு உணவு இடுக, அதனால் புவனம் முழுமையிலும் வாழும் மக்கள் எல்லோருக்கும் உணவளித்த பலன் கிடைக்கும் என்றுள்ளார். இக் கருத்தினைக் கூறியவர் இறைவனே எனவும் கூறப்பட்டுள்ளது. அதன் திருமந்திரம் வருமாறு.

தண்டறு சிந்தை தபோதனர் தாமகிழ்ந்து
உண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமும் கொண்டதென்று
எண்டிசை நந்தி எடுத்துரைத் தானே.

-திருமந்திரம் 1858.

இட்டுண்ணல் பற்றித் திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துக்கள் சிலவற்றை நோக்குவோம்.

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

-குறள் 83.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு.

-குறள் 86.

விருந்தோம்புவரின் வாழ்வு துன்பமின்றிக் கழியும் என விளக்கிய வள்ளுவர் பின்வரும் குறளால் விருந்துண்டவரின் திருப்தியே விருந்து கொடுத்தவரின் விருந்து என்றுள்ளார்.

இனைத்துணைத்து என்பதொன்று இல்லை; விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

-குறள் 87.

புதியவராய் வந்தவரைப் பேணும் முறைமையை வள்ளுவர் விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தில் பாடியுள்ளார். புதியவர் என்பது வீட்டு அங்கத்தவர் அல்லாத புதிதாக வீட்டுக்கு வருவோரைக் குறிக்கும்.

ஊன் உணவினைப் பங்கிடுதல் அறமன்று. தாவர உணவினைப் பங்கிட்டுத் தானும் உண்ணுதலே அறம் ஆகும். கல்வி கற்றோரும் அருளுணர்ச்சி இல்லாமல் வாழ்ந்தால் அது அறம் அன்று. அவர்கள் மானுடருமாகார். வாழ்வில் கஞ்சத்தனம் கூடாது. சுயநலமற்று தாராளமாக ஈகை செய்து விருந்தினருடன் சேர்ந்து உண்ணுதலே அறம் ஆகும். விசேட தினங்களில் நீவிர் அனுபவிப்பது போன்று பிறருக்கும் கொடுத்து உதவி ஆதரித்து வாழுதலே உமது கடனாகும். அன்றைய நாளில்; அதாவது விசேட தினத்தில் தானம், ஈகை செய்வது நலமாகும். மனிதனாகப் பிறந்து வாழும் நீர் இறப்பதற்கு முன்னே இத்தகைய தானம், தர்மம் முதலியவற்றைச் செய்தல் வேண்டும். பெரிய அளவில் இவை செய்ய வேண்டியதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமது வசதிக்குத் தக்கதாகச் செய்யலாம். இவ்வாறு செய்வனவற்றைத் தவவினை என்பர். செய்யும் அறத்தைக் கொண்டே அறிஞர்கள் ஒருவரை அளவிடுவர். மனிதர் செய்யும் அறம் எதுவும் இறைவனை அடைவதற்கேயாம் என்பதை உணர்தல் வேண்டும். தர்மம் தலை காக்கும். ஈகை ஒருவனுக்குத் துணை செய்யும், அறமும், ஈகையும், தவமும் இருந்தால் மற்றைய விடயங்கள் எல்லாம் இறைவனின் விருப்பப்படி நிறைவேறும்.

இட்டுண்ணல் என்னும் இப்பகுதியில் திருக்குறள் கூறும் கருத்துக்கள் சிலவற்றை மேலும் ஆராய்தல் பொருத்தமுடையது. நாம் இல்லறத்தில் ஈடுபட்டு வருகின்றோம். அவ்வாறு கணவரும் மனைவியும் கூடி வாழும் இல்லறத்தில் ஈடுபடும்போது, இல்லறத்தானைத் (கிருகஷ்தன்) தவிர, ஏனைய மூவினத்தவராகிய பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகியவர்களுக்கு உணவு, நீர் முதலிய வசதிகளை வழங்குபவர் இல்லறத்தான் ஆவார். எனவே இல்வாழ்வான் இல்லையேல் ஏனைய மூவர்க்கும் உணவு முதலியன வழங்கவும் ஆள் இன்றிப்போகும். வருவோர்க்கு உணவு கொடுத்தல் இல்வாழ்வானின் அறப்பணியாக, கடனாக அமைந்துள்ளது.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

-குறள் 41.

இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

-குறள் 81.

விருந்தினர் வந்து புறம் இருக்க நாம் தனியே உண்ணக்கூடாது. அவர்களையும் உள்ளே வரவழைத்து உண்ணுதல் வேண்டும். வீட்டுக்கு வரும் விருந்தினரையும் (வருவிருந்து) வேறு எதிர்பார்த்துக் காத்திருக்கவும். அவற்றின் குறள் வருமாறு.

விருந்து புறத்த தாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்று அன்று.

-குறள் 82.

---

அளவுகடந்த தேவைகளும் அடக்கமுடியாத ஆசைகளும் மறைமுகமாக நம்மைத் தவறு செய்யத் தூண்டும். ஆன்மா ஒருபோதும் தவறு இழைக்காது. ஆனால் மனம், வாக்கு, உடல் ஆகியன தவறிழைக்கக் கூடியவை. அப்படிச் செய்யப்படும் நிலையில் ஊனமுற்ற உடல், பேசாத வாய், நிலையில்லாத மனம் என்று அவற்றுக்கான தண்டனைகளும் உண்டு. எனவே அவற்றிலிருந்து விடுபட்டு வாழ்வதுதான் சாலச் சிறந்தது.

மனதின் மாசைக் கழுவுவதற்கு நமது முன்னோர்களும், ஞானிகளும் பல வழிகளைக் கையாண்டிருக்கிறார்கள். இதில் மிகச் சிறந்தது பிரார்த்தனையாகும். ஆரம்பத்தில் உலக விஷயங்களில் பெரும்பாலும் நேரத்தைப் போக்கினாலும் ஒரு சில மணித்துளியாவது பிரார்த்தனையில் செலவு செய்யும் வழக்கம் ஏற்படின் அந்த நேரத்துளியே மனத்தின் அழுக்கைப் போக்கிவிடும். மனம் சுத்தமாகிவிட்டால் நமது வாக்கும், உடலும் அதைப் பின்பற்றி செயற்பட ஆரம்பித்துவிடும்.

*எவ்வளவு பெரிய பிரச்சினைக்கும் கையளவு மனதிடம்தான் தீர்வு உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப் பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| க. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 20000. 00 |
| இ. சிவராஜா | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| பிரதீபன் சயந்தி குடும்பம் | ஜேர்மனி | 50000. 00 |
| த. ஜெயந்தன் | அவுஸ்திரேலியா | 1000. 00 |
| த. தெய்வயானை | அவுஸ்திரேலியா | 1000. 00 |
| மு. பாலச்சந்திரன்மூலம் க. செல்லத்தம்பி | கனடா | 10000. 00 |
| T. தீஷா | லண்டன் | 5000. 00 |
| மதனராஜா புவிதா | நல்லூர் | 2புட்டி அரிசி |
| பொ. பத்மநாதன் | குப்பிளான் | 5000. 00 |
| ர. பகீரதன் | கோண்டாவில் | 5000. 00 |
| ப. ஜெயராணி | இணுவில் | 1மூடை அரிசி |
| ஆறுமுகம் பிருந்தாபன் | தாவடி | 500. 00 |
| திரு தர்மலிங்கம் | கொழும்பு | 1000. 00 |
| பாமினி பிரதீபன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| ஞானகி நந்தகுமார் | அமெரிக்கா | 5000. 00 |
| செ. வன்னியசிங்கம் | கொழும்பு | 5000. 00 |
| ரட்ணமூர்த்தி சுஜீவன் | தாவடி | 30000. 00 |
| திரு மகேந்திரராஜா குடும்பம் | மானிப்பாய் | 2000. 00 |
| ச. குணமகள், ச. நாமகள், ச. ஜெயமகள் | கோண்டாவில் | 1500. 00 |
| து. திவாகரன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| டாட்டா கொம்பனி | அரியாலை | 1000. 00 |
| த. சஜினிகன் | கொழும்பு | 2000. 00 |
| திரு சுதாகரன் | கோண்டாவில் | 2000. 00 |
| கே. ஹரிஸ் | ஆவரங்கால் | 2000. 00 |
| திரு நேரு குடும்பம் | ஆவரங்கால் | 5000. 00 |
| திரு அமலன் குடும்பம் | கொழும்பு | 2000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சு. புஸ்பராணி | கொழும்பு | 5000. 00 |
| ர. திவாகரன் | கொழும்பு | 2000. 00 |
| T. கனாதீபன் | தெகிவளை | 5000. 00 |
| திலகவதி ஜெயராசா | பருத்தித்துறை | 10000. 00 |
| திலகவதி ஜெயராசா | பருத்தித்துறை | |
| (பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்காக) | | 200000. 00 |
| M. ஜெகன் | கொழும்பு | 2500. 00 |
| பொ. சூரியகுமாரன் | மல்லாகம் | 21000. 00 |
| செ. செந்தில்குமரன் | வெள்ளவத்தை | 5000. 00 |
| து. பிறேமராஜ் அமெரிக்கா | 1மூடை பருப்பு, 1மூடை அரிசி | 1500. 00 |
| கருணாநிதி நித்திலா | சுவிஸ் | 25k பருப்பு, 1மூடை அரிசி |
| ஜெயபதி நினைவாக | மட்டக்களப்பு | 25k அரிசி 1000. 00 |
| S. கதிர்காமநாதன் | அமெரிக்கா | 4k தூள், 25k அரிசி |
| க. குகதாசன் | அல்வாய் | 5000. 00 |
| கு. ஜெகதேவி | ஊரிக்காடு | 5000. 00 |
| கி. மயூகன் | பம்பலப்பிட்டி | 6000. 00 |
| ப. தஷன் (வாசு) | உடுப்பிட்டி | 5000. 00 |
| த. அகரன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| அ. கந்தசாமி | கதிரிப்பாய் | 5000. 00 |
| க. வெற்றி | கொடிகாமம் | 15000. 00 |
| திரு பத்மநாதன் குடும்பம் | கனடா | 5000. 00 |
| S.P. விவேகானந்தன் (முருகேசு சுவாமி நினைவாக) | தும்பளை மேற்கு | 5000. 00 |
| பு. சிவராஜசேகரம் | உடுவில் | 1000. 00 |
| கா. செல்வமலர் | நீர்வேலி | 1000. 00 |
| ம. வசந்தகுமார் | பிரான்ஸ் | 5000. 00 |
| திருமதி சின்னராசா | கம்பளை | 1000. 00 |
| N. மனோகரன் | கொக்குவில் | 10000. 00 |
| பாலசுப்பிரமணியம் அக்ஷயா | ஜேர்மனி | 3000. 00 |
| ம. நிலோஜன் | உடுவில் | 5000. 00 |
| பா. செந்தில் | அல்வாய் | 1000. 00 |
| க. ஆறுமுகசுவாமி | வல்வெட்டி | 3000. 00 |
| சி. அஸ்வினி, சி. அனோஜன் | சுவிஸ் | 5500. 00 |
| ஆ. ரட்ணம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| S. விக்னேஸ்வரன் | ஆவரங்கால் | 5000. 00 |
| S. கமலாதேவி | தாவடி | 2000. 00 |
| வசந்தகோகுலன் துஷானி | உரும்பராய் | 6000. 00 |
| ரஞ்சி (கந்தையா வாத்தியார் குடும்பம்) | (சிறுப்பிட்டி) | |
| | ஜேர்மனி (சமூகப்பணிகள்) | 50000. 00 |

*ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| யாழினி சின்னத்துரை | உடுப்பிட்டி | 50k அரிசி |
| சுப்பிரமணியம் வினோத் | யாக்கரை | 10000. 00 |
| வினோ நகைப்பூங்கா | யாழ்ப்பாணம் | 25000. 00 |
| சோ. முருகானந்தம் குடும்பம் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| லோகேஸ்வரன் லோஜினி | தெல்லிப்பழை | 2000. 00 |
| திரு சண்முகவடிவேல் மூலம் சேனாதிராஜா குமார் குடும்பம் | | |
| | ஈவினை மத்தி (கனடா) | 10000. 00 |
| K. ஜெயமோகன் | கைதடி கிழக்கு | 5000. 00 |
| சாந்தி புடவையகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ச. கஜபரன் | மந்திகை | 5000. 00 |
| R. கிருஷ்ணா | கொழும்பு | 5000. 00 |
| துரை. கணேசமூர்த்தி மூலம் சிவசுப்பிரமணியம் நினைவாக | | |
| டிப்போ ஒழுங்கை | மல்லாகம் | 10000. 00 |
| முருகன் அடியான் | | 8000. 00 |
| கனகலிங்கம் விதுரா | ஜேர்மனி | 15000. 00 |
| ஜெயந்தன் நிருஷன் | இணுவில் | 2000. 00 |
| குணராஜினி வீரசிங்கம் | இடைக்காடு | 2000. 00 |
| அ. ரமேஸ் மூலம் அ. தருண் | ஜேர்மனி | 25000. 00 |
| M. முருகவேல் | சுவிஸ் (நெல்லியடி) | 2000. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் | நெல்லியடி | 2000. 00 |
| K. விஜயா | உடுப்பிட்டி | 1000. 00 |
| திரு செல்வநாதன் குடும்பம் | அல்வாய் | 5000. 00 |
| திரு கணேசபிள்ளை | கனடா | 15000. 00 |
| ம. கோபாலகிருஷ்ணன் | கொக்குவில் | 2000. 00 |
| சு. வளர்மதி | பருத்தித்துறை | 1000. 00 |
| ஸ்ரீரங்கன் வர்த்தக நிலையம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ந. ஆனந்தகுமார் குடும்பம் | மல்லாகம் | 10000. 00 |
| திரு சி. சுமங்கலா | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| ஸ்ரீமோகனன் சந்துஜன் | நல்லூர் | 3000. 00 |
| வ. கதிர்காமநாதன் | சாவகச்சேரி | 2000. 00 |
| ச. யோகாம்பிகை | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ஸ்ரீ கர்ஷினி | தாவடி | 3000. 00 |
| க. சதாசிவன் | நாவற்குழி | 1மூடை அரிசி |
| ராதிகா குமாரசோதி | சுவிஸ் | 2மூடை அரிசி |
| சு. கோகுலன் | வெள்ளவத்தை | 5000. 00 |
| ச. ரவிச்சந்திரன் | அவுஸ்திரேலியா | 15000. 00 |
| பொ. செல்வரஞ்சன் | ஜேர்மனி | 3000. 00 |
| திருமதி பாலச்சந்திரன் குடும்பம் | பிரான்ஸ் | 10000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் மூன்று வகையினர்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

"சொல்லாமலே பெரியர்; சொல்லிச் செய்வர் சிறியர்; சொல்லியும் செய்யார் கயவர்". மக்களில் பெரியர், சிறியர், கயவர் என மூவகையினர் உளர். இக்கூற்றினை உணர்த்துவனவாக, முறையே பலா, மா, பாதிரி மரங்களைக் குறிப்பிடுவர்.

பெரியர், பலாவைப் போன்றவர்கள். பலாமரம் முன்கூட்டியே பூத்துக் குலுங்குவதில்லை; காய்த்துச் சுவைமிக்க கனிகள் பலவற்றை ஈயும் தன்மையது. ஓர் உதவியைச் செய்வதாக, முன்கூட்டியே பகிரங்கப்படுத்தாமல்; தேவையும் காலமும் உணர்ந்து; தக்க தருணத்தில் செய்வது மேலானது. அதுவே உயர் மனிதப் பண்பு ஆகும். பெரியவர்கள் பண்பில் உயர்ந்தவர்கள் அத்தகையவர்கள் ஆவர். அவர்கள் சொல்லாமல் செய்பவர்கள்; விளம்பரதாரிகள் அல்லர். வலது கை கொடுப்பதை, இடது கைக்குத் தெரியாமல் கொடுப்பதே பெருந்தன்மை; மேன்மையும் ஆகும். அதுவே பெருந்தன்மை; பெரியோர் செயலும் ஆகும். பெரியோர் செயலில் விளம்பரம், எதிர்பார்ப்புக்கள், கைம்மாறு கருதுதல் எதுவுமே கிடையாது.

பலாமரம் பிறர் கவனத்தை ஈர்க்கக் கூடிய அளவிற்குப் பூத்துச் சிலிர்ப்பதில்லை. பூவாது காய்த்தல் என்பது சொல்லாமல் செய்தல் போன்றதாகும். எனவே, பலாவினை ஒத்தவர்களாகப் பெரியவர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

சொல்லிப் பகிரங்கப்படுத்தி செய்பவர்கள் சிறியர். அவர்கள் விளம்பரப்பிரியர்கள். எதையேனும் எதிர்பார்த்து உதவுபவர்கள். மாமரம் நன்றாகப் பூத்துச் சிலிர்ப்பதைக் காணலாம். அவ்வாறு பூத்துக் குலுங்கும் மாமரம் இனிய சுவையுள்ள பழங்களைப் பின்னர் தரப்போவதை முன்னர் பிரசித்தப் படுத்துவதாக உள்ளமை போன்ற செயல் ஆகும். மாமரத்தை ஒத்த மனிதர்களும் சமுதாயத்தில் உள்ளனர். அவர்கள் நாலுபேர் அறிய, நாடறிய, உலகறியத் தாம் வழங்கப் போகின்ற உதவிகளையும் ஒத்தாசைகளையும், நன்கொடைகளையும் சொல்லிப் பறைசாற்றி, விளம்பரப்படுத்திவிட்டே அவற்றைச் செய்வார்கள். அவ்வாறு சொல்லிச் செய்வது சின்னத்தனம் ஆகும். அத்துடன் ஏதோ ஒரு வகையில் பிரதிபலன் எதிர்பார்க்கப்படுகிறது. கைம்மாறு கருதாது, வழங்கப்படுவதுதான் கொடை. அதுவே நன்கொடையும் ஆகும். அவ்வாறு செய்யாமல் சொல்லிச் செய்பவர்கள் "சிறியர்" எனும் வகுதிக்குள் அடக்கப்படுகிறார்கள். மனிதர்களுள் மற்றொரு தரப்பினர் தாம் வழங்கப்போகின்ற கொடைகள்; செய்யப்போகின்ற உதவி ஒத்தாசைகள் என்பவற்றைப் பட்டியல் போட்டுக், "கேட்பார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும்" திறன் படைத்தவர்கள் பல அறிவிப்புகளையும் விடுவார்கள். தம்மைப் பெரிதாக மற்றவர்கள் நினைக்கவேண்டும் என்பது அவர்களினது அவாவும் ஆசையும் ஆகும். ஆனால் இறுதியில் எதையும் நிறைவேற்றாமல் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி நழுவிவிடுவார்கள். "சொல்லியும் செய்யார் கயவர்" என்ற வகுதிக்குள், இத்தகைய நழுவிகள் உள்ளடக்கப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிலுசிலுப்பு இருக்கும் ஆனால் பணியாரம் இருக்காது" காரியம் நடவாது அத்தகையவர் கள், ஏமாற்றுப் பேர்வழிகள்.

"கயவர்" என்ற வகுதிக்குள் இடம் பெறுபவர்களுக்கு எடுத்துக்காட்டாக பாதிரி மரத்தைக் கூறுவர். பாதிரி மரம் கொத்துக் கொத்தாகப் பூக்கும்; ஆனால் காய்ப்பதில்லை. அப்படியாயின் பழங்கள் எவ்வாறு கிடைக்கும்? பாதிரி பூக்கும் ஆனால், காய்க்காது. காய்க் காமல் பழங்கள் எப்படிக் கிடைக்கும்?

பாதிரி மலர்களைக் கண்ணுற்றவர்கள் அவை நிறையக் காய்களையும் கனிகளையும் தரப்போகின்றன என எதிர்பார்ப்பார்கள். ஆனால் ஈற்றில் "இலவுகாத்த கிளிபோல" அவர்கள் ஏமாற்றம்தான் அடைவார்கள். எனவேதான் ஒன்றைத் தருவதாகச் சொல்லியும் தம்பட்டம் அடித்தும் சொன்னபடி செய்யாதவர்கள்; ஏமாற்றுபவர்கள்; "கயவர்" என்றும் பாதிரி மரத்தை ஒத்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

அத்தகைய கயவர்களின் வார்த்தை ஜாலங்களையும் அலங்காரப் பேச்சுக்களை யும் போலி உறுதிமொழிகளையும் மெய் யென்று நம்பி மோசம் போனவர்கள்; ஏமாந் தவர்கள் ஏராளம் பேர் உள்ளனர். பணம், பொருள், நேரம் ஆகியவற்றை இழந்தவர்கள் அநேகம் பேர். கயவர்கள்; நண்பர்களுக்கும், அவர்களை நம்பியவர்களுக்கும் துரோகம் இழைப்பவர்கள். மனித விழுமியங்கள், மனி தாபிமானம், மனிதத்துவம், மனிதம் என்பவற் றிற்கு மதிப்பு அளிக்காதவர்கள். அவர்கள் பொய்ம்மையாளர்கள். "தீங்கினர் தம் கண் ணுக்குத் தெரியாத தூரத்தில் நீங்குவதே நல்லநெறி.

பயனற்ற சொற்களைத் திரும்பத் திரும்பப் பேசுபவர்கள் மனிதர்களே அல்லர். அவர்கள் மக்கட்பதர் என்று உயர்ந்தோர் கூறுவர். தற்காலத்தில் பயனற்ற வார்த்தை களை அலங்காரமாகவும், வசீகரமாகவும் பேசவல்லார், சமூகத்தில் மலிந்து காணப்படு கின்றனர். அவர்களின் பேச்சுக் கவர்ச்சியால் ஏமாந்து பணம், பொருள்களை இழந்தோர் பலர். விளக்குச் சுடரை அழகிய மலர் என்று நினைத்து, அதனால் கவரப்பட்டு அந்நெருப்புச் சுடருக்குள் வீழ்ந்து மடியும் விட்டில் பூச்சிகள் போல ஆறறிவு படைத்த மனிதர் நடந்து கொள்ளலாமா?

கவர்ச்சியானவற்றை, பகட்டானவற் றைக் காணும்போது, குறிப்பாக இளையோர் கள் ஒருமுறையல்ல, பல முறைகள் சிந்தித் துத் தெளிந்து, ஒருமுடிவிற்கு வரவேண்டும். "சிலுசிலுப்பு அல்ல, பணியாரம்தான்" முக் கியம், என்பதை உணர வேண்டும். "கயவர்" அதாவது பாதிரி மரத்தைப் போன்றவர்களின் கண்களுக்குத் தெரியாத தூரத்தில், அவர் களை விட்டு நீங்கிவிடுவதே புத்திசாலித்தனம் ஆகும். "தீயாரைக் காண்பதுவும் தீது"; அத னால் அவர்களைவிட்டு "தெரியாத தூரத்தில், நீங்குவதே, நல்ல நெறி" என்பது தமிழ் மூதாட்டி ஒளவையாரின் அமுதமொழி.

மனித சமுதாயத்தில் நல்லவையும் உண்டு; தீயவையும் உண்டு. பாலையும் நீரை யும் கலந்து வைத்தால், நீரை விட்டுவிட்டுப் பாலை மாத்திரம் பருகக்கூடிய ஆற்றல், அன்னப்பட்சிக்கு உள்ளது என்று பழந்தமிழ் இலக்கண நூல் வாயிலாக அறிகிறோம். உத்தமமான மாணாக்கர், அன்னப்பட்சியைப் போன்றவர்கள். அவ்வாறே, பகுத்தறிவு படைத்த மனிதர்களும் சமுதாயத்திலுள்ள நல்லவற்றை மாத்திரம் தம்மோடு அணைத்துக் கொள்ளவும்; கெட்டவற்றை விலக்கிக் கொள் ளவும், தமது பகுத்தறியும் திறனைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். இந்நிலையை இளையோர், சிறுவயதிலிருந்தே விழுமியங் கள் சார்ந்த கல்வியை மாணவப் பருவத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்ளக் கல்வித் திட்டத்தில் வாய்ப்புக்கள் வழங்க வேண்டும்.

மேலும் மனிதர்கள் தம்மிடம் இயல்பாகவே உள்ள பகுத்தறிவை; நல்லவை கெட்டவை பிரித்தறியும் திறனை; விருத்தி செய்து, சமுதாயத்தில் காணப்படுகின்ற நல்லவை, தீயவைகளைப் பிரித்து அறிய முயற்சிக்க வேண்டும். மக்களில் பதர்கள் ஆக உள்ள கயவர்களை இனங்கண்டு, அவர்கள் காட்டும் வெளிப்பகட்டுக்களிலிருந்து தப்பித்துக்கொள்ள; இந்தப் பகுத்தறியும் திறன், மனிதர்களில் வளர்க்கப்பட வேண்டியது அவசியமும் அவசரமும் ஆகும்.

## மனதை அடக்கிக்கொண்டே இருக்க வேண்டும்

அது ஒரு புத்த மடாலயம். அந்த மடாலயத்தின் தலைமைத் துறவியாக இருந்தவர், மிகவும் அனுபவம் வாய்ந்தவர். அவரிடம் பலரும் துன்பங்களைக் கடக்கும் வழி உள்ளிட்ட பலவற்றை அறிந்துகொள்வதற்காக வருவார்கள். அன்றும் அவரைப் பார்க்க ஒரு வியாபாரி வந்திருந்தார். அவர் அந்தத் துறவியிடம், “சுவாமி... என்னுடைய மனம் என்னுடைய பேச்சைக் கேட்பதே இல்லை. அதை நான் எவ்வளவு கட்டுப்படுத்தினாலும் அதற்கு பலன் கிடைப்பதில்லை” என்று கூறி அங்கலாய்த்துக் கொண்டார்.

அப்போது துறவியின் அருகில் அவர் வளர்த்து வந்த குரங்கு ஒன்று வந்தது. வியாபாரிக்கு உணவளிக்க விரும்பிய துறவி, தன் காலடியில் இருந்த ஒரு கம்பை எடுத்து, குரங்கின் தலையில் ஒரு அடி அடித்துவிட்டு, “வந்திருப்பவர்களுக்கு இலை போடு” என்றார். குரங்கு வாழை இலையை எடுத்துவந்து போட்டது. துறவி மீண்டும் தன் கையில் இருந்த கம்பால் குரங்கின் தலையில் அடித்துவிட்டு “சாப்பாடு எடுத்து பரிமாறு” என்றார். குரங்கு சாப்பாடு எடுத்துவந்து பரிமாறியது. அதன் பிறகும் அந்தக் குரங்கின் தலையில் ஒரு அடி வைத்தார், துறவி. இப்போது வியாபாரிக்கு வருத்தமாக இருந்தது. துறவியிடம், “சுவாமி... நீங்கள் சொல்வதை எல்லாம் அந்தக் குரங்கு செய்துகொண்டுதானே இருக்கிறது. பிறகு எதற்காக அதை அடித்துக்கொண்டே இருக்கிறீர்கள்?” என்று கேட்டார். ஆனால் அதற்கு அந்தத் துறவி எந்தப் பதிலும் சொல்லவில்லை. சற்றே புன்னகைத்துவிட்டு, தன் கையில் இருந்த சிறிய கம்பை, தான் அமர்ந்திருந்த இருக்கையின் கீழ் ஒளித்து வைத்தார்.

சற்று நேரம் அமைதியாக இருந்த குரங்கு, இப்போது அங்கும் இங்கும் தாவியது, வியாபாரி சாப்பிட்டுக்கொண்டிருந்த இலையில் தன்னுடைய வாலை விட்டு ஆட்டியது. வியாபாரியின் தோளில் அமர்ந்துகொண்டு அவரது காதைப் பிடித்துத் திருகியது. சாப்பிட்டுக் கொண்டிருந்த இலையை இரண்டாகக் கிழித்துப் போட்டது. அதன் சேட்டையைப் பொறுக்க முடியாத வியாபாரி, “சுவாமி... இந்தக் குரங்கின் தொல்லை தாங்கமுடியவில்லை. அடி போடுங்கள்” என்றார். உடனே துறவி, தான் மறைத்து வைத்திருந்த கம்பை எடுத்து குரங்கின் தலையில் அடித்தார். அது போய் ஒரு மூலையில் அமைதியாக அமர்ந்துகொண்டது.

இப்போது துறவி சொன்னார். “இந்தக் குரங்கைப் போலத்தான் மனித மனங்களும், ‘நாம் சொன்னதை எல்லாம் மனம் கேட்டு நடக்கின்றதே’ என்று விட்டுவிடக்கூடாது. ஆன்மிகம் எனும் ஆயுதத்தை வைத்து மனதை அடக்கவேண்டும். சற்று ஓய்வு கொடுத்தாலும் மனிதனின் மனம் தாவத் தொடங்கிவிடும்” என்றார் துறவி. அதைக்கேட்டு வியாபாரி மனம் தெளிந்து புறப்பட்டார்.

*அதிகமாக வளைபவன் ஆபத்தானவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனுநீதி, அரசநீதி, தெய்வநீதி வழுவா சான்றோர்கள் வரிசையில்

## தெய்வ நீதி கோரித் தவமிருந்த துருவன் விண்ணில் பிரகாசிக்கிறான்

— *திரு மூ. சிவலிங்கம்* அவர்கள் —

பாரத நாட்டில் பரந்தாமனையே போற்றி வழிபட்ட அரசனின் பட்டத்து ராணி அல்லாத மனைவியின் வயிற்றில் பிறந்தவன் துருவன் என்னும் தவசீலன். மனு என்னும் நீதி வழுவாத மன்னனின் குடும்பப் பரம்பரை யால் பெற்ற நிதான சிந்தனையும் பரந் தாமனையே போற்றி வழிபடும் தெய்வீக உற வால் பெற்றோரின் வழிகாட்டலும் சிறுவனான துருவனுக்கு உறுதுணையாக அமைந்தன. துருவன் தனது ஐந்து வயதில் மழலை மொழி பேசித் தளர்நடை நடந்து வஞ்சனை ஏதுமறியாத பிஞ்சுப் பருவம் வழிகாட்ட இறை அருட் தூண்டலால் மன்னனான தந்தையின் மடி மீதமரச் செல்கிறான்.

அச்சமயம் தனது வஞ்சகம் குடி கொண்ட நஞ்சிலும் கொடிய பாதக நோக்கில் அருகேயிருந்த பட்டத்துராணி துருவனைத் தடுத்து நிறுத்தினாள். பால்மணம் மாறாத பிஞ்சு உள்ளம் செய்வதறியாது திகைக் கிறது. பட்டத்து ராணியானவள் துருவனை நோக்கி நீ அரசனின் மடியில் ஏறத் தகுதி அற்றவன். என் வயிற்றிற் பிறந்த பிள்ளைகள் தான் எதிர்கால அரச பதவி பெறும் வகையில் சிறுவயதில் மன்னனின் மடிமீதமரலாம். பின் அவனே பட்டத்து அரசனுமாகலாம் எனக் கடிந்து கூறினாள். வஞ்சகியின் இரக்கமற்ற வார்த்தைகளைக் கேட்ட துருவன் அவளை நோக்கி நான் என்ன செய்ய வேண்டுமென்று மழலை மொழியில் கேட்டான். துருவனின் மழலை இன்பத்தை நோக்காத பாதகி "நீ காட்டிற் சென்று இறைவனை நோக்கித் தவம் இருந்து என் வயிற்றிற் பிறந்து வந்து உன் காரியத்தை நிறைவேற்று" என்றாள். காட்டில் தவஞ் செய்து வரம் பெறுமாறு அவள் ஏளன மாகக் கூறியதை வஞ்சகமாக அறியாத துரு வன் தூய இறையருட் தூண்டலால் தவம் இருக்கச் சித்தங்கொண்டான். மனித நீதி தவறிய பட்டத்து ராணியின் தூண்டுதலும் அரசநீதி செலுத்த வேண்டிய மன்னனின் மௌனமும் துருவனைத் தெய்வ நீதியை நாட வைத்தது.

துருவனின் பிஞ்சு வயதிலும் தமது பரம்பரையின் முன்னோரான மனுவின் வழி காட்டலும் நெஞ்சில் குடிகொண்ட பரந்தாம னின் தூய சிந்தனையும் செயற்பட வைத்தது. தனது பெற்ற தாயிடம் தனது சிந்தனையைத் தெரிவித்து தவஞ் செய்யும் நோக்கத்திற்கான அனுமதியையும் பெற்றான்.

தமது தவநிலைக்கு ஏதும் தீங்கு நேராத பரந்த காட்டில் சுற்றுச் சூழல் சிறப் படைந்த பசுமை மர நிழலைத் தரும் தெய்வீக மரமொன்றினை நாடினான். "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்னும் முதுமொழி பால கன் துருவனின் தவநிலைக்கு இனிதாக அமைந்தது. பாலனாக இருந்தபோதும் முற் றவப் பயனாகப் பரந்தாமனின் திருவருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்ட ஒற்றைக்காலில் நின்று ஊன் உறக்கம் ஏதும் மறந்து இறையருளையே நெஞ்சில் நிறுத்திக் கூப்பிய கரங்களுடன் கடுந்தவ நிலையில் தியானித்தான்.

இறைஞ்சும் பக்தர்களுக்கு ஏற்றவாறு வரமளிக்கும் நாராயணமூர்த்தி பிஞ்சுப் பாலகனான துருவன் வேண்டுதலுக்காக அவன் தவநிலையில் முன் காட்சி தந்தார். "துருவா உன் கடுந்தவத்தை மெச்சினேன். உனது வேண்டுதலுக்காக என்றும் மகிழ்வைத் தரும் உயர்ந்த பதவியைத் தந்தேன். நீ என்றென்றும் நித்தியமான துருவ உலகில் உயர்வான இடத்திலிருந்து நன்கு பிரகாசிப்பாய். உன் துருவன் என்ற பெயரில் இவ்வுலகின் வட தென் பகுதிகள் வட தென் துருவம் என்று யாவராலும் அழைக்கப்படும். உனது துருவ உலகின் பிரகாசம் என்றென்றும் நிலைத்திருக்கும். அதன் முன் நீ பாலகனாக இருப்பதால் முதலில் உன் பெற்றோரிடஞ் செல். உன் தந்தை உன்னை அரசனாக்குவான். நீ நல்லறம் பேணிச் செங்கோலோச்சி மக்களுக்கு அரிய சேவை செய்வாய். பின் என்னுடன் இணைந்து துருவனாக விண்ணில் பிரகாசிப்பாய் என்று கூறியதும் மறைந்தருளினார்.

பரந்தாமனின் பரிவுரை கேட்டதும் பெற்றோரின் பாச உணர்வால் தமதில்லம் ஏகினான். துருவனைக் கண்டதும் துருவனின் தவப்பயனை உணர்ந்த யாவரும் நன்கு வரவேற்று உபசரித்தனர். துருவன் மீது வஞ்சம் செலுத்திய பட்டத்து ராணியும் அவளின் மகனும் தீய பாவ விதியால் ஏற்கெனவே மாண்டனர். துருவன் தந்தையின் வழிகாட்டலில் அரச கடமைகளுக்கான நெறிகளையும் கல்வி கலைகள் மற்றும் பயிற்சிகளையும் நன்கு கற்றுக்கொண்டான். உரிய வயது வந்ததும் அரசன் துருவனுக்குத் திருமணம் செய்து வைத்து பட்டத்து மன்னனாக முடிசூட்டினான். தந்தையின் பெரு விருப்புடன் அரச பொறுப்பேற்ற துருவன் தமது பரம்பரை முன்னவரான மனுவின் அற வழிச் சென்று செங்கோலோச்சினான்.

துருவன் மனுநீதி தவறாது செங்கோலோச்சவும் குடிமக்கள் யாவரும் சகல பேறுகளையும் பெற்று நலமுடன் வாழ்ந்தனர். துருவன் தமது இராச்சியத்தில் மக்கள் சேவையைப் பெரிதும் மதித்தது போலத் தேவர்களுக்கான பல வேள்விகளையுஞ் செய்து சிறப்பான ஆகுதிகள் வழங்கித் தேவர்களையும் மகிழ்வித்தான்.

இதனால் முன்னோரான மனுவின் நீதிநெறியும் துருவன் செய்த வேள்விகளில் மகிழ்ந்த குபேரனின் தூண்டுதலும், முற்றவப் பயனும் வழிகாட்ட அரசியலைத் துறந்து கடுந்தவமிருந்தான். துருவனின் கடுந்தவத்தால் கவரப்பட்ட நாராயணமூர்த்தி தன்னுடன் இரண்டறக்கலக்கச் செய்து துருவ உலகில் விண்மீனாகப் பிரகாசிக்கச் செய்தார்.

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| யூலை | 13 | ஆனி 29 | செவ்வாய் | மாணிக்கவாசகர் |
| யூலை | 16 | ஆனி 32 | வெள்ளி | அருளம்பலவர் தங்கம்மை |
| யூலை | 24 | ஆடி 08 | சனி | பட்டினத்தடிகள் |
| ஆகஸ்ட் | 14 | ஆடி 29 | சனி | மயில்வாகனம் சுவாமிகள் |
| ஆகஸ்ட் | 15 | ஆடி 30 | ஞாயிறு | சுந்தரமூர்த்தி |

*நேர் வழியில் அடைய முடியாததை ஒருநாளும் குறுக்குவழியில் அடைந்துவிட முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைபணி

– திரு செ. சிவபாதம் அவர்கள் –

ஆன்மா திரோதான சக்தியின் கட்டுப் பாட்டுக்குள் இருந்து ஆணவ முனைப்பில் வாழ்தல் பெத்த நிலை எனப்படும். இந்த நிலையில் இறைவன் ஆன்மாவாய் ஒற்றுமைப் பட்டு நிற்பான். இப்படியான தன்மையில் ஆன்மா வாழும்போது முற்பிறப்பில் தான் செய்த தவப்பயனால் இப்போது இருவினை யொப்பு மலபரிபாகம் ஆகிய அதி தீவிர சத்தினிபாதம் ஆகிய பக்குவநிலை வரும் போது இறைவன் இவரை தடுத்தாட்கொள் ளும் நோக்கமாக மானிட உருவத்தில் குரு வடிவம் தாங்கி வந்து இவருக்கு திருவடி தீட்சை செய்து இவரது பசு கரணங்களை பதி கரணங்களாகவும் சிற்றறிவை ஞான அறிவாகவும் மாற்றி ஞான நூலை உபதேசம் பண்ணி இவரை சீவன்முத்தராக மாற்றி இவரது உள்ளமாகிய ஆலயத்தில் அன்று தொடக்கம் இவரது பெயரால் தாமே வாழ்ந்து செயற்கரிய செயலைச் செய்வார் என்பதை செயல் முறையில் காட்டுவதே திருவாதவூரடி கள் புராணமாகும். (இவை பின்வருமாறு)

பாண்டி நாட்டிலே திருவாதவூர் என் னும் பதியிலே சம்புதாசிரியர் இவர் மனைவி சிவஞானவதியாருக்கும் ஓர் தவப் புதல் வராகத் தோன்றினார். இவருக்கு திருவாதவூரர் என்னும் திருப்பெயரைச் சூட்டி அழைத் தார்கள். தமது இளமைப் பருவத்திலேயே தாம் கற்கவேண்டிய கலைகள் எல்லாவற்றை யும் கற்று தெளிவடைந்தார். இதனை அறிந்த பாண்டியன் இவரை அழைத்து கௌரவித்து தென்னவன் பிரமராயன் என்னும் பட்டம் கொடுத்து தனது அரசியல் பணியை சிறந்த முறையில் நடாத்தும்படி முதல் மந்திரிப் பதவியைக் கொடுத்து தன்னுடன் வைத்திருந் தான். இப்படியாக முதல் மந்திரியாகிய திரு வாதவூரர் பாண்டியனின் அரசியல் பணியை சிறந்த முறையிலேயே செய்து வருகின்ற காலத்தில் திருவாதவூரரின் உள்ளம் தகுதி யான குருவைத் தேடிப் பெறுவதிலேயே ஈடு பட்டிருந்தது. அப்போது பாண்டியன் குதிரை கள் கொள்வனவு செய்யும் நோக்கமாக பெரு மளவு பொன்னை திருவாதவூரரின் கையில் கொடுத்து அனுப்பினான்.

அரசனின் எண்ணப்படி குதிரைகள் கொள்வனவு செய்யச் சென்ற திருவாதவூரர் திருப்பெருந்துறை என்னும் புண்ணியத் தலத்தையடைந்தார். அப்போது அங்கே குருந்த மரத்தடியில் அடியார்கள் பலர் சூழ்ந்திருக்க ஞானாசிரியர் ஒருவர் வீற்றிருப்பதைக் கண்டார். திடீரென சிவிகையிலிருந்து இறங்கி அவருக்கு முன்பாக வந்து வணங்கி, தாங்கள் அடி யேனை இப்போது ஆட்கொள்ள வேண்டும் என்று வணங்கி நின்றார். அப்போது குரு வாகிய சிவன் சிவாயநம என்ற பஞ்சாட்சர மந்திரத்தை அவரது காது வழியாக உப தேசித்து மனம் அமைதிபெறும்படி செய்து திருவாதவூரரின் சிரசின்மேல் திருவடி தீட்சை செய்து அவரது பசு கரணங்களை பதி கரணங்களாகவும் சிற்றறிவு ஞான அறிவாக வும் படிமாற்றி அமைத்து மேலும் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்த ஞானத்தை உபதேசித்து அன்பனே உமது உடல், பொருள், ஆவி மூன்றும் உம்முடையதல்ல. நம்முடையனவாகும். இங்கே உனைப்போல மானிட உருவத்தில் உள்ள எமது குருவடிவத்தை உமது உள்ளமாகிய ஆலயத்தில் இருத்துவாயாக. இது சைவ சித்தாந்தத்தின் இறுதி நிலையாகும் என்று கூற திருவாதவூரர் கேட்டு இக் குருவடிவத்தை தமது உள்ளமாகிய ஆலயத்தில் இருத்தினார். அப்போது குருவாகிய சிவன் இவரது உள்ளமாகிய ஆன்மாவை தனது கட்டுப்பாட்டுக்குள் அடக்கிவிட்டார்.

அப்போது திருவாதவூரர் தன்னை மறந்தார். தன் நாமம் கெட்டார். தலைப்பட்டார். அன்று தொடக்கம் குருவாகிய சிவன் திருவாதவூரடிகளின் பெயரால் அவரிடத்தில் வாழத் தொடங்கிச் செயற்கரிய செயல்களைச் செய்யத் தொடங்குகிறார். இதை சிவஞான போதம் 10ஆம் சூத்திரம் ஏகனாகி இறைபணி நிற்க என்று கூறுகிறது. (அவை பின்வருமாறு)

சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனையாண்ட அத்தன் என்று கூறுவதையும் சிந்திப்போமாக.

கயல் மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக் கலந்தாண்டலுமே
அயல் மாண்டு அருவினைச் சுற்றமும் மாண்டு அனியின் மேல்
மயல் மாண்டு மற்று உள்ள வாசகம் மாண்டு என்னுடைய
செயல் மாண்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

*பொ.ரை:*

அடியேனை கயல்மீன் போன்ற கண்களையுடைய அம்மை பாகன் சிவன் அத்துவிதமாய் என்னை ஆண்டருளியவுடன் பூமியிலுள்ளவர்களின்மேல் உள்ள பற்றும் ஒழித்து வினையால் வரும் சுற்றத்தார் உறவும் ஒழிந்து நெஞ்சின்கண் உள்ள மயக்கமும் ஒளிந்தும் எஞ்சியுள்ள சொல்லின் செயலிழந்து உடம்பின் செய்கையும் இல்லாமல் போன விதத்தை பாடி ஆடுவோம். (திருத்தெள்ளேணம் 11)

அன்றே என்தன் ஆவியும் உடலும் உடமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ எண் தோள்முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே.

*பொ.ரை:*

எண்தோளும் முக்கண்ணும் உடைய சிவனே என்னை ஆட்கொண்ட அக்காலத்திலே தாங்கள் என் உடம்பு ஆன்மா பொருள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளவில்லையோ இப் போது எனக்கு துன்பம் உண்டோ நீ நல்லது செய்யினும் தீது செய்யினும் நானோ இதற் குப் பொறுப்பு (இல்லை) நன்மையும் தீமையும் உன்னைப் பொறுத்தது என்று கூறுவதைச் சிந்திப்போம். (குழைத்தபத்து 33)

திருவாசகமும் திருக்கோவையார் என்னும் அருட்பாடல்களைப் பாடியது.

ஈழநாட்டிலுள்ள புத்தகுரு சிதம்பரம் சென்று புத்த சமயம் மெய்ச் சமயமென நிலைநாட்ட வந்தான். அப்போது இப் புத்த குருவுடன் சோழ அரசனும் கல்விமான்களும் சிவனடியார்களும் கூடி இருக்கும் சபையில் திருவாதவூரர் சமயவாதம் செய்து இவர்களை பேச்சு வல்லமை இல்லாத ஊமைகளாக்கி பின்பு ஊமைத் தன்மையை நீக்கி பேசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமையைக் கொடுத்து புத்தசமயம் பொய்ச்சமயம், சைவசமயமே மெய்ச் சமயம் என்று நிரூபித்துக் காட்டி இவர்களையும் சைவசமயத்தவராக மாற்றி ஈழநாட்டரசரின் மகளின் ஊமைத்தன்மையை நீக்கிப் பேச்சு வல்லமையைக் கொடுத்து இவரையும் சைவ சமயத்தவனாக மாற்றி சைவத்தை வளர்த்தார்.

இப்படியாக பெரியபுராணத்தில் கூறப் படும் 63 நாயன்மார்களின் உள்ளமாகிய ஆலயங்களில் இறைவன் வாழ்ந்து இவர் களின் பெயர்களினால் தமிழ் நாட்டில் செயற் கரிய செயல்களைச் செய்து சைவ சமயமே மெய்ச்சமயமென நிரூபித்துக்காட்டி சைவ மக்களையும் நிம்மதியாக வாழும்படி செய் தது இறைவன் செய்த இறைபணியாகும். ஆதலால் திருவாதவூரரின் எலும்பும், நாடி, நாளம், தோல், இரத்தம் சேர்ந்த உடம்பு சிவன் வாழும் ஆலயமாகும். ஆதலால் நாமும் எங்கள் உடம்பை ஊனுடம்பாக வைத்திருக்காமல் சிவன் வாழும் ஆலயமாக மாற்றி இறைபணி செய்து வையத்து வாழ் வாங்கு வாழ்ந்து மானிடப்பிறவியின் பயனை அடைவோமாக.

## நீங்கா நினைவில்...



அண்மையில் அமரத்துவம் அடைந்த வைத்திய கலாநிதி சி. இராசலிங்கம் அவர்களது மறைவு காலத்தின் வரையறைக்குட்பட்டது. அதனை யாராலும் மாற்ற முடியாது.

ஆனாலும் தாம் வாழ்ந்த காலங்களில் சமூகத் திற்கு ஆற்றிய பணியின் அளவுகோல் கொண்டு மதிப் பிடும்போது அண்ணாரின் மறைவானது ஒரு பேரிழப்பாகவே கருதவேண்டி உள்ளது.

வைத்திய கலாநிதி இராசலிங்கம் அவர்கள் மிக நீண்டகாலமாக சந்நிதியான் ஆச்சிரமத்தோடும், பேரவையோடும் நெருங்கிய தொடர்புகொண்டு ஆச்சிர மம் ஆற்றும் சகல பணிகளுக்கும் தன்னாலான ஆதரவை வழங்கி முன்நின்றுழைத்த பெருமகனார் ஆவார். ஒரு சில சமயங்களில் ஆச்சிரமத்தில் நடை பெற்றுக் கொண்டிருந்த இலவச வைத்திய பணிக்கு தனது சேவையை வழங்கி மருத்துவசேவை தடை பெறாமல் நடப்பதற்கு காரணமாக இருந்த ஒருவர் என்பதை ஆச்சிரமமோ பேரவையோ மறக்க இயலாது.

அத்தகையவரின் ஆன்மா சந்நிதி வேலவனது பாதார விந்தங்களில் சாந்தி அடைய சந்நிதி வேல வனைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*~சந்நிதியான் ஆச்சிரமம்~*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி

(தொடர்ச்சி...)

– திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள் –

மனித வர்க்கத்தை மூவகையாக பிரித்து சொல்லப்படுகிறது. மூன்று வகைப்பட்ட மனிதருக்கு மூன்று விதமாக வந்து அருள் தருகிறார் இறைவன். அந்த பக்குவத்திற்கு ஏற்றவாறு ஞானத்தை வழங்குகிறது இறைவன் திருவருள்.

சாமானிய மக்களை "சகலா" என்பர். இந்தச் "சகலநிலை"யிலே உள்ள பக்தர்களுக்கு இறைவன் மனித வடிவிலே குருவாகத் தோன்றி ஞானத்தை உபதேசிக்கிறார். அதாவது சாதாரண மக்களின் மாசுகளைப் போக்குவதற்காக அவதரிக்கின்ற ஆசாரியர்கள் எல்லாம் இறைவனுடைய சொரூபமாகும்.

இரண்டாவது பக்குவநிலையில் சற்று மேம்பட்டு நிற்கும் மக்கள் மாயை என்ற அழுக்கு நீங்கப்பெற்று, ஆணவம், கன்மம் என்ற இரண்டு மாசுக்களால் மட்டும் தடைப்படுகிறார்கள். இவர்கள் ஒருபடி மேலே நிற்பவர்கள். இவர்களுக்கு இறைவன் மூர்த்தியாக வழிபடும் உருவமாக நின்று அந்த வழிபாட்டினாலேயே ஞானம் தோன்றச் செய்து அவர்களை கடைத்தேற்கிறான்.

மூன்றாவது இன்னும் மேம்பட்டதுமான நிலையிலே இருப்பவர்கள் கன்மம், மாயை என்ற இரண்டு மாசுக்களும் களையப்பெற்று, ஆணவம் என்ற ஓர் அழுக்கு மட்டுமே எஞ்சி நிற்பவர்கள். மாயை தெளிந்து, கன்மத்தில் சிக்காமல் நிற்கும் பக்குவம் அடைந்தவர்களுக்கு இறைவன் அருவமாக உள்ளத்தினுள்ளே ஞானமயமாக நின்று, ஆணவக் களிம்பையும், நீக்கி திருவருள் புரிகிறார்.

மூன்று நிலைகளிலுமே இறைவனுடைய கருணையின் துணை கொண்டே "களிம்பு" நீங்குகிறது.

"களிம்பறுத் தான் எங்கள் கண்ணுதல் நந்தி"

(களிம்பு அறுத்தான்- அழுக்கை களைந்தான், கண்ணுதல்- கண் நுதல் நெற்றியில் கண்களை உடையவன், நுதல்- நெற்றி. எங்கள் கண்ணுதல், நந்தி- எங்கள் நெற்றிக் கண்களாகிய நந்தியெனும் சிவபெருமான். "கண்ணுதல் நந்தி" என்பது இரு பெயர் ஒட்டு. கண்ணுதலும் நந்தியுமாகிய சிவபெருமான் என்று பொருள்)

செம்பிலுள்ள களிம்புபோல உயிரின் அறிவை மறைத்திருக்கும் அழுக்கை எங்கள் நந்தியாகிய (சிவபெருமான்) நெற்றிக்கண் ஈசன் நீக்கியருளினான். எங்ஙனம் நீக்கினான்?

"களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்"

(அருட்கண்- ஞானக் கண்ணை இவ்விடம் அருள் என்றால் ஈசன் அருளால் தோன்றிய ஞானம், விழிப் பித்து- திறக்கச் செய்து)

அகக் கண்ணை விழிக்கச் செய்து உயிரின் இருளை நீக்கினான்.

"களிம்பணு காத கதிர்ஒளி காட்டிப்"

(களிம்பு அணுகாத- அழுக்கு வந்து பற்றிக் கொள்ள முடியாதபடி, கதிரொளி காட்டி- சூரிய ஒளி போன்ற தன் ஞானச் சுடரை ஏற்றிக்காட்டி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கிய இருட்டு மீண்டும் வராதபடி ஞானவழியை திறக்கச் செய்து, நந்தா விளக்கு அதாவது அணையாமல் எரிகிற சுடரை ஏற்றிக் காட்டினான் இறைவன்! அந்த ஒளி நிலைபெற்று விட்டது எப்படி?

"பளிங்கில் பவளம் பதித்தான் பதியே"

(பதி- இறைவன். பதியாகிய இறைவன் பளிங்காகிய ஆன்மாவிலே செவ்வொளியை நிலைபெறச் செய்து பவளத்தை பளிங்கினை பதிப்பது போல் பதிப்பித்து வைத்து விட்டான்.

உயிர் பளிங்கு போன்றது. அது ஒரு கண்ணாடி இந்தக் கண்ணாடியில் அழுக்குப் படிந்திருந்தது. அந்த அழுக்கைத் துடைத்து, இனி அந்தக் கண்ணாடியில் ஞான ஒளி பிரதிபலிக்கும்படி ஞானவிளக்கை ஏற்றி வைத்து, இந்த உடம்பாகிய அந்த வீட்டிலே அஞ்ஞான இருள் வராதபடி வாடா விளக்கு எரியும் வண்ணம் அருள் செய்கிறான் இறைவன்.

எண்ணெய் திரியினாலான சுடர் தீர்ந்து விடக்கூடியது. இறைவனோ பவளம் போல் வாடாத செவ்வொளியை உயிர் கண்ணாடியிலே பதித்து விட்டான். இது அவன் என்று பாடுகிறார் திருமூலர்.

களிம்பறுத் தான் எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான் அருட்கண் விழிப்பித்துக்;
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கில் பவளம் பதித்தான் பதியே.

சாதாரண நிலையிலே உள்ள மக்களுக்கு ஒரு குருவின் வடிவாக ஈசன் எழுந்தருளி வந்து பிரம்மோபதேசம் செய்கிறான். ஆணவம், கன்ம நிலையிலே நிற்போர்க்கு மூர்த்தி அவதாரத்தில் தரிசனம் தந்து வழிபாட்டின் பயனாக ஞானத்தைத் தருகிறான். ஞான உணர்வு நிலையிலே நிற்கும் பக்குவ ஆன்மாக்களுக்கு ஈசன் உள்ளத்தினுள்ளே அருவமாக இருந்து நந்தா விளக்காக ஞானச்சுடரை ஏற்றி வைக்கிறான்.

இந்த மூன்று நிலைகளும் ஆன்மாவின் பக்குவப்படிகள். முன்னேறிய போதும் நிலைகுலையக் கூடும். அப்போது மறுபடியும் தாழ்ந்த நிலைக்கு தக்கவாறு இறைவன் அருள்புரிவான். மேல் நிலை அடைந்த பின்னரும் அந்த நிலையை காப்பாற்றிக் கொள்ள இறைவன் அருளைப் பெற தொடர்ந்து வழிபடவேண்டும் என்று தவயோகி கூறுகிறார்.

இந்த உலகையும், இதன் இயல்புகளையும், உயிர் வர்க்கங்களையும் கடவுட் தத்துவத்தையும் நுட்பமாக ஆராய்ந்து சைவசமய ஞானிகள் நித்திய பொருட்கள் மூன்று என்று கண்டு சொல்லி இருக்கிறார்கள். அதாவது சாதுவதமாக இருக்கும் பொருட்கள் மூன்று. ஆரம்பமும் முடிவும் இல்லாத பொருட்கள் இந்த மூன்று என்று கண்டார்கள். இவை பதி, பசு, பாசம் இம்மூன்றையும் பற்றிச் சைவசித்தாந்த சாஸ்திரங்களில் "முப்பொருள் உண்மை" என்று மிகவும் விரிவாக வர்ணிக்கப்பட்டுள்ளது. திருமூலரும் தம்முடைய உபதேசத்தின் ஆரம்பமாக இந்த மூன்றையும் பற்றிக் கூறுகிறார்.

பதி என்பது இறைவன். பசு என்பது ஜீவன்களாக காணப்படும் உயிர்த்தத்துவம். பாசம் என்பது ஆன்மாக்களைச் சுட்டி நிற்கும் தலை. இந்த மூன்றும் நித்தியமானவை. அதாவது உயிரும் தலையும் இறைவனைப் போலவே அநாதித் தத்துவங்களாகும்.

இறைவனும் ஆன்மாவும் அனாதியாகக் கூடவே இருந்தும், உயிரானது இறைவனைக் காண முடியாமல் இருப்பதற்கும் காரணம் என்னவெனில் மூன்றாவது தத்துவமான பாசத்தினால்

*சிக்கனம் என்பது சிறியதொரு வருமானம் ஆகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டு அறியாமையில் அழுந்திக் கிடப்பதுதான்! இந்த அறியாமை நீக்கி உயிர்களுக்கு இறை உணர்வு எப்படி ஏற்படுகிறது. எப்படி ஏற்படக்கூடும் என்பதை தவயோகி கூறுகிறார்.

பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல், பசு பாசம் அனாதி;

(எனப்பகர்- என்று வகைப்படுத்திச் சொல்லப்படுகின்ற, அனாதி- ஆதியற்றது. எப்பொழுது ஆரம்பித்தது என்று சொல்ல முடியாதது)

பதி, பசு, பாசம் என்று சொல்லப்படுகின்ற மூன்றில் பதியாகிய இறைவனைப் போலவே, உயிரும் அதைப் பிணைக்கின்ற பாசமுமாகிய தலையும் அனாதியான பொருட் களாகும்.

இறைவனைப் போலவே இந்த உயிரும் அனாதியானது என்பது ஆகம சாஸ்திரம். பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகை மலங்களாகும். இந்த மும்மலம் பாசத்திலே கட்டுண்டு நிற்கிறது உயிர்ப்பசு.

ஆணவம் என்பது "நான்" என்கிற உணர்ச்சி எல்லாம் ஒன்று என்ற உண்மையை உணர்வொட்டாமல் தன்னைப் பிரித்து தான்வேறு என்று எண்ணும்படி ஆன்மாவைத் தூண்டும் அஞ்ஞானம்.

கன்மம் என்பது நல்வினை தீவினை என்கிற வேறுபாட்டை உண்டாக்கி உயிரை ஆட்டுகிற தத்துவம்.

மாயை என்பது பதார்த்தங்களைத் துய்க்கும்படி ஓர் இச்சையை உண்டுபண்ணக் கூடிய அழுக்கு. தெய்வ இச்சையிலிருந்து மாற்றிப் பொருள் இச்சையிலே மயங்கச் செய்யும் தத்துவம்.

பாசம் என்பது இந்த மூவகை மலங்களையோ
பதியினைச் சென்று அணுகாப் பசு, பாசம்

(அணுகுதல் - சென்று சேர்தல். அணுகா- சென்று சேரமாட்டா)

உயிரும் அதைப் பற்றியுள்ள பாசமும் இறைவனைச் சேரமாட்டா! இதையே மூலர் "பசு, பாசம் பதியினைச் சென்று அணுகா" என்கிறார்.

உயிரானது பிறப்பு இறப்புகளில் அகப்பட்டு இறைவனை அணுகமுடியாமல் பாசத்தில் அழுந்திக் கிடக்கிறது. இந்தப் பாசம் நீங்கி, அறியாமை அகன்று, உயிரானது உய்ய வேண்டும் எனில், அதற்கு இறைவனே வந்து ஆட்கொள்ள வேண்டும்.

பதி அணு கின் பசு, பாசம் நிலாவே

(நிலாவே- நில்லாவே, பதி அணுகில்- இப்படிக் கருணை கொண்டு வந்தருளினால் பசு பாசம் நிலாவே. உயிருக்கும் பாசத்துக்கும் உள்ள பூட்டு நில்லாமல் சுழன்று விடும். பாசப்பூட்டு கழன்று பசுவானது பதியை சார்ந்து விடும்.)

அறிவு மயமாக நிற்கின்ற பதியாகிய இறைவன் கருணையினால் நிரம்பியவன். ஆன்மாக்கள் மும்மலத்துள் அழுந்திக் கிடக்கின்றனவே என்று திருவருள் கொண்டு, ஞானம் வழங்கி, கடைத்தேற்றுகிறான்! இத்தகைய அருள் இல்லாதுபோனால் ஆன்மாவுக்கு பாசத் திலிருந்து விடுதலை கிடைக்காது. ஞானம் சித்திக்காது.

ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கு ஏற்ப இறைவனே இரங்கி வந்து ஞானம் அருளினாலன்றி உயிருக்கு இருளிலிருந்து உய்யும் வழி இல்லை.

*ஒருவர் உன்னைத் தாழ்த்திப் பேசும்போது ஊமையாய் இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியானவன் கருணையோடு பசுவை அணுகும்போது அதைப் பிணித்துள்ள தளை தானாகவே நீங்கி விடும்; பசுவும் மயங்கி நிற்காமல் மயக்கம் நீங்கி இறைவனை உணரும்.

பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி;
பதியினைச் சென்றணுகாப் பசு, பாசம்
பதியவை கின் பசு, பாசம் நிலாவே.

(தொடரும்...

---

## சைவ சமயம்

சமயம் என்ற சொல் நெறி, கொள்கை என்று பொருள்படும். வைதீக சமயங்களுள் சிவனை முழுமுதற் கடவுளாக ஏற்றுக்கொள்ளுஞ் சமயமே சைவ சமயம். உலகத்திற்கு ஆதி காரணன் சிவன் என்பதே இச் சமயத்தின் முடிந்த முடிபாகும். இது சுவேதாசுவதர உபநிடதம் கூறும் உண்மையாகும். உபநிடதங்களுள் ரிஷிகளாற் கூறப்பட்ட உண்மையே திருமுறைகளும் சைவ சமய சாஸ்திரங்களுமாகும். "எல்லா உலகமும் ஆனாய் நீயே", என்றும் "துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ துணையாய் என் நெஞ்சந் திறப்பிப்பாய் நீ" என்று திருநாவுக்கரசு நாயனார் கூறியதும் சிவனே எல்லாவற்றுக்கும் உரியவர் என்பதை விளக்குவனவாகும்.

உலகத்தை இயக்கும் பரம்பொருளாகிய சிவனே அறிவுடைய பரம்பொருள் என்பது சைவ நூல்களின் துணிபு. சைவ சித்தாந்தம் சற்காரிய வாதத்தை அடிப்படையாகக் கொண்டது. "இல்லது தோன்றாது உள்ளது அழியாது" முத்தொழில்களையும் செயற்படுத்தும் இறைவனாகிய சிவன் ஒருவனே சைவ சமயிகளுக்கு உரிய கடவுளராவர். சைவ சித்தாந்தத்தில் தத்துவங்கள் பதி, பசு, பாசம் என்பனவாகும். இத் தத்துவங்கள் மூன்று நித்திய பொருள்களாகவுள்ளதுடன் ஒன்றுக்கொன்று சமமில்லாதனவையாகவும் காணப்படுகின்றன.

சைவத்தில் இறைவனுக்கு உருவமுண்டு. இதனைச் "சொருப நிலை", "தடத்த நிலை" என இருவகையில் அடக்குவர். தடத்த நிலையில் இறைவன் பராசக்தி, ஆதிசக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என ஐந்து நிலைகளாகப் பிரிந்து செயற்படுவதைக் காணலாம்.

சர்வசங்காரம் செய்யும் உருத்திரனைச் சிவன் என்று சைவசமயிகள் வணங்குகின்றனர். யாவற்றையும் படைப்பவனையும் யாவற்றையும் காப்பவனையும்விட யாவற்றையும் அழிப்பவனே இறுதிக் காலத்தில் நிலைத்து நிற்கும் அழியாப் பரம்பொருள் என்பது உலக உண்மை. அதைத் தான் பிரம்மா விஷ்ணுக்களின் தலை ஓடுகளைத் தன் கழுத்திலே சிவபெருமான் தாங்கியிருக் கின்றார் என்பதும் உலகம் முழுவதையும் நீறாக்கி எரித்து அந்த நீற்றை உடலில் பூசியிருக்கிறார் என்றும் எரிந்த சுடலையிலே நடனமாடுகிறார் என்ற கருத்தும் சைவத்தில் போற்றப்பட்டது. முத்தொழிலையும் செய்பவர்களில் முழுமுதற் பரம்பொருள் சிவனே என்பது இந்த அடிப்படையிலே தோற்றமாகியது.

ஒருவன் செய்த பாவ புண்ணியங்கள் அவனைச் சூழும். அதனை மாற்ற முடியாது என்ற கோட்பாடு பௌத்த சமணக் கோட்பாடாக இருக்க சைவசமயம் அதை சிவ வழிபாட்டால் மாற்றலாம் என நிறுவியது. மார்க்கண்டேயர் வரலாறு இதில் முக்கியமானது. ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதியாக விளங்கும் சிவன் இவ்வுலக உயிர்களுக்கு ஒப்பற்றவராக விளங்குவதால் சைவசமயம் மேன்மைகொள் நெறி சார்ந்த சமயமாக என்றும் நின்று நிலவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் கருணை

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

உலகம் நியதி தவறாமல் சுற்றிக் கொண்டிருக்கிறது. இயற்கை பருவம் தவறாமல் தன் செயல்களை ஆற்றிக்கொண்டிருக்கின்றது. உலக நியதியில் பிசகு ஏற்படுவது இல்லை. பிசகு என்று ஒன்று எமக்குத் தெரிந்தால், அது எம்முடைய பிசகே அன்றி உலகத்தினுடைய பிசகு அல்ல.

எமது மனம் குழப்பமடைந்திருக்கும் போது நாம் காணும் காட்சி வேறு, மனம் தெளிந்தபின் காணும் காட்சி வேறு பிசகு காட்சியில் அல்ல. குழப்பம் அடைந்த எமது மனதிலேதான்.

மனிதன் கலக்கம் அடையும்போது குதர்க்க நியாயம் பேசுவான். கலக்கம் தெளிந்தால் சந்தேகம் தீரும். குழப்பம் தீரும், மனம் சாந்தி அடையும். இதற்கு இறை சிந்தனை அவசியம். தியானம் பயிலல் நன்று.

இவ்வுலகத்திற்கு நாம் வருமுன்னரேயே நாம் இப்பூவுலகில் வாழ எமக்கு வேண்டிய எல்லாவற்றையும் ஒரு குறையுமில்லாமல் நமக்கு முன்னே ஆக்கி வைத்து பின்னர்தான் இறைவன் எம்மை இப்பூவுலகில் இறக்கி விடுகின்றான்.

இவ்வளவு தூரம், தமது பெருங் கருணையால் எம்மை காக்கும் இறைவனின், மகா தயாள குணத்தை ஒரு கணம் சற்று நிதானமாகச் சிந்தித்தால் போதும் இறைவன் மேல் எமக்கு பக்தி பிறப்பதற்கு.

இனி, உலகிலே இறைவன் எமக்குத் தந்தருளிய சகலதையும் நல்வழியில் பயன் படுத்தி நற்பயன் பெறுவது எமது கையிலும் தங்கியிருக்கின்றது. எல்லாமே "விதி" என்று கூறி, அந்தப் போர்வையின் கீழ் நாம் வாளா விருந்தால் எமது எதிர்காலம் என்னாவது? எமது பிறவியே வீணாகிப் போய்விடாதா?

நாம் அடுத்தவருக்கு ஒரு சிறு உபகாரம் செய்தால் அதற்கு பிரதிபலனை எதிர் பார்ப்பது வழக்கம். பிரதிபலன் கிடைக்கா விட்டால், அவர்களை நன்றி கெட்டவர்களாக் கருதி, வெறுக்க ஆரம்பித்து விடுகின்றோம்.

இது இவ்விதமிருக்க எம்மை எல்லாம் படைத்து இமைப்பொழுதும் மறவாமல் காத்துவரும் இறைவனுக்கு நாம் உபகாரம் செய்யாவிட்டால், நாம் இறைவனுக்கு நன்றி கெட்டவர்களாக ஆகி விடுவோம் இல்லையா!

ஆனால், இறைவன் சலமிலன், சங்கரன், எம்மை விருப்பு வெறுப்போடு அவன் நடாத்துவதில்லை. எல்லோர்க்கும் சமமாகக் கருணை மழை பொழியும் அருங்குணம் உடையவன் இறைவன். அது அவன் பெருங் குணம்.

எனவே, நாம் துன்பம் வந்துற்றபோது மாத்திரமல்லாது, இன்பம் வந்தெமை மகிழ் விக்கும்போதும் இறைவனைத் தஞ்சமெனக் கொள்ள வேண்டும். அவ்வாறு நிற்பின் நாம் ஒரு பொல்லாப்புமில்லாமல் வாழலாம்.

மனம் நொந்து தளர்ந்த நிலையில், இறைவன்பாற் கொள்ளும் சரணாகதியை தவிர மனக்கிலேசம் தீர்க்க வேறென்ன வழி! இந்த உண்மையை யாம் நினைத்து நடந் தால் நாம் உய்வது நிச்சயம்.

எம்மைப்பற்றி சற்று வித்தியாசமாகச் சிந்தித்துப் பாருங்கள்.

*சிக்கனமும் சேமிப்பும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் இரு கருவிகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எமது மனதைக் கொண்டு வாழ் கின்றோம். அதனால்த்தான் "மனம்போல் மாங்கல்யம்" என்று பெரியோர் சொன்னார் களோ என்னவோ!! மனம் எம்மை ஆளாமல், நாம் மனதை ஆளுவோமேயானால், பூத்து மலரும் நறுமண மலர்போல் எமது வாழ்வும் அமையும்.

ஆராய்ந்து பார்த்தால் இரு மாறுபட்ட தன்மையான உணர்வுகள் எம் மனதிலே உள்ளதை யாம் அறிவோம். ஒரு பக்கம் மகிழ்ச்சி, திருப்தி, அன்பு, ஒற்றுமை போன்ற பசுமையான உணர்வுகள் இருப்பதைக் காண லாம்.

மறுபக்கம் பார்த்தால், பகை, சினம், வெறுப்பு, கோபம், வஞ்சனை, சூதுவாது போன்ற புன்னெறி உணர்வுகளும் நீர்க்குமிழி போல் எமக்குள் தோன்றி மறைவதைக் காண லாம். இப் பல்வகையான மாறுபட்ட உணர்வு களும் தோன்றி மறையும் தளம் எமது ஒரே ஒரு மனம்தான்.

இம் மாறுபட்ட உணர்வுகளால் எமது மனம் சமநிலையை இழந்து அவஸ்தைப் படுவதையும் யாம் அறிவோம். இந்நிலை அகல நாம் எண்ணங்களை வைத்து கால் பந்து விளையாடும் எமது மனதை அந்த விளையாட்டரங்கினின்று எடுத்து ஆத்மாவின் பிரசாந்தமதுரமயமான வெளி அரங்கில் வைத்து வாழ முயன்றால், தான் நாம் மனித னாக வாழ முடியும்.

மது, மாமிசம், விபசாரம், கொலை, களவு, கொள்ளை, இலஞ்சம் போன்ற மகா பாதகங்களை அடி மனதிலிருந்து அறவே அகற்றி உண்மை பேசி தர்மத்தின் வழி நடக்க நாம் முயல வேண்டும். மனதில் அசுத் தங்களை வைத்துக்கொண்டு, இறைவனை வழிபட்டால், இவ் வழிபாட்டால் நன்மைபெற முடியாது.

எமக்கு மனித ஜன்மம் கிடைத்திருப் பது எதற்கு என்று ஆழ்ந்து சிந்தித்தால், அது பஞ்சமா பாதகங்களைச் செய்து ஐம் பொறிகளையும் கெடுப்பதற்கல்ல. கிடைத்த ஜன்மத்தை ஈடேற்றுவதற்காகவே என்றே பதில் கிடைக்கும். எமது ஜன்மத்தில் பாவக் கறை படிய யாம் விடவேகூடாது. எமது மனமானது ஆத்மீக சிந்தனையில் உயரப் பறந்தாலும் நாம் வாழும் வரை இவ்வுலகிலே நற்கருமங் களைச் செய்தேயாக வேண்டும்.

வானம்பாடி, வானத்தில் பறந்து திரி யும் பறவை ஆனாலும், பூமியில் இறங்கித் தான் இரையைத் தேடுகின்றது. அதேபோன்று தான் மனிதன் தனது மனதை இறைவன்பாற் செலுத்தினாலும் நாம் ஆற்றும் கருமங்களை யும் நல்ல முறையில் ஆற்ற வேண்டும்.

ஆகாய விமானம் பூமியில் சிறிது நேரம் ஓடிய பின்னர்தான் மேலே எழுந்து பறக்கின்றது. விமானம், மேல் எழுந்து பறக் கின்ற சக்தியும், வேகமும் அது தரையில் ஓடுகின்ற ஓட்டத்திலிருந்துதான் பெறப்படு கின்றது.

எனவேதான், பூவுலகில் நாம் வாழும் வாழ்க்கையை மனச்சாட்சிக்கு அமைய முறையாக வாழ்ந்து முடிப்போர்க்குத்தான் மேலான உயர்நிலை கிட்டும். இவர்களே உத்தம மனிதர் எனப்படுவர். இல்லற தர்மம் மூலம் மனிதன் முதல் நிலை அடைய வாய்ப்பு நிறைய உண்டு. அதற்கு இல்லறத்தை நாம் நல்லறமாகக் கொண்டு வாழ வேண்டும்.

இதிகாசங்களில் இராமரும், கிருஷ்ண ரும், இல்லறவாசிகளாகவே வாழ்ந்து எமக்கு இல்லற தர்மத்தை உணர்த்தினார்கள். கர்ம யோக மார்க்கத்தை முறையாகப் பின்பற்றி னால், சம்சார சாகரத்தை வெகு சாதுரிய மாகத் தாண்டி விடலாம் என்பது ஞானிகளின் கருத்து.

*பிறரை நம்பி வாழ்பவருக்கு வறுமை என்றும் இருந்துகொண்டே இருக்கும்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தனது சொந்தக் கடமையிலிருந்து தேசக் கடமை வரையில் உள்ளது. இவற்றை ஆற்றும் வழியிலே எமக்கு ஏற்படும் தடைகளைத்தான் நாம் வாழ்க்கைப் பிரச்சினைகள் என்கின்றோம்.

தெய்வநம்பிக்கை எம் சித்தத்தில் இருக்குமேயானால், எமது துயர்கள் இறை அருளால் ஆதவனைக் கண்ட பனிபோல் அகன்றுவிடும். பன்றிக் குட்டிகளுக்கும் தாயாக வந்து பால் சுரந்த பரமன் எம்மேல் பராமுகம் காட்டுவானா? கிடையாது. எனவே இறைவன் கருணை எம்மேல் பொழியும் என்ற நம்பிக்கையோடு, தூய மனதோடு, எமது கடமைகளை ஆற்றுவோம். பயனைப் பெறுவோம் முயற்சிப்போமா?

## கடமையே கண்ணியமாய்.....

வைத்திய கலாநிதி அமரர் சி. கதிரைவேற்பிள்ளை அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமம் ஆரம்பித்த காலம் முதல் ஆச்சிரம வளர்ச்சிக்கு தன்னாலான முழு ஆதரவை வழங்கியதோடு பல நல் உள்ளம் சார்ந்த அன்பர்களை எம்மோடு இணைத்த ஒரு பெருந்தகையாளர் ஆவார். கடமையே கண்ணாக இருந்து தான் ஆற்றிய வைத்தியப் பணிக்கு பெருமை சேர்த்த அவரை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை **"ஞான பண்டித சேவா சுரபி"** என்னும் விருது அளித்து அவரைக் கௌரவித்தது ஒரு பெரும் பேறாகவே கருத வேண்டியுள்ளது.



அதேபோன்று ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிதோறும் இடம்பெற்ற வாராந்த நிகழ்வினை தொய்வில்லாமல் நடைபெறுவதற்கும் முன்னின்று உழைத்த பெருமகனார் ஆவார்.

கடந்த 15 வருடங்களாக ஆச்சிரமத்தினால் நடாத்திக்கொண்டிருந்த இலவச வைத்திய சேவைக்கு அமரர் அவர்கள் தான் ஆற்றிய வைத்தியப் பணிக்கு பெருமை சேர்த்ததோடு தான் சார்ந்த சமூகப் பணிகளின் வளர்ச்சிக்கு ஆற்றிய சேவை என்றும் மறக்க முடியாதது.

அவரது ஆத்மா சாந்தி அடைய சந்நிதியானை வேண்டுதல் செய்வதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*~சந்நிதியான் ஆச்சிரமம்~*

*பேசிய பிறகு வருந்துவதைவிட பேசுவதற்கு முன் யோசிப்பது நன்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க காலத்தில் சிவன்

– ***செல்வி லோ. அலக்சியா*** அவர்கள் –

இந்திய தமிழ் மக்களுடைய சமய மரபிலும் சமுதாய நிலையிலும் முக்கியம்பெற்ற காலமாக சங்ககாலம் கி.பி. 1-3 நூற்றாண்டுகளை உள்ளடக்கியதாக அமைகின்றது. இக் காலத்தில் காதலும், வீரமும் உன்னதமான நிலையினைப் பெற்றிருந்தாலும், அக்கால மக்களுடைய வாழ்க்கையில் சமயமும் உன்னதமான நிலையினை அடைந்திருக்கின்றது என்பதனை அக்காலத்தில் எழுந்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களின் மூலம் அறியலாம்.

சங்ககால நில வழிபாட்டில் சிவன் இடம்பெறவில்லை ஆயினும் இக்காலத்தில் சிவ வழிபாடு செல்வாக்குப் பெற்றுள்ளது. அதாவது இக்கால இலக்கியங்களில் சிவன் என்கிற சொல்லை பிரயோகப்படுத்தாமல் அதற்கு வேறு சொற் பிரயோகங்களினை பயன்படுத்தி வழிபட்டு வந்துள்ளனர் என்பதனை பின்வருமாறு அறியலாம். தொல்காப்பியத்தில் வரும் வேந்தன் எனும் பதம் சிவனை விளிப்பதாகக் காணப்படுகின்றது. மேலும் தென்முகக் கடவுள் என்கின்ற நாமம் தொல்காப்பியம் குறிப்பிடும் வேந்தனுக்கு மேலாய் சிந்துவெளியில் வழிபட்ட சிவனைக் குறிப்பதாக அமைகின்றது. கலித்தொகையில் ஆதிரை என்ற விண்மீனின் பெயர் கொண்டு அழைக்கப்படுவதை "அரும்பெறல் ஆதிரையான்...." எனும் அடியின் மூலம் அறியலாம். "நீலமேனி வாழிலை பாகத்து ஒருவன் இருந்தாள் நிழற் கீழ் மூவகை யுலகமும் முகிழ்ந்தன முறையே" உமையுடன் உறைபவன் என்கிற கருத்தமைவை "உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்" எனும் சங்கச் செய்யுள் மூலம் அறியலாம். மேலும் ஆலமர் கடவுள், ஆனேற்றுக் கொடியுடையான், ஈர்ஞ்சடை அந்தணன், தாழ்சடைப் பெரியான், முக்கட்செல்வர், அணிச்சியோன், பிறவாயாக்கை பெரியோன், ஏற்று ஊர்தியன், கறைமிடற்றண்ணல், புங்கமூர்பவன் எனப் பலவாறாக சங்ககாலத்தில் சிவன் வலம் வந்துள்ளார் என்பதனை,

"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமேனி மிடற்றொருவன் போல...."

(ஔவையார்)

"பணி இயர் அத்தை நின்குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர் வலர் செயற்கே"

(சிறுபாணாற்றுப்படை)

என்ற பாடலடிகள்மூலம் அறியலாம்.

மேலும் சிவன் முழுமுதற் கடவுளாக உலகம் அனைத்தும் தோன்றுவதற்கு முதற் காரணமான ஐம்பூதங்களினை இயக்கி அவற்றுடன் தானும் ஆடல் புரிகின்றான் என்பதனை,

"நீரும் நிலனும் தீயும் வளியும்
மாகவிசும்பொடு ஐந்துடன் இயற்றிய
மழுவான் நெடியோன்...."

(மதுரைக் காஞ்சி) குறிப்பிடுகின்றது.

*எண்ணங்களைத் தூய்மைப்படுத்துங்கள், உலகம் உங்கள் எண்ணங்களை வணங்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்மூலம் சிவனின் வியாபகத் தன்மையினை அறியலாம்.

"பேரிசை நவிர மேஎ யுறையுங்
காரியுண்டிக் கடவுள்" (மலைபடுகடாம்)

அதாவது நஞ்சை உணவாகவும் நவிரத்தை உறைவிடமாகவும் உடைய வனைக் குறிப்பிடுகின்றது. மேலும் கடவுள் என்ற சொல் பன்முறை சுட்டப்பட்டுக் காணப்பட்டாலும் அது ஒருவனே என்பதனை

"அவ்வவை மேயவேறு பெயரோய்
எச்சயினோயும் நீயே நின் ஆர்வலர்...."(பரிபாடல்)

இச் செய்யுள் சான்று பகர்கின்றது.

யாவற்றுக்கும் மகுடமாய் தொல்காப்பியத்தில் இடம்பெறும் கந்தழி என்னும் எண்ணக்கரு பற்றுதலின்றி அருவமாகி தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருளைக் குறிக்கின்றது.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு...." (திருக்குறள்) குறிப்பிடுகின்றது.

இங்கு சார்போ சார்பற்றோ இல்லாதவன் பதி, சரியான சார்பு உணராதலால் பற்றுப்பெற்ற உயிர் பசு, தவறான சார்பும் பற்றுமாகிய தளை பாசம். இவ்வாறு முப்பொருளின் இயல்பும் இருப்பும் கந்தழி என்கிற சொல்வழிப் பெறுகையாகும்.

சங்ககால சமயநிலையில் சக்தியும் சிவமும் இணைந்த நிலையாகவும், சிவனும் திருமாலும் இணைந்த பொருளாகவும் நினைத்து போற்றும் தன்மையினை,

"வெருவரு கடுந்திறல் இருபெரும் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம் போல" (அகநானூறு) குறிப்பிடுகின்றது.

சங்ககாலப் புலவர்களுள் ஒருவரான பெருந்தேவனார் புறநானூற்றுப் பாடலில் கடவுள் பற்றிய சிந்தனைகள் பொதிந்து காணப்படுகின்றது. அதாவது சிவனைச் சுட்டும் நாமங்கள், தோற்றப்பொலிவு என்பனவற்றை,

"கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பின தாரும் கொன்றை
ஊர்தி வால்வெள்ளேறே! சிறந்த...." (புறநானூறு)

சிறப்பாக விளங்குகின்றது.

திருமுருகாற்றுப்படை வெற்றிக்களத்திலே உயர்த்திய இடபக் கொடியை அவன் கொண்டிருக்கிறான் எனவும் உடம்பின் ஒரு பாகத்தில் உமையாள் உறைகிறாள் எனவும் திண்ணிய தோள்களை உடையவன் எனவும் போற்றப்படுகின்றான். இதனை

"வலம்வயின் உயரிய பலர்புகழ் வெள்ளேறு திணிதோல்
உமையமர்ந்து விளங்கு இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன்..." விளங்குகின்றது.

கலித்தொகை சங்ககாலத்திலே புராண இதிகாசக் கதைகள் செல்வாக்குப் பெற்றுள் ளதை கூறுகின்றது. அதாவது சிவனது கால் பெருவிரலுள் அழுந்தி வருந்திய இராவணன் வரலாறு முப்புரம் எரித்த வரலாறு, அவனது நெற்றிக்கண் பற்றியும் போன்ற புராணக் கதை கள் செல்வாக்குப் பெற்றுள்ளன. இம் முப்புரம் எரித்த செய்தியானது அமரரைக் காப்பாற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்க்கு வாழ்வு அளிக்கும் பொருட்டாக அவன் முப்புரத்தை அழித்தான். இந்த முப்புரம் இடம்விட்டு இடம்பெயரும் பேரரணாக இருந்தது. இதனை இயங்கு எழில் என்கின்றது கலித்தொகை.

"தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல் சாய அமரர் வந்து இரத்தலின்..." (கலித்தொகை)

என விளக்கியுள்ளது.

மேலும் சிவனுக்கு திருவாதிரை நாள் சிறப்புடையதாகும். சிவனுக்கு விழாக்கள் எடுத்தல் பற்றி பரிபாடலின் 11ஆம் பாடல் எடுத்துக் காட்டுகின்றது. மேலும் சங்ககாலத்தில் சிவனுக்கு கோயில் இருந்ததாக.

"பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்...." என்கின்றது சிலப்பதிகாரம்.

எனவே சங்ககாலத்தில் சிவன் என்ற நாமம் இடம்பெறவில்லையாயினும் சிவனின் உருவ அடையாளப் பொலிவுகள், அற்புதச் செயல்கள், ஏனைய நாமங்களினூடாக சிவன் அக்காலத்தில் வழிபடப்பட்டு வந்துள்ளார் என்று கூறலாம். மேலும் சங்க காலத்தில் காணப்பட்ட இச் சிவ வழிபாடுகள் சைவசித்தாந்தம் முழுமை பெறுவதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது எனலாம்.

## குடும்ப அமைதியே ஞானத்திற்கு வழி

நாம் ஆன்மீக வாழ்வு நடத்த முயல்கிறோம். மற்றவர்கள் அவரவர் வழியில் நடப்பார்கள். நம் குடும்பத்திலேயே கூட அத்தகையவர்கள் இருப்பார்கள். மற்றவர்களின் வழியால் நம் ஆன்மீக வாழ்வு பாதிக்கப்படக்கூடாது. அவ்விதமாக - எல்லோருக்கும் ஒத்ததாக நம் வாழ்வு முறையை அமைத்துக்கொள்ள வேண்டும். அதே சமயத்தில் நம் வாழ்வு ஆன்மீக வாழ்வாக இருக்க வேண்டும்

மனவளக் கலையை நான் வகுத்தபோது, குடும்பத்திலிருந்து அமைதி தொடங்கி, சமுதாய விரிவாக அது அமைய வேண்டும் என்ற நோக்கத்தோடு திட்டமிட்டுத்தான் அதனை வகுத்தேன்.

உலக சமாதானம் வேண்டுமானால் முதலில் அதற்கு மனித சமுதாயத்தில் அமைதி வந்தாக வேண்டும். தன்னிலை விளக்கத்தின் மூலம் தான் அந்த அமைதி வரமுடியும். தன்னிலை விளக்கத்தை நீங்கள் பெற்றுள்ளீர்கள். அதனைப் பெற்றுவிட்டால் மட்டுமே அமைதி வந்துவிடாது. தன்னிலை விளக்கம் என்ற விளக்கின் வெளிச்சத்தில் உங்கள் வாழும் முறையைச் சோதித்துக்கொள்ள வேண்டும். அவ்வெளிச்சத்தில் உங்கள் வாழ்க்கையைத் திட்டமிட்டு நடத்த வேண்டும்.

உங்கள் குடும்பத்தில் அமைதி இருக்கிறதா? பிணக்கிருக்கிறதா? என்று ஆராயுங்கள். எல்லோரது வாழ்க்கையிலும் பிணக்குத்தான் மலிந்திருக்கிறது. பிணக்கானது சிலர் வாழ்க்கையில் சிறிதாயிருக்கலாம். வேறு சிலரது வாழ்க்கையில் பெரிதாய் இருக்கலாம். ஆகவே பிணக்கில்லாத வாழ்க்கையை எவன் அமைத்து அதன்படி வாழ்கிறானோ அவன்தான் ஞானி. ஒருவர் பெற்ற ஞானத்தைப் பரிசோதிக்கக் கருவி ஒன்று இருக்குமானால் அது அவரது குடும்ப அமைதிதான்.

*~வேதாத்திரி மகரிஷி~*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் சுவாமிகளும் ஈழத்து திருப்புகழ் திருத்தலங்களும்

– திரு த. செல்வசோதி அவர்கள் –

தமிழின் பக்தியிலக்கிய மரபில் தனித்துவமான ஆளுமையாக விளங்குபவர் அருணகிரி நாதர். அவர் தமிழ் இலக்கிய வரலாற்றில் விஜய நகர நாயக்கர் எனக் குறிப்பிடப்பெறும் காலப்பகுதியில் வாழ்ந்தவர். அவர் பாடிய திருப்புகழ் ஒன்றில் வரும்

உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராசன்
உளமும் ஆட வாழ்தேவர் பெருமாளே.

எனும் தொடரில் பிரபுடதேவராசன் எனும் அரசன் குறிப்பிடப்பெறுகிறான். அவன் திருவண்ணாமலையைத் தளமாகக் கொண்டு ஆட்சி செய்தவன் என்றும் அவனது காலம் கி.பி. 1450க்கு முன்பின்னானது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். எனவே அருணகிரிநாதர் 15ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் வாழ்ந்தவர் எனலாம். அருணகிரி நாதர் பற்றிய மரபு வழிக் கதைகள் அவரோடு பாரதம் பாடிய வில்லிபுத்தூரரையும் தொடர்பு படுத்திப் பேசுகின்றமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. நவீன காலத்திற்கு முந்திய அருளா ளர்கள், தமிழ்ப்புலவர்கள் பெரும்பாலரது வரலாற்றைப் போலவே அருணகிரிநாதரின் வரலாறும் தெளிவான நிலையிலே கூறக் கூடியதாக இல்லை. எனினும் அவற்றை சுருக்கமாக குறிப்பிடுவோம்.

அருணகிரிநாதர் திருவண்ணாமலை யிலே முத்தம்மை என்னும் கணிகைக்கு மகனாக அவதரித்தார். இளமைப் பருவத் திலே கல்வியில் நாட்டம் அற்றவராய், சிற்றின் பத்துறையில் முறை தவறி வாழ்ந்தார். அத னால் வறுமைக்கும் குட்டரோகத்திற்கும் ஆளானார். தாயின் இறப்பிற்குப் பின் சகோதரி யின் தயவிலேயே வாழ்ந்த அவர் தன் தேவைக்கு பணம் தருமாறு தமக்கையை வற்புறுத்தினார். இதனைத் தாங்கமுடியாத தமக்கை இவரைச் சுடத்தக்க வார்த்தைகளால் பேசவேண்டியேற்பட்டது. இவ்வார்த்தைகளால் தனது தாழ்நிலையினை உணர்ந்து மனம் நொந்தவராய் வாழ்க்கையில் வெறுப்புற்று தற்கொலை செய்துகொள்ளும் நோக்கில் திரு வண்ணாமலைத் திருத்தல வடகோபுரத்து உச்சியில் ஏறி கீழே குதித்தார். அவரைத் தாங்கிக்கொண்ட முருகப்பெருமான் இவருக்கு காட்சி கொடுத்து "ஸ்பரிச தீட்சை" அருளி அருட்பாடல்களைப் பாடுவதற்கு "முத்தைத் தரு" என முதலடியையும் கொடுத்தருளினார். அருணகிரிநாதர் அன்று முதல் பல தலங் களிற்கும் யாத்திரை செய்து முருகப் பெருமான்மீது அருட்பாடல்களைப் பாடியருளி உள்ளார். அப்பாடல்களின் தொகுதியே திருப் புகழ் எனப்படுவது. இவை தவிர கந்தரநுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, திருவகுப்பு, வேல்விருத்தம், மயில் விருத்தம், திருவெழு கூற்றிருக்கை என்பவற்றையும் அருளியுள்ளார். இவற்றில் அருணகிரிநாதரின் முதன்மை அடை யாளமாக விளங்குபவை திருப்புகழ் பாக்களே ஆகும்.

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் பாடியருளிய திருத்தாளச்சதி, வருமொழித் திருவிராகம் முதலான மறைக்கவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரிநாதருக்கு ஆதர்ச இலக்கியங்களாக அமைந்தன. புகரியர்கோன் ஆகிய சம்பந்தர் போல தாமும் இசைத்திறம் வாய்ந்த பாடல்களை - அமிர்தகவிகளை பாடுவதற்கு வேண்டிய ஆற்றலை அருளும்படி அவர் இறைவனிடம் வேண்டுகிறார்.

புமியதனிற் பிரபுவான புகலியில்வித் தகர்போல
அமிர்தகவித் தொடையாட அடிமைதனக் கருள்வாயே.

அருணகிரிநாதர் சம்பந்தரை முருகப் பெருமானின் அவதாரமாகவே கண்டார் என்பது மனங்கொள்ளத்தக்கது. முத்தமிழ்களில் ஒன்றான இசைத்தமிழ் மரபின் உச்சங்களுள் ஒன்றாக அருணகிரிநாதரின் திருப்புகழ் நிச்சயம் அமையப்பெறும். அதுபோலவே தமிழின் பக்தி இலக்கிய மரபிலும் அமையப்பெறும். சைவதோத்திர மரபில் முதன்மை வாய்ந்தவை என்று கருதப்பட்ட அருட்பாடல்கள் சோழ மன்னரான இராஜ இராஜசோழன் காலப் பகுதியில் நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டு அவையே சைவத்திருமுறை என்று தீர்மானிக்கப்பட்டன. அதனால் திருமுறை தொகுப்பிற்குப்பின் எழுந்த அருட்பாடல்களிற்கு அவை எவ்வளவுதான் உன்னதமானவையாக அமைந்த போதிலும் திருமுறை என்ற தகுதி கிடைக்கப்பெறவில்லை. சைவ பாரம்பரியத்தில் திருமுறைத் தொகுதியில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்பவற்றை பஞ்சபுராணம் எனக்கொண்டு வழிபாடுகளின் போது அவற்றை ஓதும் மரபு நிலைபெற்றுவிட்டது. பஞ்சபுராணத்தோடு ஆறாவதாக திருப்புகழையும் ஓதும் மரபும் கூடவே நிலைபெற்றுவிட்டது. இவை யாவும் அருணகிரிநாதரின் திருப்புகழின் சமூக வன்மையை எடுத்துக்காட்டுகின்றன.

தமிழ்நாட்டு சமய வரலாற்றில் முருக வழிபாடுகள், யாத்திரைகள், வழிபாட்டு மரபுகள் தொன்மை வாய்ந்தவை. அதுபோலவே இலங்கையிலும் முருகவழிபாடு தொன்மை வாய்ந்தது. அதற்கான வலுவான சான்றாக யாத்திரைத் திருத்தலமான கதிர்காமம் அமைந்துள்ளது.

அசோகச் சக்கரவர்த்தியின் மகள் சங்கமித்தையால் இலங்கைக்கு புனித வெள்ளரசுக்கிளை கொண்டுவரப்பட்டு அநுராதபுரத்தில் நாட்டப்பட்ட வேளையில் கதிர்காமத்து பிரபுக்களும் அவ்விழாவில் பங்குபற்றியதாகவும் அதேவேளை கதிர்காமத்திலும் அவ் வெள்ளரசின் கிளையொன்று நாட்டப்பெற்றது என்றும் “மகாவம்சம்” கூறுகிறது. இக்காலம் கி.மு. 250இற்கும் 210இற்கும் இடைப்பட்டதாகும். எல்லாள மன்னனை வெற்றிகொள்வதற்கு அருள்புரிந்தால் கதிர்காமக் கோயிலை தான் கட்டுவிப்பதாக துட்டகைமுனு மன்னன் நேர்த்தி வைத்ததாகவும் வெற்றியின் பின்னர் நேர்த்திக்கடனை நிறைவேற்றியதாகவும் “கந்த உபாத” எனும் சகோதர மொழி நூல் குறிப்பிடுகிறது. துட்டகைமுனுவின் காலம் கி.மு. 161-137 இந்தக் காலகட்டங்களிற்கு முந்திய தொன்மை வாய்ந்தது கதிர்காமம் என்பதற்கு இந்த ஆலயத்தின் புராதன எளிமையான அமைப்பும் புனரமைப்பு எனும் பெயரில் அழியாத புராதனங்களும் அங்கு நிலவும் பூர்வீகத் தன்மை வாய்ந்த வழிபாட்டு முறைகளும் சான்றாக அமைகின்றன. இலங்கையின் தொன்மைக் குடியினராகிய சிங்களவர், தமிழர் ஆகிய இருசாராருக்குமே அவன் குல தெய்வமாக விளங்குகிறான். சிங்கள மக்கள் முருகனை அவனது பெயராலன்றி தலத்தின் பெயராலேயே “கதரகம தெய்யோ” என்றே

*நீ பட்ட துன்பத்தைவிட, அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகிறார்கள். அவன் எங்கிருந்தாலும் அவர்களிற்கு அவன் "கதரகம தெய்யோவே"

மலைக்கப் புறமேவி மாதுறு வனமே சென்றருட் போற்றிருவாழி மோதிர
மளித்துற் றவர்மேல் மனோகரமளித்துக் கதிர்காம மேவிய பெருமாளே.

என சீதாபிராட்டியைத் தேடிவந்த வாயுபுத்திரனான அனுமன் சீதாபிராட்டியிடம் மோதிரம் அளித்தபின் கதிர்காமத்தை தரிசித்துச் சென்றதையும் அருணகிரிநாதர் பக்தியோடு தனது திருப்புகழில் பாடுகிறார்.

பல்லவராட்சிக் காலப்பகுதியில் வாழ்ந்து தமிழ்நாட்டுத் திருத்தலங்களிற்கும் யாத்திரை செய்து திருப்பதிகம் பாடியருளிய தேவார முதலிகள் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் மீது அங்கிருந்தவாறே பாடிப்பரவினார்கள்.

அருணகிரிநாதரும் தமிழ்நாட்டின் திருத்தலங்கள் பலவற்றிற்கும் யாத்திரை செய்து திருப்புகழ் பாடியுள்ளார். அதுமட்டுமன்றி ஈழத்து கதிர்காமக் கந்தனின் பெருமையை உணர்ந்த வராக அத்தலத்தின் மேலும் பல திருப்புகழ்கள் பாடியுள்ளார். அவர் தேவார முதலிகள்போல் அங்கிருந்தவாறே பாடவில்லை. நேரடியாகவே கதிர்காமத்திற்கு யாத்திரை மேற்கொண்டு திருப்புகழ் பாடியுள்ளார். இந்தவகையிலும் கதிர்காமம் யாத்திரைத் தலமாக போற்றப்படுகிறது. கதிர்காம யாத்திரையின்போது வழியில் தரிசித்த கந்தவனம், யாழ்ப்பாணயன் பட்டினம் (நல்லூர்) திருகோணமலை என்பவற்றின்மீதும் திருப்புகழ்கள் பாடியுள்ளார்.

கந்தவனத் திருப்புகழில்,

பிணமெனும்படி பேய்நீ ராகிய
உணவை உண்டுடை சோர்கோ மாளிகள் கடல்ஞாலத்.

இங்கே இப்பிரதேசத்தில் காணப்பட்ட இயற்கை வளங்களைக் குறிப்பிட்டதுடன்

அருள்புரிந்த பிரானால் மாபதி
பரவு கந்த சுவாமீ கானகம் அதின்மேவும்

கந்தசுவாமி கானகம் என்ற பெயரில் தமிழ்நாட்டில் வேறு தலங்கள் இல்லை. எனவே கந்தவனமே கந்தசுவாமீ கானகம் என்று குறிப்பிடுவது எனலாம்.

"பொலிகண்டியிற் புக்கனன்
சமிவனம் கொண்டருள் சாமி"

என ஈழ மண்டல சதகத்தில் குறிப்பிடப்படுகின்றது. சமிவனம் என்பது வன்னிமர வனம். அந்த வகையிலும் கந்தசுவாமீ கானகம்- வனம் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. கந்தவனம் இலங்கையில் ஐரோப்பியராட்சி ஏற்படுவதற்கு முந்திய தொன்மை வாய்ந்தது. சோழர் காலத்திற்குரியதாகக் கருதப்படும் "பழையவர்" எனும் விக்கிரகம் மூலமூர்த்தியாக அமைவதற்கு முன்னர் நல்லூர், செல்வச்சந்நிதியைப் போல "செவ்வேள்" (வேல்) மூலஸ்தானத்தில் போர்த்துக்கீசர் காலத்திற்கு முன்பு பிரதிஷ்டை செய்யப்பட்டு காணப்பட்டது. "பழையவர்" எனும் விக்கிரகம் சோழப் பேரரசு காலத்தில் தென்இந்திய சிற்ப முனிவரால் வடிக்கப்பட்டது. இது வன்னியரசர் ஆட்சிக் காலத்தில் சிறப்புற்று விளங்கிய முல்லைத்தீவு குமாரபுரம் முருகனாலயத்தில் இவ் விக்கிரகம் வழிபாட்டில் இருந்தது. இக்கோயிலை போர்த்துக்கீசர் இடித்தபோது இந்த விக்கிரகம் கடல்மார்க்கமாக கந்தவனம்

*எதிர்க்கத் துணிவில்லாதவன் வெற்றியை எதிர்பார்க்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்படுகிறது. மேலும் குமாரபுரம் முருகன் ஆலயத்தின் ஆதீனகர்த்தாவாகவும் பிரதம குருவாகவும் இருந்து கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணிப் பிள்ளையார் அலய பிரதமகுரு வாகவும் பணியாற்றிய அமரர் ப. சச்சிதானந் தக் குருக்கள் கந்தவன ஆலய மகோற்சவ காலப்பகுதியில் வருகை தந்து "என்னுடைய முருகன்" எனக் கூறி "பழையவர்"ற்கு பூசை செய்தது மனங்கொள்ளத்தக்கது.

அருணகிரிநாதர் நல்லூரினை "யாழ்ப் பாணயன் பட்டினம்" என்றே குறிப்பிடுகிறார்.

ஏற்போர் தாம்வந் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வாழும் பொற்பரபை நெடுமதில்
யாழ்ப்பா ணாயன் பட்டின மருவிய பெருமாளே.

பொன்னொளி வீசும் நீண்டமதில் சூழ்ந்துள்ள யாழ்ப்பாணயன் பட்டினத்தில் வீற்றிருக்கும் பெருமாளே எனப் பாடியுள்ளார். நல்லூர் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக விளங்கியது. முற்காலத்தில் யாழ்ப்பாணயன் பட்டினம் என்றே வழங்கியது. விஜய நகர காலத்தில் (1435) லக்கண்ண தண்டநாயக்கன் என்னும் படைத்தளபதி மதுரையில் நாட்டிய வெற்றித்தம்பத்தில் யாழ்ப்பாணயன் பட்டினமும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒல்லாந்தர் ஆவணங்களிலும் யாழ்ப்பாணயன் பட்டினம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தவகையில் அருணகிரிநாதர் ஈழத்திற்கு யாத்திரை மேற்கொண்டது உறுதிப்படுத்தப்படுகிறது.

திருக்கொ ணாமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் களிப்பாடு பூதியில் வருவோனே.

எனக் குறிப்பிட்டுப் பாடுகிறார். திருகோணமலையில் அங்குள்ள சிவனையன்றி முருகப் பெருமானையே பாடியுள்ளார்.

தமிழகத்தில் உள்ள சிவாலயங்களில் சிவனையன்றி அங்கு எழுந்தருளியுள்ள முருகப் பெருமானையே அவர் பாடினார். தன்னுடைய அவதாரஸ்தலமாகிய திருவண்ணாமலையிலும் அவர் பாடியது அண்ணாமலை அப்பரை அல்ல.

அடலருணைத் திருக்கோபுரத்து ஏய்ந்த வாயிலுக்கு வடஅருகிற்
சென்று அவர் கண்டு கொண்டது களிற்றுக்கிளைய களிற்றினையே.

அங்கு பரிவார மூர்த்தியாக, துவார மூர்த்தியாக விளங்கிய முருகப்பெருமானையே பாடியுள்ளார்.

தேவாரத் திருப்பதிகங்கள் சிவபர மானவை. திருப்புகழ் பாக்கள் குகபரமானவை. (சில விதிவிலக்காக கணபதியைப் பாடுவன) கதிர்காமக் கந்தன்மீது முப்பத்தொரு திருப் புகழ்களும், திருகோணமலைக்கு இரண்டும் கந்தவனம், நல்லூர்மீது தலா ஒன்றுமாக முப்பத்தைந்து பாடியுள்ளார். கதிர்காமத் தின்மீது மேலான திருப்புகழ் பாடியமையால் கதிர்காமத் தல தரிசனத்தையே பிரதான நோக்கமாகக் கொண்டு ஈழ யாத்திரை மேற் கொண்டுள்ளார் என்பதை உணர்த்துகிறது.

திருப்புகழ் இன்பம் சித்தத்தில் தித் திக்கும் தேன் ஆகும். அருணகிரிநாதர் பாடிய 16000 திருப்புகழ்களில் கறையான் பசியாற தற்போது எஞ்சியுள்ளவை 1311 ஆகும். இந் நிலையில் வாக்குத்திறமும் அதனால் அவ ருக்கு வந்தெய்திய பெரும்புகழும் சமகாலத் தில் வாழ்ந்த புலவர்களிற்கு அவர்மேல் காழ்ப்பினை ஏற்படுத்தின. வில்லிபுத்தூரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலான அத்தகு புலவர்களை அவர் வாதில் வென்றடக்கினார். பிரபுடதேவராச னுக்கு ஏற்பட்ட நோய் ஒன்றினை தீர்க்கும் நோக்கில் பாரிசாத மலரினை தேவலோகத் தினின்றும் கொண்டுவரும் பொருட்டு அருண கிரிநாதர் தன் உடலை திருவண்ணாமலைக் கோயிற் கோபுரத்திற் கிடத்தி இறந்த கிளி ஒன்றின் உடம்பிற்புகுந்து தேவலோகம் சென்ற வேளை சம்பந்தாண்டான் எனும் புலவன், அரசனிடம் "பாரிசாதமலரினைக் கொண்டுவர முடியாத அவமானத்தில் அருணகிரிநாதர் தற் கொலை செய்துகொண்டார். பூதவுடல் கோயிற் கோபுரத்திற்கிடப்பது தீட்டு உடனே அதனை அகற்றி ஈமக்கிரியைகளைச் செய்யவேண் டும் என்றுகூற அதனை நம்பிய அரசன் ஈமக் கிரியைகளைச் செய்து அருணகிரிநாதரின் உடலை எரியூட்டி விட்டான். இப் புலவரது வஞ்சகச் செயலால் அருணகிரிநாதரின் உடல் எரியுண்ண நேர்ந்தது. கிளி உருவில் பாரிசாத மலரோடு தேவலோகத்திலிருந்து திரும்பிய அருணகிரிநாதர் தன் உடலைக் காணாத வராய் கிளியுருவிலேயே தலயாத்திரை மேற் கொண்டு அருட்பாடல்களைப் பாடினார்.

கிளியுருவிலே திருத்தணிகை திரு முருகனது திருக்கரத்தில் வாசம் செய்கிறார். இவ்வாறு திருப்புகழ் பாக்களைப் பாடிய அருணகிரிநாதர் ஆனிமாத மூலநட்சத்திர தினத்தன்று முத்திப்பேற்றினை அடைந்தார்.

---

பிள்ளைகளே! உங்கள் பெற்றோரின் தூய அன்பின் காரணமாக அவர்கள் உழைப்பில் உண்டு வளர்ந்த உங்களுக்கு எப்படிப்பட்ட அருமையான ஒரு உடல் கிடைத்திருக்கிறது. உங்களைப் பெறுவதற்கு அவர்கள் எவ்வளவு தவம் செய்திருப்பார்கள். உங்களுடைய அறியாப் பருவத்தில் உங்களை எப்படிப் பேணிக் காத்திருப்பார்கள். உங்கள் உடல் நலமாக இருக்கவேண்டுமென்று அவர்கள் எத்தனை கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனைகள் செய்திருப்பார்கள். இப்படியெல்லாம் பேணப்பட்ட உங்களது உடல் அற்புதமான ஒன்று என்று இன்னமுமா உங்களுக்குப் புரியவில்லை? இப்படிப்பட்ட உடலை புகை என்றும், போதை என்றும் சீரழிப்பது எவ்வளவு தவறான செயல்? எனவே உங்களது உடல் ஒரு அற்புதம் என்பதை மனதார நீங்கள் நம்புங்கள். பின்னர் அதன் சக்தியை அமோகமாகப் பெருக்குவதற்குரிய முயற்சிகளில் ஈடுபடுங்கள். சத்தான காய்கறி வகைகளை உண்ணுங்கள். உடற்பயிற்சி செய்யுங்கள். எப்போதும் புன்னகையுடன் இருக்கப் பழகுங்கள். இவ்வாறெல்லாம் இருந்தால் உங்கள் உடலானது எப்பொழுதுமே ஆக்க சக்தியைத்தான் வெளிப்படுத்தும். திறந்த மனதுடன் இருங்கள். மனதைச் சந்தோசமாகவும் அமைதியாகவும் இருக்கச்சொல்லித் தட்டிக்கொடுங்கள்.

மனதைச் சந்தோசமாகவும் அமைதியாகவும் வைத்திருப்பது எப்படி? உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்தோசமாகவும் அமைதியாகவும் இருந்த தருணம் (நல்ல செயல்களினால் மட்டும்) எது என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். எதுவாக இருப்பினும் அந்த நாளை நினைத்துக்கொள்ளுங்கள். அந்த நாளில் நீங்கள் அனுபவித்த மகிழ்ச்சியும், அமைதியும் பசுமரத்தாணி போல் இன்றைக்கும் உங்கள் நெஞ்சில் பதிந்திருக்கும். மறுபடியும் அந்தத் தருணத்தில் வாழ்வதற்கு முயற்சி செய்யுங்கள். அப்படிச் செய்யச் செய்ய உங்கள் மனம் நீங்கள் நினைக்கும் போதெல்லாம் சந்தோச மாகவும், அமைதியாகவும் மாறுவதை உணர்வீர்கள்.

*சோதனையில்தான் ஒளிந்திருக்கிறது சாதனை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணனைக் கரையேற்றிய பாஞ்சாலி

– திரு ப. மகேந்திரதாசன் அவர்கள் –

நாம் அயலூரில் சென்று ஈட்டிய பொருளை அங்கிருந்து வரும்போது கொண்டு வராமல் அங்கேயே வைத்துவிட்டு வருவோமா? அதுபோல் இவ்வுலகில் தேடிய பொருளை இங்கேயே வைத்துவிட்டுப் போவது அறிவுடைமை ஆகுமா? பொருள் உடன் வரவேண்டு மாயின் என்ன செய்ய வேண்டும்? பொருளை வறியவர்க்கு ஈந்து தர்மம் புரிந்து அருளாக மாற்றிவிட வேண்டும்.

"எங்ஙாயினும் வரும் ஏற்பவர்க்கிட்டது" என்கிறார் அருணகிரிநாதர். இங்கு நாம் ஏற்பவர்க்கு இடுவோமானால் மாண்டு எந்த உலகத்துக்குச் சென்றாலும் மீண்டு எந்தத் தேசத்தில் பிறந்தாலும் செய்த புண்ணியத்தின் பயன் வரும்.

வறியவர்களுக்கு வழங்கி அவர்கள் இன்புறுவதைக் கண்டு நாம் இன்புற வேண்டும். ஈந்துவக்கும் இன்பம் என்பார் திருவள்ளுவர். அங்ஙனம் "ஈந்தவரே வாழ்ந்தவர் ஈயாதார் மாய்ந்தவரே" ஆவார். "ஈயா மனிதரை ஏன் படைத்தாய் கச்சியே கம்பனே" என்று இறை வனையே கேட்கின்றார் திருவெண்காடர். இரப்பவர்க்கு ஈயாமல் கரப்பவர்களுக்காகவே கடுநரகங்களை இறைவன் உண்டாக்கினானாம்.

ஈயார்க்கு இம்மையில் இகழும் மறுமையில் பாவமும் எய்தும் ஈபவர்க்கருளும் வைத்தார் என்றதனால் தர்மம் செய்வோர் இம்மையில் புகழும் மறுமையில் புண்ணியமும் எய்துவர். வறியவர்களுக்கு இரக்கமுடன் ஈந்தால் அது மீண்டும் ஒன்றுக்கு நூறாக பெருகி நம்பால் வருகிறது.

பாண்டவர் வாழ்ந்த இந்திரப்பிரஸ்தத்துக்கு ஒரு சமயம் கண்ணபிரான் வந்திருந்தார். அரண்மனையிலுள்ள தாமரைத் தடாகத்தில் பாண்டவர்களும் கண்ணபிரானும் நீராடி நீந்தி விளையாடினார்கள். திரௌபதி, ருக்மணி, சத்தியபாமா, சுபத்திரை முதலியோர் கரையில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

உச்சி நேரத்தில் எல்லோரும் கரையேறினார்கள். எல்லோரையும் பிறவிக் கடலினின் றும் கரையேற்றுகின்ற கண்ணன் மட்டும் கரையேறவில்லை. கழுத்தளவு தண்ணீரிலேயே முழுகியிருந்தார். தர்மர் "கண்ணா உணவு நேரம் வந்துவிட்டது. பெண்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள் கரையேறு" என்றார். அவர் கரையேறவில்லை. வீமன் முதலியோரும் வேண்டினார்கள். அவர் அசைவற்று இருந்தார். காரணம் ஒருவருக்கும் விளங்கவில்லை. திரௌபதியின் நுண்ணிய அறிவால் காரணம் விளங்கியது. பளீர் என்று தன் புடவையின் முந்தானையின் சாணளவு கிழித்து சுருட்டிக் கண்ணபிரானிடம் வீசி எறிந்தாள்.

கண்ணபிரானுக்குக் கௌபீனம் தவறியது. பெண்கள் கரையில் இருந்ததனால் சொல்லவோ வெளிப்படவோ இயலாமல் தவித்தார். ஏன்?

*வண்ணங்களில் இல்லை வாழ்க்கை. உன் எண்ணங்களில் உள்ளது அழகிய வாழ்க்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு சில பெண்களைத் தண்ணீரில் ஆடையின்றி அல்லல்பட விடுத்தார். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். அதனால் அவர் இப்போது ஆடையின்றி அல்லல்பட்டார். அந்தக் குறிப்பறிந்து திரௌபதி சாண் புடைவை கொடுத்து உதவினாள். அதனை உடுத்து பகவான் கரையேறினார். திரௌபதி தொழுதாள். அம்மா இன்று சாண் புடைவை தந்து என் மானம் காப்பாற்றினாய். சமயம் வந்தால் உனக்குக் கோடிப் புடைவை தந்து மானம் காப்பாற்றுவேன் என்று அருள் புரிந்தார்.

ஆகவே நாம் செய்த தர்மம் ஒன்றுக்கு ஆயிரமாகவும் இலட்சமாகவும் கோடியாகவும் செய்த பாத்திரத்துக்குத் தக்கபடி நம்மால் வரும்.

## அன்னப்பணியே அறப்பணியாய்.....



அமரர் சபாபதிப்பிள்ளை ஞானசுந்தரம் அவர்களது மறைவானது ஒரு பேரிழப்பாகவே கருத வேண்டியுள்ளது. பலவித பணிகளிலும் அமரர் ஈடுபட்டிருந்தாலும் அவர் சிவபூமி அன்னதான தொண்டர் சபையின் பிரதான ஒருங்கமைப்பாளராக இருந்து கதிர்காமத்திலும் திருக்கேதீஸ்வரத்திலும் ஆற்றிய அன்னதானச் செயற்பாடுதான் அவரை மேன்மை அடையச் செய்த பணி என்றே கூறலாம்.

கதிர்காம உற்சவ காலங்களில் சந்நிதியான் ஆச்சிரம ஏற்பாட்டில் கந்தனைத் தரிசிக்கச் செல்லும் அடியார் கூட்டத்தை இன்முகத்துடன் வரவேற்று அவர்களுக்குரிய உணவுச் செயற்பாட்டை முன்நின்று நடத்துவதோடு அவரின் கீழ் பணியாற்றும் தொண்டர்களையும் ஒன்றினைத்து இப்பணியைச் செய்வதில் மனநிறைவு அடைகின்ற அன்பர்.

எவ்வளவோ அடியார்களின் பசிப்பிணியைப் போக்குவதில் தன்னிறைவு கண்ட அமரரின் ஆன்மா பேரின்பப் பெருவாழ்வு அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வமெல்லாம் தருவாய்!

அலை கடல் ஓரத்தில்
ஆலயம் கொண்ட குமரா!, தொண்டைமான்
ஆற்றங் கரையினிலே
அமர்ந்திட்ட வேல் முருகா!
நிலையில்லா வாழ்வில் என்றும்
நீயே கதி! எங்கள்
நெஞ்சுக்கு அமைதி தரும்
நின் சந்நிதிப் பதி!

கனிவோடு உனைப் பாட
வரங்களெலாம் தருவாய்!
கருதித் துதித்திடவே
மயில் ஏறி நீ வருவாய்!
இனியவனே என்றும்
எம் உயிராய் இருப்பாய்!
இரங்கி வந்தே எமக்குக்
கருணை மழை பொழிவாய்!

எண்ணத்தில் நிறைந்திடும்
வண்ண மயில் வாகனனே!
ஏழு சுரம் எடுத்துப்
பாடிடுவோம் உனையே!
கண்களுக்குக் காட்சி தந்து
ஆட்சி செய்வாயே!
"கந்தா" என்றழைக்க
வந்தருள் புரிவாயே!

பரவிடும் அடியவர்தம்
பவவினை போக்கிடுவாய்!
பைந் தமிழ்க் கடவுளென
வந்தெமைக் காத்திடுவாய்!
சிரந் தாழ்த்தி நினை வணங்க
சிந்தை கனிந்தே அருள்வாய்!
செல்வச் சந்நிதியில் அமர்ந்து
செல்வமெல்லாம் தருவாய்!

– கி. குலசேகரன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: QD/146/NEWS/2021

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org